486

மாக்கியவெல்லியின்

ஆட்சிக் கலை

486
2-56

23

W
N56
108386

ஆட்சிக் கலை

2

மாக்கியவெல்லி

★

கொடுமுடி ராஜகோபாலன்

★

ஸ்டார் பிரசுரம்

திருவல்லிக்கேணி
சென்னை-5

மேலக்கோபுரத் தெரு
மதுரை

விலை ரூ. 2 0 0

108386

உள்ளுறை

★

1.	மாக்கியவெல்லியும் - அவரது காலமும்	1
2.	அரசியலைப்பற்றி மாக்கியவெல்லி	23
3.	அரசியலும், மனிதனது இயற்கை சுபாவமும்	27
4.	மாக்கியவெல்லியின் சரித்திர ஆராய்ச்சி	31
5.	மாக்கியவெல்லியின் ராஜாங்கம்	37
6.	ராஜாங்கத்தின் அடிப்படைக் கடமைகளும், ஆள்வோரின் சிரமங்களும்	48
7.	சுதந்திரமும் உரிமைகளும்	54
8.	ராஜாங்கமும் குடிகளும்	59
9.	ராஜாங்கத்திற்கும் மதம் ஒழுக்கத்திற்கும் உள்ள உறவுகள்	66
10.	ராஜாங்கத்தின் குறிக்கோள்	77
11.	ராஜாங்கமும் யுத்தமும்	87
12.	மாக்கியவெல்லியைக் கண்டிப்பவர் ஆதரிப்பவரின் சில முக்கிய வாதங்கள்	89
13.	மாக்கியவெல்லியின் வாழ்க்கையைப் பற்றிய சில விபரங்கள்	106
14.	கௌடில்யரும் மாக்கியவெல்லியும்	111
	Books of Referance	143

STAR PUBLICATIONS

TRIPLICANE, MADRAS-5 ★ WEST TOWER STREET, MADURAI

Printed at the National Art Press, Teynampet, Madras-18

முன்னுரை

"**ஆட்சிக்கலை**" என்ற நூல் வரிசையில், இந்த "**மாக்கிய வெல்லியின் ஆட்சிக் கலை**" என்னுல் எழுதப் பட்ட இரண்டாவது நூலாகும்.

மாக்கியவெல்லியின் ஆட்சிக் கலை முழுக்க முழுக்க வலிமைத் தத்துவ அடிப்படையிலேயே எழுந்திருக் கின்றது என்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டும்.

ஜூலியஸ் சீஸர், போர்ஜியா, போன்ற அதிகார வெறி பிடித்தவர்கள், போரினில் வெற்றி கொள்கிற வர்கள்—இவர்களுடைய சந்ததிகள்—இவர்களே சிறந்த 'இன'த்தவர்கள் என்றும், இவர்களிடையேதான் பூரா அரசியல் அதிகாரமும் குவிந்திருக்க வேண்டும் என்றும், இவர்களே ஆளப் பிறந்தவர்கள் என்றும் கூறுகிறவர் களில் மாக்கிய வெல்லிதான், அரசியல் ஞான வளர்ச்சி யின் சரித்திரப் போக்கில் முக்கியமான இடம் பெற்றிருக் கிருர். "பாஸிஸம்" என்று தற்காலம் அழைக்கப்படும் ராஜீய சித்தாந்தத்திற்கு, 16-வது நூற்ருண்டில் ஒருவித வடிவம் தந்தவர் இவர்தான்! மாக்கியவெல்லியின் "**அரசன்**" என்ற நூலையும், மாக்கியவெல்லியின் வாழ்க்கையைப்பற்றிய **வில்லாரியின்** விரிவான நூலையும் (இரண்டு பாகங்கள்) முக்கியமாகப் படித்தே இந்த நூல் எழுதப்பட்டது. வில்லாரியின் விரிவான நூல் மூலமே, மாக்கிய வெல்லியின் "உரையாடல்"—"யுத்தக் கலை"—"தங்கக் கழுதை" போன்ற நூல்களைப் பற்றியும், அந்

நூல்கள் மூலம் மாக்கிய வெல்லியின் பல கருத்துக்களைப் பற்றியும் நான் தெரிந்துகொள்ள முடிந்தது. கூடியமட்டிலும், நான், மாக்கிய வெல்லியின் அரசியல் உணர்ச்சி—துடிப்பு—ஆட்சிக் கலையைப்பற்றிய விவரங்களை, தர முயற்சித்திருக்கிறேன். சிந்தனை செய்யாமல் மனிதனுல் இருக்கவே முடியாது. முடிவற்ற வாழ்வெனும் யாத்திரையிலே மனிதனுடைய சிந்தனைகள் அலை அலையாக எழுந்து கரைமீது அடித்த வண்ணமே இருக்கின்றன. இந்தப் 'புரட்சி'கள் மூலமே மனித சமுதாயத்தில் பல பல மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டே யிருக்கின்றன. என்னுடைய இந்த வரிசை நூல்கள், மனிதனுடைய சிந்தனைப் புரட்சியைத் தூண்டுவதற்கு உதவி செய்ய வேண்டும் என்பதே என் அவா.

இந்த நூலையும் அழகாக வெளியிட்டிருக்கும் ஸ்டார் பிரசுரத்தாருக்கு என் நன்றி உரித்தாகுக.

இந்த நூலை எழுதுவதற்கு ஊக்கமளித்து உதவியவர்களான ஸ்ரீமான்கள் H. வெங்கிடாசலம், பேராசிரியர் R. S. தேசிகன், M.A., P. சீனிவாஸன், A. ஸ்ரீனிவாஸன், B.A.,B.L. முதலிய என் அன்பார்ந்த நண்பர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சென்னை
24 - 1 - 1956 } **கொடுமுடி ராஜகோபாலன்**

முதல் அத்தியாயம்

மாக்கியவெல்லியும்—அவரது காலமும்

(கி. பி. 1469—1527)

மாக்கியவெல்லி, பூரணமாக அவருடைய காலத்தால் உருவாக்கப்பட்ட ராஜதந்திர மேதையாவார். அவருடைய ராஜீயக் கொள்கைகள் அக்காலத்திய நிகழ்ச்சிகளால் அமைந்து வளர்ந்தவை. அவைகளின் உண்மையை உணர வேண்டுமாயின், அக்காலத்திய ராஜீய சமூக நிலைமைகளையும், மக்களின் மனோபாவங்களைப் பற்றியும்-சிறப்பாக பரிபக்குவம் பற்றியும் அறிந்து கொள்வது அவசியமாகிறது.

இத்தாலிய நாட்டின் **பிளாரன்ஸ்** நகரத்தில் மாக்கியவெல்லி பிறந்தார். அவர் இளமை உணர்ச்சியுள்ள பருவத்தை எட்டியபோது, அந் நகரம் ஒரு **நகரக் குடியரசாகத்** (City Republic) திகழ்ந்தது.

பிளாரன்ஸ் அக்காலத்தில் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கிய போதிலும், தற்காப்பு ரீதியில் ராணுவ பலம் போதாதென்றே கூறவேண்டும்; நகரின் மதில்களுக்கு அப்பாலிருந்த அதன் ராஜ்யம் ஜனத்தொகை குறைவுள்ளதாகவும் இருந்தது. சுதேசிகளைக் கொண்ட சொந்த ராணுவம் இல்லாததால், அந்நகரக் குடியரசாட்சி நிர்வாகம், 'கூலிப் படை'களைப் பயன்படுத்திக்கொள்ள நேர்ந்தது.

பிளாரன்ஸின் நிலைமையை நன்கு அறியவேண்டுமாயின், அதன் இயற்கை அமைப்பையும், சுற்றுப் பிரதேசங்களைப் பற்றியும் நன்ருகப் புரிந்துகொள்ள வேண்டும். **மிலான், வெனிஸ், போப்பாண்டவரின் ராஜ்யங்களும்** இவை

களுக்குத் தெற்கேயுள்ள **நேபிள்ஸு**ம் இதர ராஜ்யங்களும் பிளாரன்ஸைச் சுற்றி வளைத்திருந்தன. போப்பாண்டவரின் ராஜ்யங்கள் பிளாரன்ஸை எப்பொழுதுமே பயமுறுத்திக் கொண்டிருந்தன. அவருடைய ராஜ்யங்கள் பல சிற்றரசு களின் சேர்க்கையாகும். ஒவ்வொரு சிற்றரசும் மக்களை வாட்டி வதைத்து எதேச்சாதிகாரம் செலுத்தி வந்தது. போப்பாண்டவரின் ராஜ்யங்களுக்கு நடுநாயகமாக **ரோம்** நகரம் காட்சியளித்தது. பெருகிக் கொண்டிருந்த போப்பின் அதிகாரமும் ராஜ்யமும் ஒரு புறமும், அதிக பலமும், பணமும் படைத்த வெனிஸ் குடியரசு மற்றொரு புறமுமாக இருந்து கொண்டு பிளாரன்சின் சுதந்திரத்தைப் பறிக்க முயன்றன. இந்த ராஜ்யங்களால் தன் நாட்டிற்கு எப் போது ஆபத்து ஏற்படுமோ என்று அஞ்சிக் கிடந்தது பிளாரன்ஸ். வெனிஸ் பிளாரன்சுக்கு வடகிழக்கில் இருந்தது. நல்ல அரசியல் திட்டத்தின் காரணமாக வெனிஸ் குடியரசு அதிக பலத்தையும், ஊக்கத்தையும் பெற்றிருந்த தாகச் சரித்திர ஆசிரியர்கள் எழுதி இருக்கிறுர்கள். பிளா ரன்சுக்கு வடமேற்கே இருந்த மிலான், உள்நாட்டுக் குழப் பங்களாலும் கட்சி வெறிகளாலும் பிளவுபட்டு பலமற்றுப் போய்விட்டது.

இவ்விதம், போப்பாண்டவரின் ஏகபோக ஆதிக்க வெறியாலும், வெனிஸ் குடியரசின் செல்வாக்கு-பலத்தா லும், மிலானின் பலவீனத்தாலும் பிளாரன்சின் நிலைமை ஸ்திரமற்றதாக இருந்தது.

பிளாரன்ஸை அப்போது ஆண்டவர் **சோடர்னியாவார்.** அவரது தலைமையில் அங்கே குடியாட்சி முறையே நிலவி யது. அந்தக் காலத்தில்தான் மாக்கியவெல்லி, சோடர்னி யின் கீழ், குடியரசின் ராஜாங்கக் காரியதரிசி பதவியை வகித்தார். அவர் தம் தலைவனுக்கு மிகவும் உண்மையாக உழைத்தார். ஆயினும் பிளாரன்ஸ் குடியரசில் அமைதி

இல்லை; மக்களின் அன்பை சோடர்னியால் பெற இயல வில்லை. **மெடிஸியின்** (பிரபல பிரபு வம்சம்) வம்சத்தின ரும் அவர்களுடைய கட்சியினரும் சோடர்னியைக் கவிழ்த்து குடியரசாட்சியைக் கைப்பற்றப் பலவிதமான-வெறுக்கத் தக்க தந்திரங்களையும் கையாண்டனர். சோடர்னியின் உறுதியில்லாத நிர்வாகம் எந்தவிதமான நெருக்கடிகளையும் சமாளிக்கக் கூடிய வலிமை பெற்றதாக இருக்கவில்லை. விசுவாசமுள்ள ஊழியராகப் பணியாற்றிய மாக்கியவெல்லி தம் குடியரசின் நலன்களைக் காப்பாற்ற அரும்பாடு பட்டார். ஆயினும் கி. பி. 1512-ல் **ஆரகன்** நாட்டு **ஜூலியஸ் பெர்னுண்டோ** வெனிஸ் நகராட்சியினர்,-இவர்களின் தலைமையில் போப்பாண்டவரால் நிறுவப்பட்ட "**புனிதக் கூட்டணி**" யிடம் ("Holy League") பிளாரன்ஸ் சரணடைய நேர்ந்தது. இதன் விளைவாக சோடர்னி நாட்டை விட்டு ஓடிவிட்டார். பிளாரன்ஸில் மெடிஸி குடும்பத்தினரின் பிரபுத்வ ஆட்சி தொடங்கிற்று. அக்குடும்பத்தினரே அந்நகரில் முடிசூடா மன்னர்களாக இருந்தனர். அக் குடும்பத்திலேயே ஒப்புயர்வற்றவராகத் திகழ்ந்தவரே **லாரன்ஸோ-டி-மெடிஸி** என்பவர் என்பதை வாசகர்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அவருடைய ஜீவிய காலத்தில் பிளாரன்ஸில் அமைதி நிலவியது. லாரன்ஸோ திடசித்தமுள்ளவராகவும், நுண்ணறிவு பெற்றவராகவும் இருந்தார். அவர், வல்லரசுகளை பரஸ்பரம் மோதிக் கொள்ளவிட்டு, பயமற்றதொரு சமபல நிலைமையைத் தோற்றுவித்தார். அதன் காரணமாக இத்தாலி முழுவதும் சமாதானம் நிலவிற்று என்றே சொல்லலாம். அவருக்குப் பிறகு வந்த அவரது புதல்வர் **பியர்ரோ**, நேபிள்சுடன் சேர்ந்துகொண்டு மிலானுக்கு எதிராகச் சதி செய்தார். அதன் பயனுக, பிளாரன்ஸுக்கும் மிலானுக்கும் இருந்து வந்த நேச உறவு முறிந்து போயிற்று. பியர்ரோவின் புத்தி கெட்ட செயல்களால் மீண்டும் பிளாரன்சுக்குக் கஷ்டங்கள் ஏற்பட்டன.

சோடர்னியின் வீழ்ச்சிக்குப் பிறகு, மாக்கியவெல்லி எல்லாவற்றையும் இழந்து நின்றூர். ஆயினும் அவருடைய சிந்தனை வேகமும் ஆர்வமும் தணியவில்லை. அவருடைய ராஜீயச் சிந்தனைக்கு விருவிருப்பளித்து எண்ணங்களை உறுதிப்படுத்தும் போக்கில் ஐரோப்பிய நாடுகளின் ராஜீய நிலைமைகள் வெகு வேகமாக மாறத் தொடங்கின. புதிய ராஜீய அபிலாஷைகளும் அபிப்பிராயங்களும் தோன்றலாயின. மத்தியகால அமைப்புகள் கொஞ்சங் கொஞ்சமாகத் தவிடு பொடியாகி வந்தன. அரசாங்கங்கள் மதபீட ஆதிக்கத்திற்கு அடங்கி நடக்க மறுத்தன. மதச் சார்பற்ற எதேச்சாதிகாரம் எங்கினும் எழுந்தது. போப்பாண்டவரின் ஆதிக்க அதிகாரம் தனது சர்வ வியாபக உலக வல்லரசுத் தன்மையை இழந்தது. பல சிறிய நாடுகளும் தேசிய சமுதாயமாக ஐக்யப்படுத்தப்பட்டன. **ஸ்பெயின்** தேசத்து **பெர்டினண்டும், இஸபெல்லாவும்** மணம் செய்து கொண்டதால் **ஆரகனும், காஸ்டைலும்** இணைக்கப்பட்டன. **இங்கிலாந்தில், "ரோஜாப்பூ" யுத்தம்** முடிவுற்று, **7-வது ஹென்றியின் 'டியூடர்'** ('Tudor') எதேச்சாதிகார ஆட்சி எழுந்தது. **ஜெர்மனியில், மாக்ஸ்மில்லன் சக்கரவர்த்தி** ஜெர்மானியச் சிற்றரசுகளை அடக்கித் தன் கீழ் கொண்டு வரவும் இத்தாலியை அடிமைப்படுத்தவும் பெருமுயற்சி செய்தார். ஆயினும், அவருடைய முயற்சி பலன் அளிக்கவில்லை. பலம் பொருந்திய சரியான படை பலம் அவரிடம் இல்லாததுவே அதற்குக் காரணம். **பிரான்ஸ்** மற்ற நாடுகளுக்கெல்லாம் ஒரு முக்கியமான, தெளிவான உதாரண நாடாக விளங்கியது. **"நூற்றூண்டுப் போர்"** முடிந்ததன் விளைவாக பிரான்ஸ் ஆங்கில ஆக்கிரமிப்பிலிருந்து நிரந்தரமான விடுதலையைப் பெற்றது. **எட்டாவது சார்லஸ் பிரிட்டனியின்** இளவரசியை மணந்து கொண்டுவிட்டார். அதனல், பிரான்ஸுக்கு அந்த ராஜ்யப் பகுதியும் கிடைத்தது. இவ்வாருகப், பிரஞ்சு அரசன் தனது ராஜ்யத்தை வலிமைப்படுத்திக்

கொள்ள ஆரம்பித்தான். நன்கு பயிற்சி பெற்ற பிரான்சின் படைப்பலம் எந்த எதிரியையும் முறியடிக்க வல்லதாக இருந்தது. மேற் கூறப்பட்ட எல்லா எதேச்சாதிகார அரசு களும் **படைத் திறனையே** நம்பியிருந்தன. அந்தக் காலம் ரத்தம் சிந்தும் காலமாகவும், பலாட்டியர்களின் சகாப்த மாகவுமிருந்தது. அக்காலத்தில் வாழ்ந்த மாக்கியவெல்லி, படைத்திறனின் இணையற்ற முக்கியத்துவத்தை நுட்பமாகக் கவனித்தார். ராஜ்யத்தை அமைப்பதற்கும், அது நீடித்து வாழ்வதற்கும் படைப் பலம் இன்றியமையாதது என்பதை அவர் நன்ருக உணர்ந்தார். "எல்லா நாடுகளுக்கும், புதிய-பழைய-இடைப்பட்டதான காலங்களுக்கும் சிறந்த சட்டங் களும், படை வலிமையும் அடிப்படையாக இருக்க வேண்டி யவை. சட்டங்களைப் படை வலிமையின்றிப் பெறமுடியாது. ஆனுல் படை வலிமையைப் படைத்துவிட்டால் சிறந்த சட்டங்களைப் பெற்றுவிட முடியும். எனவே, படைவலிமை யைப் பற்றி மட்டிலுமே நான் பேசுவேன்" என்று தமது "**அரசன்**" (Prince) என்ற நூலில் அவர் குறிப்பிட்டிருக் கிருர்.

ஸ்பெயின், இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற சகல நாடுகளும் படைப்பல அடிப்படையில் அநேக சிறிய நாடு களைத் தங்கள் தங்கள் நாடுகளுடன் இணைத்துக்கொண்டும் ராஜ்ய விஸ்தரிப்பில் ஈடுபட்டுக் கொண்டும் பலமடைந்து கொண்டிருந்த காலத்தில், மாக்கியவெல்லியின் இத்தாலிய தேசம் மட்டும் வலிமை இழந்தும், ஒரே ராஜ்யமாக ஐக்கிய மாக இயலாமலுமிருந்தது. முடியாட்சி முறையின் கீழிருந்த நேபிள்ஸ், ரோம ஆதீனத்தின் ராஜ்யம், கோமகனின் (Duke) ஆட்சியின் கீழ் மிலான், பலமற்ற குடியாட்சியின் கீழ் பிளாரன்ஸ், வலிவுள்ள குடியாட்சியின்கீழ் வெனிஸ்— இவ்விதம் ஐந்து ராஜ்யங்களாக இத்தாலி பிரிந்தும், சக்தி இழந்தும் இருந்தது. பண்டைக்காலத்து நகர ராஜ்யங் களைப்போல இந்த ஐந்து ராஜ்யங்களும் '**தனிக்காட்டு**'

அரசுகளாக இருந்தன. இவைகள் ஏறக்குறைய சம பல முள்ளவைகளாக இருந்தன. இவைகளுக்கிடையே பரஸ்பரம் பொருமைகளும், கடுமையான துவேஷங்களும் மண்டிக் கிடந்தன. இவைகள் அடிக்கடி தங்களுக்குள் சண்டை போட்டுக் கொண்டன. இவைகளில் சில, தங்கள் உதவிக்காக பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற வெளி நாடுகளின் உதவியையும் நாடின. இவ்விதமாக இத்தாலிய உள்நாட்டு உதவிக்கென அழைக்கப்பட்ட வெளிநாடுகளின் 'சகாக்கள்' முடிவில் இத்தாலியை அடிமைப்படுத்திவிட்ட 'எஜமானர்' களாக மாறிவிட்டார்கள். அந்நியர்களின் குறுக்கீடுகளால் தமது தாயகம் சீர்குலைந்து நிற்பதைக் கண்ணுற்ற மாக்கியவெல்லியின் மனம் வெதும்பியது; உணர்ச்சி மேலிட்டவராய், இத்தாலி ஐக்யம் அடையவேண்டும் என்ற துடிப்பில் அவர் வீராவேசமாக எழுதுவது பின்வருமாறு :

"**மோஸஸின்** ஆற்றலைக் காட்ட, **இஸ்ரேலின்** மக்கள் **எகிப்து** நாட்டின் அடிமைகளாக வாழவேண்டும் என்பது போன்றிருக்கிறது நமது இத்தாலிய நிலைமை?......**ஹீப்ரூவை** விடக் கேவலமான அடிமைத்தனத்தில் நமது மக்கள் உழல்கிறார்கள்! **பாரசீகனை**விடக் கொடுமையாக அடக்கப்பட்டிருக்கிறார்கள்!......... எத்தீனியர்களைவிடப் படுமோசமாகப் பிளவுபட்டுக் காட்சியளிக்கிறார்கள். அந்தோ! இங்கே ஒழுங்குமுறையில்லையே! அடிபட்டு, கெடுக்கப்பட்டு, சின்னபின்னமாக நைந்து கிடக்கின்றதே நம்மை ஈன்ற நாடு!......இத்தகைய இத்தாலியை உய்விக்க ஒரு சுதந்திர வீரனின் தீரமும், தேச பக்தியுமே தேவை. அந்த வீரன் எப்போது வருவானோ!"

அடிமையுற்ற இத்தாலியின் **ஆல்ப்ஸ்** மலைக்கு அப்பாலுள்ள நாடுகள் இக்காலத்தில் தேசிய உணர்ச்சி கொண்ட முடியாட்சிக்குட்பட்டவையாக இருந்தன. ஒவ்வொரு நாடும் தன்தன் ராஜீய அந்தஸ்தைப்பற்றிப் பெருமையாக உணர்ந்

திருந்தது. தங்கள் விசேஷ அந்தஸ்து—சிறப்புக்களைப்பற்றி இங்கிலாந்து, ஸ்பெயின், ஜெர்மனி முதலிய நாடுகள் பெருமிதம் கொண்டிருந்தன; அவைகளை நிலை நாட்டிக் கொள்வதில் மிகவும் அக்கரை கொண்டிருந்தன. தேசீய உணர்ச்சி கொண்ட முடியாட்சி முறையே சிறந்ததென்றும், மதிப்பிற்குரிய ராஜாங்க முறையென்றும் இக்காலத்தில் பலரால் கருதப்பட்டது. இந்த ராஜரீக முறைமை ஒவ்வொரு தேசத்தின் மனத்தையும் கவர்ந்துகொண்டிருந்தபோது, இத்தாலி மட்டும், முன் கூறியபடி, ராஜரீகத் துறையில் சீர்கேடுற்றிருந்தது. பிரான்ஸ், ஜெர்மனி போன்ற நாடுகளில் இயங்கி வந்தது போன்ற தேசீய உணர்ச்சியுள்ள—ஒன்றுபட்ட ராஜாங்க முறைமை இத்தாலியிலும் ஏற்படவேண்டுமென்று, உன்னதமான தேசபக்தர் மாக்கியவெல்லி வாதித்தார். "ஒரு வலிமையுள்ள மன்னனே இத்தாலியின் இன்றைய அவசியத் தேவையாகும். அப்படிப் பட்டவன் முன் வந்துவிட்டால் போதும். இத்தாலியும் பலமுள்ள ஒரே நாடாகிவிடும். அத்துடன் அதன் பழைய அவமானங்கள் மறைந்துவிடும்" என்று தனது நம்பிக்கையை அவர் வெளியிடுகிறார். அக்காலத்தில் தன் நாட்டு நிலைமையை அவர் நன்குணர்ந்திருந்தார். மேலும், "அரசன்" என்ற தமது நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார் :

"உயிரொடுங்கி நிற்கும் நமது நாட்டைக்காண நெஞ்சு பொறுக்குதில்லையே! இந்த நிலைகெட்ட நாட்டிற்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்குக் கணக்கில்லையே!......லம்பார்டியில் அடிக்கப்படும் கொள்ளைகளுக்கும், நேபிள்ஸிலும் டஸ்கனியிலும் விதிக்கப்படும் தண்ட வரிகளுக்கும் முற்றுப் புள்ளி வைத்து, நீண்ட நாளாய்க் கவனிக்கப்படாமல் புறையோடிவிட்ட காயங்களின் வீக்கத்தையும், சீழையும் வடித்து, காயங்களை ஆற்றக்கூடிய மகான் எப்போது வருவாரோ என்று நமது நாடு ஏங்கித் தவம் கிடக்கிறது. அவர் யாரென்றறியக் காத்துக் கொண்டிருக்கிறது!" இத்

தாலியின் அவல நிலைமை அவர் மனத்தை எவ்வளவு வேதனைக்குள்ளாக்கி யிருக்கிறது!

தம்முடைய அருமைக் குடியரசு வீழ்ந்ததும் தம் தாயக மான இத்தாலிய நாடு சீர்குலைந்து போனதும் மாக்கியவெல்லி யின் மனத்தை எவ்வளவு தூரம் பாதித்தது என்பதை நாம் அறிந்துகொள்ள முடிகிறது. கொழுந்துவிட்டெரிந்து ஒளி வீசிக்கொண்டிருந்த அவருடைய மாசற்ற தேசபக்தி யும், அந்நிய ஆட்சியிலிருந்த தம் தாயகம் விடுபட்டாக வேண்டுமென்ற எண்ணத்துடிப்பும், விடுபட்டதும் தம் நாட்டை ஒரு குடைக்கீழ் ஐக்யப்படுத்தியாக வேண்டு மென்ற பேரவாவும் அவருடைய ராஜீய அபிலாஷைகளை உருவாக்கின. தமது "அரசன்" என்ற நூலில், தம் தாய கத்தை ஒன்று படுத்தி, பலமுள்ளதொரு நாடாக்கவல்ல சக்தியுள்ளவர் லாரன்ஸோ-டி-மெடிசிதான் என்று கூட அவர் குறிப்பிட்டிருக்கிறார். சோடர்னியின் வீழ்ச்சிக்குப் பிறகு அவருடைய பிளாரன்ஸ் நகராட்சியை நன்கு பரிபா லித்து வந்த லாரன்ஸோவின் திறமை அவரைக் கவர்ந்தது. லாரன்ஸோவின் திறமையான ஆட்சி நீடிக்கவில்லையென்ற லும், அவருடைய ஆட்சியில் மாக்கியவெல்லி ஒரு பதவியை யும் வகிக்காவிட்டாலும், லாரன்ஸோவின் உறுதியான ஆளும்திறமை, மாக்கியவெல்லியைப்பெரிதும் கவர்ந்ததோடு இத்தாலி முழுமைக்கும் அத்தகைய வலிமையுள்ள ஒருவ னின் சேவை அவசியமானதென்ற திடமான அபிப்பிராயத் தையும் மாக்கியவெல்லிக்கு ஊட்டியது.

தமது "அரசன்" என்ற நூலில், லாரன்ஸோவுக்கு நேரே அழைப்புவிடுவது போலவே சில சொற்கள் காணப் படுகின்றன. அவர் எழுதுவது பின்வருமாறு :

> "உமது சீலத்தாலும், மிகுந்த சம்பத்தாலும் சிறப் புற்று, கடவுளின் பூரண அருளைப் பெற்று, மதஸ்தாப னத்தால் (Church) பெரிதும் மதிக்கப்பட்ட, மாட்

சிமை தங்கிய, தங்களுடைய கீர்த்திவாய்ந்த குடும்பத்தாரைத் தவிர, இத்தாலியை விடுவிக்கும், ஒன்றுபடுத்தும் பாரத்தை, ஏற்கக்கூடிய வேறு எவரையும் நாங்கள் தற்போது காணவில்லை.''

இத்தாலிய தீபகற்பத்தின் மத்திய பாகத்தில் இருந்த போப்பாண்டவரின் ராஜ்யங்கள் அந் நாட்டின் சீரழிவுக்கும் பிளவுகளுக்கும் பெரிதும் காரணமாயிருந்தன என்பதை நாம் ஏற்கனவே அறிந்துகொண்டோம். அப்படியிருந்தும் போப்பாண்டவரின் ஆதிக்கவெறி சும்மா இருக்கவில்லை! மீண்டும் தங்களுடைய ஏகபோக ஆதிக்க அதிகாரத்தை நிலை நாட்டவே அந்த வெறி துள்ளி விளையாடியது! சாதாரண இகலோக மன்னர்களும் மிகவும் வெறுத்து இகழும்படியான அவ்வளவு தாழ்ந்த நிலைக்கு போப்புகளின் ஆதிக்கப் பேராசை வந்துவிட்டது. **நான்காவது சிக்ஸ்டஸ்** என்பவர் போப்புகளிலேயே மிகவும் கேவலமான துன்மார்க்கராயிருந்தார். **போப் 8-வது இன்னொஸெண்டும்** கிட்டத்தட்ட அதே அளவுக்குக் கெட்டவராக இருந்தார். **6-வது அலெக்ஸாண்டர்** என்பவரோ சுயநலமுள்ளவராகவும், உலக இன்பங்களில் மூழ்கித் திளைப்பவராகவும் இருந்தார். நேர்மையற்ற வழிகள் மூலம் தன் மகனுக்கு ஒரு ராஜ்யத்தை அமைத்துத்தர முயன்றார். வேசிலோலனுக இருந்த அவர், தன் வேசி வயிற்றுப் பிள்ளைகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்யவும் அரும்பாடு பட்டார். அவர் மகன் **சிஸேர் போர்ஜியா**தான் பெயர் பெற்ற போப்பாகும். ஈவு இரக்கமில்லாத பயங்கர மனிதர் அவர்; எவரையும் காட்டிக் கொடுத்துவிட்டுத் தனது காரியங்களைப் பூர்த்தி செய்து கொள்ளுவதில் அவர் சமர்த்தர்; அன்பு என்பதையே அறியாதவர். அவர் தனது சகோதரியின் கணவனைக்கூடக் கொல்லத் தயங்கவில்லை. இந்தக் கொலைகாரச் செயலை அவர், சிறிதும் கவலை இல்லாமலும் ஒரு பாபச் செயல் என்று கூடக் கருதாமலும், செய்தார்.

அடக்க முடியாத கட்டுக்கடங்காத ஆசையும், கோப வெறியும் படைத்த மனிதனுகவும், தன்னுடைய சூழ்ச்சிகளை நிறைவேற்றுவதில் மனிதர்களின் உயிர்களைத் தங்கு தடையின்றிப் பலியிடுவதைப்பற்றிக் கவலைப்படாதவராகவும் அவர் இருந்தார். பேராசையின் வாய்ப்பட்ட அவர், மனித தர்மத்தையோ, கடவுளின் விதிகளையோ சிறிதேனும் மதிக்கவில்லை. தன் அக்கிரம ஆணைக்குக் கட்டுப்பட மறுத்த **ரோமாக்னு**வின் கவர்னரான **ரெமிரோ**வை அவர் குரூரமாகக் கொலை செய்தார். பட்டப்பகலில் ரெமிரோவின் சடலம் நடுத்தெருவில் ரத்த வெள்ளத்தில் கிடக்குமாறு அவர் உத்தரவிட்டார்! ரோமாக்னுவில் கலகம் செய்த பிரபுக்களையெல்லாம் கொடுமையாக நசுக்கி அடக்கிவிட்டார். போப்புகளின் கீழ்த்தரமானநடத்தைகளை மாக்கியவெல்லி வெறுத்த போதிலும், ராஜ்ய பாரத்தை மிக வல்லமையுடனும், கண்டிப்புடனும் நடத்திய சிஸேர் போர்ஜியாவின் பேராற்றலும் மாக்கியவெல்லியைக் கவர்ந்தது. ஆளும் திறமைக்கு... ஆட்சிக்கலைக்கு சிஸேர் போர்ஜியா ஒரு எடுத்துக் காட்டான அரசன் என்று மாக்கியவெல்லி தமது "அரசன்" என்ற நூலில் புகழ்ச்சியுடன் குறிப்பிடத் தவறவில்லை.

இந்தப் போப்புகளின் கீழ்த்தரமான நடத்தைகளை **கூஸியார்டினி** (மாக்கியவெல்லியின் காலத்தில் வாழ்ந்த ஒரு மேதை) என்பவரும் வன்மையாகப் பின்வருமாறு கண்டித்திருக்கிறுர் :—

* **மார்ட்டின் லியூத**ரை நான் என்னைவிட அதிகமாக நேசிப்பேன். ஏனெனில், அவரும் அவரைப் பின்பற்றுவோரும் பாதிரிமார்களின் கொடுங்கோன்மையை அழித்துவிடுவார்கள் என்று நம்புகிறேன்......இதைவிடக் கேவலமாக ரோமன் 'அரண்மனை'யைப்பற்றி எழுத முடியாது.

---

* போப்பாதீனத்தின் ஆதிக்கத்தைத் தீவிரமாக எதிர்த்ததால் உயிர் நீத்தவர். இவரைப் பின்பற்றும் கிறிஸ்தவருக்கு 'பிராட்டஸ்டென்டுகள்' எனப் பெயர்.

அதைப்பற்றி எவ்வளவு மோசமாக எழுதினாலும் தகும். எல்லாவிதமான இழிவான நடத்தைகளுக்கும் அது உறைவிடம்; உலகத்தில் எவையெல்லாம் தீச்செயல்களோ, துன்மார்க்கமோ அவை அனைத்திற்கும் அந்த "அரண்மனை" ஒரு உதாரணம்!" **சாபைன்** என்றவர் எழுதும்போது இந்தப் போப்புகளை "தூர்த்தர்கள்; துன்மார்க்கர்கள்" என்று கூறுகிருர். இந்தப் போப்புகளின் துன்மார்க்க நெறியை மாக்கியவெல்லியும் வன்மையாகக் கண்டித்தார். போப்புகளின் தீய வாழ்வுதான், இத்தாலியின் பிளவுகளுக்குப் பெரிதும் காரணமாயிருந்தது என்று அவர் கண்டு கொண்டார்.

"மதஸ்தாபனந்தான் தனது நடத்தை மூலம் தேசம் பூராவும் ஒன்றுபடுவதைத் தடுக்கிறது" என்று "உரையாடல்" (Discourses) என்ற தமது நூலில் அவர் குறிப்பிட்டிருக்கிருர்.

தன்னுடைய "பூலோக சாம்ராஜ்ய" ஆதிக்கத்தை எதிர்க்கும் எந்தப் போக்கையும், எழுச்சியையும், போப்பாதிக்கம் சகிக்கவில்லை. அப்படிச் செய்வது, மத பீடத்தின் 'தெய்வீக'த் தன்மையை மறுப்பதாகும் என்று போப்புகள் கருதினர்கள். மத பீடத்தில் தோன்றிய இந்த அகங்காரப் போக்கால் மாக்கியவெல்லி போன்றவருக்கு மத வாதிகளின் பேரில் வெறுப்பு ஏற்பட்டது. நாளடைவில், மாக்கியவெல்லியின் வெறுப்பு உச்ச நிலையை எட்டியது. "இத்தாலியைப் பிரித்து வைத்து பலவீனப்படுத்தியதற்கு இந்த மத பீடமே முற்றிலும் பொறுப்பேற்க வேண்டும். இதை மக்கள் உணரவேண்டும் என்று மாக்கியவெல்லி மிக ஆத்திரமாகத் தமது "உரையாடலி"ல் குறிப்பிடுகிருர்.

இப்போதுதான் ஐரோப்பாவில் மறுமலர்ச்சியின் ஒளி வீசியது; அதன் உதயகானம் மக்கள் குரல்களின் மூலம் எழுந்தது; அதன் நறுமணம் மக்கள் வாழ்க்கையின் மீது

வீசத் தொடங்கிற்று. இந்த மறுமலர்ச்சி இத்தாலியை ஒரு புறம் உயர்த்தியது; மற்றொரு புறம் தாழ்த்தியது என்பது தெரிய வருகிறது. இவைகளை ஆராய்வோம்.

ராஜீயத் துறையில் இத்தாலி இன்னமும் பலவீனமாகவே இருந்தபோதிலும், அறிவு - கலைத் துறைகளில் அறிஞர்களின் ஒளி வீசும் மொழிகளால் அந்நாடு இந்த மறுமலர்ச்சிக் காலத்தில் பொலிவுற்றிருந்தது. மத பீடத்தின் ஆதிக்கத்திற்குப் புறம்பாக மதவாதிகளின் போலித் தனங்களை ஒடுக்கும் ரீதியில் அவைகளுக்கு எதிரான சமூக உணர்ச்சிகள் தலையெடுத்தன. மதமும்-ஆன்மீகமும் தனிப்பட்டோரின் நடவடிக்கைகளுக்கு மட்டிலுமே வழிகாட்டியாக இருக்கவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டது. ராஜீய ஒற்றுமைக்கும், நல்வாழ்விற்கும் கிறிஸ்துவ மதக் கோட்பாடுகள் தடையாகவும், ஏன், உபயோகமற்றவையாகவும் இருக்கின்றன என்ற தீவிர வாதமும் எழுந்தது. இதே காலத்தில் வாழ்ந்த மாக்கியவெல்லியின் நெஞ்சின் ஆழத்தையும் இந்த மறுமலர்ச்சி எண்ணமும், வாதமும் தொட்டுவிட்டன என்றே சொல்ல வேண்டும். மதம் அரசு மீது ஆணை செலுத்தக்கூடாது என்றும், அதற்கு உதவியாக அதன் உத்திரவிற்கும், கண் காணிப்பிற்கும் உட்பட்டே அது இயங்கவேண்டும் என்றும் அவரும் கருத ஆரம்பித்தார். மத ஆதிக்கத்திற்குட்படாத உறுதி மிக்கதொரு ராஜீயக் கொள்கையில் அவர் பற்றுதல் கொண்டார். "போப்புகளின் போலி போதனைகள் மக்களை ஆண்மையற்றவர்களாக மாற்றி விட்டன" என்று அவர் சீற்றம் கொண்டார். "ஆண்மையும், ஊக்கமுமே தலைசிறந்த ஒழுக்கங்கள்" என்று அவர் முழக்கஞ் செய்தார்.

இக்காலத்தில்தான் ஐரோப்பாவில் விஞ்ஞான அறிவு வளர்ச்சி ஏற்பட்டது என்று நாம் அறிகிறோம். விஞ்ஞான சாஸ்திரங்களைக் கற்பதும், அவை போதிக்கும் வழிகளில்

பரிசோதனை செய்வதும் பரவின. தொழிலும் வர்த்தகமும் பெருகின. அச்சு இயந்திரம் ஜெர்மனியில் கண்டு பிடிக்கப் பட்டது. புதிய புதிய நாடுகளைக் கண்டு பிடிக்கும் விடா முயற்சியில் பலர் இறங்கினர். **கொலம்பஸ்** அமெரிக்காவைக் கண்டு பிடித்தார். பற்பல நூதன நுணுக்க இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஜீவனுள்ள - இறவாத பண்டைய இலக்கியங்களை மக்கள் படிக்க ஆரம்பித்தனர். எங்கும் **லத்தீன்** மொழி பரவியது. ராஜ தந்திரமும், யுத்தக்கலையும் உருவாக்கப்பட்டன. காவியம், கவிதை, சிற்பம், சித்திரம், கட்டிட நிர்மாணம் என்பனவற்றில் மக்களின் சாதுர்யமும், மேதாவிலாசமும் அதிகரித்தன. **மைக்கேல் ஆஞ்சலோ, வியனுர்டோ, ப்ரூனல்லஸ்சி** போன்ற புகழ்மிக்க கலைஞர்களும், மேதைகளும் தோன்றினர். அவர்களை மக்கள் போற்றிப் புகழ்ந்தனர். எங்கினும் கலை ஆர்வம் ததும்பி நின்றது. இந்த மறுமலர்ச்சியின் வேகம் இத்தாலிய நாட்டினையும் கல்வி கேள்விகளிலும் கலைத்திறனிலும் இணையற்றதொரு தேசமாக்கி விட்டது என்றால் அது மிகையாகாது. "இந்த மறுமலர்ச்சியின் வேகம் இத்தாலியில், உயர்ந்த நாகரிகத் தோடு, தாழ்ந்த நடத்தைப் பிசகையும் சிருஷ்டித்து விட்டது" என்று **பெட்ரண்டு ரஸ்ஸல்** எழுதி இருக்கிறார்.

'அநாகரிகமான சமூக வாழ்க்கையை நாகரிகமான 'பண்பாடு' என்று இத்தாலிய மக்கள் கருதித் தலைதெறிக்க நீச வாழ்வினில் இறங்கி விளையாட ஆரம்பித்து விட்டார் கள்' என்று பல அறிஞர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். "கால வேகம் துரதிர்ஷ்டத்தையும் சிருஷ்டித்து விடுகிறது" என்று ரஸ்ஸல் கூறியிருப்பது போல, இத்தாலிய வாழ் வினில், மறுமலர்ச்சியின் வேகம், விபச்சாரத்தையும்கூட பெரிய நாகரிகமாக்கி விட்டது! காமவெறி பிடித்த வாலிப விட புருஷர்கள் நாகரிக சமுகத்தின் சிகரமாக மதிக்கப் பட்டனர்! எல்லாக் கலைகளிலும் இந்த விகார உணர்ச்சி தலையெடுத்தது! **பொக்காஷியோவின்** கதைகளும் **லாரன்ஸோ-**

டி-மெடிஸியின் காதற் கீதங்களும் மக்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப்பட்டன. அந்தக் கதைகளும், பாடல்களும் அக்காலத்தவரின் உணர்ச்சிகள், எண்ணங்கள், ஆசைகள், நடத்தைகள்-இவற்றை எடுத்துக் காட்டுகின்றன! மாக்கிய வெல்லியையும் இந்த உணர்ச்சிகள் பாதிக்கத்தான் செய்தன. அவர் எழுதியுள்ள நாடகங்கள் ("மந்தராவ் கோலே": "எக்லிஸியா") மிகவும் இழிந்த ஒழுக்கத்தையே எடுத்துக் காட்டுபவையாக அமைந்திருக்கின்றன! தம் தனி வாழ்க்கையில், மாக்கியவெல்லியும் தம் காலத்தவருக்கு மேம்பட்டவராக இருந்ததாகச் சொல்வதற்கில்லை! அவர் **பிரான்ஸிஸ்கோ விட்டோரி** என்ற தமது நண்பருக்கு எழுதியுள்ள கடிதங்கள் மூலம் அவருடைய காமவெறியைத் தெரிந்துகொள்ள முடிகிறது. விட்டோரிக்கு அவர் எழுதியுள்ள ஒரு கடிதத்தில் அவர் கூறுவதாவது:

"எல்லாவித அடக்கம்—நாணத்தையும் உதறித் தள்ளிவிட்டு, எவருடைய ஏச்சையும், பேச்சையும் பொருட்படுத்தாமல் இகபோக வாழ்வின்பத்திற்கு உங்களை அர்ப்பணம் செய்துகொள்ளுங்கள். நானும் அவ்வாறே செய்து வந்திருக்கிறேன்." அவர் சற்றும் தயங்காது தான் சலவையாளர் குலஸ்திரி ஒருத்தியிடம் காதல் கொண்டு, அவளுடைய வீட்டிற்கு அடிக்கடி போய்வருவதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிருர். விட்டோரியும் இந்த ஒழுக்கத்திற்கு மேம்பட்டவராக இருக்கவில்லை. மாக்கியவெல்லியைக்கூடப் பாதித்துவிட்ட அந்தக் காலத்தின் ஒழுக்கத்தரம் எவ்வளவு கீழானதாக இருந்திருக்க வேண்டும்!

மேலும் அக்காலத்தில் மக்களுக்கு எவ்வித பந்தோபஸ்தும் கிடையாது. ஒழுங்கீனமும், அராஜகமுமே நாட்டில் தலைவிரித்தாடின. மனிதனின் உயிருக்கும் உடமைக்கும் எவ்வித பாதுகாப்பும் கிடையாது. கலகங்களும், கொலைகளும், கொள்ளைகளும் தங்குதடையற்ற தினசரி நிகழ்ச்சிகளாகவே நடைபெற்றன.

இவைகளைச் சர்க்கார் ஒடுக்கவில்லை. "என் காலத்தில் **டைபர்** நதியில் நூற்றுக்கணக்கான சவங்கள் எறியப்பட்டதை நான் கண்டிருக்கிறேன். அவைகளைப்பற்றி யாதொரு கேள்வியும் எழவில்லை. இத்தகைய கொடிய செய்கைகளும் அராஜகமும் மக்களிடையே எவ்விதப் பரபரப்பையும் ஏற்படுத்தவில்லை. அவர்கள் இவ்விதமான பயங்கர வாழ்க்கையைப் பற்றிச் சற்றும் கவலைப்படாமல், மகிழ்ச்சியுடன் இருந்ததாகவே தெரிகிறது" என்று ரோமாபுரி மரவியாபாரி ஒருவர் கூறியதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அக்காலத்தை "விபச்சாரி புத்திரர்கள்-சந்தர்ப்ப வாதிகளின் காலம் என்று சரியானபடிதான் அழைக்கப்பட்டது" என்று **வில்லாரி** எழுதுகிறார். மிலான் நகரத்து **பிரான்ஸிஸ்கோ ஸ்போர்ஸா** என்பவரும், நேபிள்ஸ் நகரத்து ஆரகனைச் சேர்ந்த **பெர்டினண்டும்**, இன்னும் அனேக அரசர்களும், பிரபுக்களும் விபச்சாரி புத்திரர்களாக இருந்ததாலேயே வில்லாரி மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார். இவர்கள் எல்லோரும் எதேச்சாதிகார ஆட்டமே ஆடினார்கள் என்றே சொல்லவேண்டும். "நாட்டின் பலவீனத்தையும், பிளவுகளையும் பயன்படுத்திக் கொண்டு அதிகாரத்திற்கு வந்துவிட்ட கீழ்த்தர மக்கள்" என்று **ரஸ்ஸல்**, இவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். ஆயினும், இவர்களில் சிலர் மிகத் திறமையுடன் நாட்டை ஆண்டிருக்கிறார்கள். இவர்கள் நியாயம்—அநியாயங்களைப் பற்றியோ அல்லது விளைவுகளைப்பற்றியோ கவலைப்படவில்லை. இதனால்தான் இத்தகைய உறுதிமிக்க ஆட்சியாளர்களின் திறமையை மாக்கியவெல்லி போற்றினார் என்று கொள்ளவேண்டியிருக்கிறது. "விளைவுதான் செய்கையின் போக்கை நிரூபிக்கிறது" என்று மாக்கியவெல்லி உறுதியாக நம்பியதற்கு இதுவேதான் காரணமாக இருந்தது என்றும் கொள்ளவேண்டியிருக்கிறது. எனவே மறுமலர்ச்சியின் வேகம், இத்தாலியை அறிவு-கலைத்துறைகளில் உயர்த்தியது; ஒழுக்கத்தரத்தில் தாழ்த்தியது; ராஜீயத் துறையில்

ஐக்கியத்திற்கான உணர்ச்சியை மட்டும் ஊட்டியதேயொழிய, அதைச் சாதிக்க வல்ல புதுச் சக்தியைத் தோற்றுவிக்கவில்லை—இந்த உண்மைகளை நாம் மனத்திலிருத்திக் கொள்ள வேண்டும்.

இத்தாலியின் ராஜீய ஐக்கியத்திற்கு விரோதமாக இருந்த இன்னொரு காரணத்தையும் நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் ஆராய்வோம். அதன் அசாதாரணமான சேனையே அந்தக் காரணமாகும். சேனையில் எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லை. சிப்பாய்கள் அவிழ்த்துவிடப்பட்ட காளைகளைப் போலச் சுயேச்சையாகத் திரிந்தனர். பொருள் சம்பாதிக்க விருப்பமுள்ளவர்கள் எல்லாம் இந்தப் படையில் சேரலாம். ஆனால் இறுதிவரை ராணுவத்திலிருந்து சேவை செய்ய வேண்டுமென்ற **கட்டாயம்** அவர்களுக்கு இல்லை! இவ்வாறான பல படைகள் இத்தாலியின் பல ராஜ்யங்களிலும் இருந்தன. அதிகமான வருமானத்திற்காக ஒருவன் ஒரு படையைவிட்டு மற்றொரு படையில் சேரலாம். அந்தச் சேனைகள் எல்லாம் போரிடுவதை ஒரு **லாபமுள்ள வியாபாரமாகவே** கருதின. யார் அதிகமாகப் பணம் கொடுக்கிறாரோ அவர் பக்கமே அந்த சைன்யங்கள் சாயும்! யுத்த விதிகளையோ, கண்ணியத்தையோ அவை ஒரு பொழுதும் லட்சியம் செய்ததில்லை. அவைகள் சில சமயங்களில் தங்களைப் பயன்படுத்துகிறவருக்கே பெரும் நஷ்டத்தை விளைவிக்கும்; தங்கள் கூட்டாளிகளையே காட்டிக் கொடுத்துவிட்டு ஓடிவிடும்! யாருக்கும் சொந்தமில்லாத—எவருக்கும் கட்டுப்படாத ‘கூலிக்கு மாரடிக்கும்’ இந்த சைனியங்களை இத்தாலிய ராஜ்யங்கள் ஏற்றுக்கொண்டதன் விளைவாகப் பட்ட கஷ்டங்களும் அடைந்த நஷ்டங்களும் கொஞ்ச நஞ்சமல்ல! தம்முடைய நகரான பிளாரன்ஸே இப்படைகள் மூலம் பெரிதும் நஷ்டத்திற்கு ஆளாகியதை மாக்கியவெல்லியே கண்கூடாகக் கண்டிருக்கிறார். இந்தக் கூலிப் படைகளைக் கண்டனம்

செய்து, தமது "அரசன்" என்ற நூலில் பின் வருமாறு எழுதுகிருர்:

"இத்தகைய கூலிப்படைகள் ஒற்றுமை அற்றன வாயும், பேராசை பிடித்தனவாயும், அடங்கி நடக்காமலும், காட்டிக் கொடுப்பனவாயும், கடவுள் பக்தியற்றனவாயும், நம்பிக்கை மோசடி செய்வனவாயும் இருந்தன." இத்தாலிய ராஜ்யங்கள் இந்தப்படைகளை நம்பியதாலேயே நாசமுற்றன என்று அவர் எண்ணிஞர்.

"இந்தப் படைகளை நம்பியதாலேயே இத்தாலி அழிந்தது. இப்படைகள் ஒன்றேடொன்று மோதிக்கொள்ளும் போது பிரமாதமாகத் தோன்றின. ஆனுல் அயல் நாட்டுப் படைகள் வந்தவுடன் இவைகளின் 'சாயம்' வெளுத்துவிட்டது" என்று அவர் மேலும் எழுதுகிருர்.

பலமுள்ள ஒரு தேசீயப் படையை நிறுவ வேண்டுமென்று மாக்கியவெல்லி நினைத்தார். அதனுல் அவர், தமது "அரசன்" என்ற நூலில், அவ்வித, தேசீயப் படையின் முக்கியத்துவத்தைப் பற்றிப் பலமாக வாதிக்கிருர். அந்நியரின் ஆக்கிரமிப்பாலும், உள் நாட்டுப் பிளவுகளாலும் தன் சுதந்திரத்தை இழந்து நின்ற இத்தாலியை எப்படியாகிலும் விடுவித்தாக வேண்டுமென்று அவர் துடிதுடித்தார். அவ்வாறு தம்முடைய நாட்டை விடுவிக்க முன் வருபவருக்கு அவர் கூறும் புத்திமதியாவது :

"தேச விடுதலைக்குச் செய்யப்படும் எவ்வித முயற்சிக்கும் அடிப்படையாக—எல்லாவற்றிற்கும் முதன்மையாக வலிமையுள்ள தேசீயப் படையை நிறுவியாக வேண்டுவதேயாகும். ஏனெனில் கூலிப்படைகளிடமிருந்து நாம் தோல்வியையும், அவமானத்தையுமே கண்டோம். ஒரு கட்டுப்பாடான, நல்ல தேர்ச்சிபெற்ற தேச பக்தியுள்ள, தேசீயப் படையிடமே நாம் தீரத்தையும், நம்பிக்கையையும், எதிர்

பார்க்க முடியும். நாம், நமது ஆண்மையைக் கொண்டே இத்தாலியை விடுவிக்கவேண்டும். அந்தச் சக்தியைப் பெற வேண்டுமானால், நாம் உடனடியாக நமது தேசீயப்படையை அமைத்தாக வேண்டும்.”

அக்காலத்திய ராஜீய, சமூக நிலைமையின் மத்தியில் அவர் வாழ்ந்தார்! பண்டைய இலக்கியங்களை அவர் நன்றுக் கற்றிருந்தார். அதனால்தான் அவருடைய ராஜீய அபிப்பிராயங்கள் உருவாயின. பண்டைய இலக்கியங்களில் அவருக்கு அபாரமான பற்றுதலும், மதிப்பும் இருந்தன. ரோம ராஜ்யத்தின் சரித்திரத்திலிருந்து பல உதாரணங்களை எடுத்து, அவைகளை மேற்கோள்களாகவும், எடுத்துக்காட்டுகளாகவும் தமது பல நூல்களிலும் அவர் கையாண்டிருக்கிறார். ரோமாபுரியில் வாழ்ந்த சிறந்த புருஷர்களை அவர் போற்றியிருக்கிறார். அவர்களுடைய வீரதீரச் செயல்களைப் பின்பற்றியே அவர் தமது ராஜீயக் கொள்கைகளை வகுத்திருக்கிறார். புராதன இலக்கியச் செல்வர்களான **அகதாக்லீஸ், ஹீயரோ, ஸைரக்யூஸ்** முதலியவர்களின் பெருமைகளைப் பற்றி அவர் தமது நூல்களில் குறிப்பிட்டிருக்கிறார்.

“ அரசன் ” என்ற ஒரு ஒப்பற்ற நூலை எழுதுவதற்கு அவரைத் தூண்டிய காரணங்களாவன : (1) அக்காலத்திய கேவலமான சமூக நிலைமை. (2) அவருடைய வறுமை வாழ்க்கை. இவ்விதமே பல அறிஞர்களும், ஆசிரியர்களும் குறிப்பிட்டிருக்கிறார்கள் !

ராஜாங்கக் காரியதரிசிப் பதவியை இழந்த பின் அவர் **ஸான் காஸியானு** என்ற ஊரில் வசிக்கலானார். ‘ நடைமெலிந்து ஓரூர் நண்ணினும் நண்ணுவர் ’ என்ற நிலையை ஒத்திருந்தது அவரது இந்த ஊர் வாழ்க்கை. மன நிம்மதி இல்லாதவராய் அவர் காணப்பட்டார். தாங்க முடியாத வறுமையில் அவர் வாடினார்.

"தன் சொந்த ஊரிலிருந்து துரத்தப்பட்ட மாக்கிய வெல்லி புதிய இடத்தில் ஒரு அனுதை போல வாழ்ந்தார். **பார் ஜெல்லா** சிறையிலிருந்து விடுதலை பெற்று அவர் வெளியே வந்தபோது அவரைப் பார்க்கவும் பயங்கரமா யிருந்தது; அவ்வளவு கேவலமாக அவர் காணப்பட்டார். சிறைக்குள் அவர் கொடிய சித்ரவதைக்கு ஆளானுர். அதன் பயனுக, அவர் வீங்கிய கைகளுடன் வெளியே வந்தார். அவருடைய அந்தஸ்து, பதவி, செல்வம் எல்லாம் போய்விட்டன" என்று **எர்ஸ்கின்மூயர்** என்பவர் எழுதி இருக்கிருர்.

தம்முடைய குடும்பத்தை நடத்தக்கூட அவரால் முடியவில்லை. அந்நிலை பற்றி அவரே எழுதுவதாவது:

"கந்தைகளால்கூட என் சரீரத்தை என்னுல் போர்த்திக்கொள்ள முடியவில்லை. நானும் சரி, இறந்து போனவனும் சரி! குடும்பத்தைக் கைவிட்டு விட்டேனே!......என் வாழ்விற்காக மூலை முடுக்குகளிலெல்லாம் அலைகின்றேனே. நான் கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து கொண்டிருக்கின்றேன். ஏழ்மையால் இகழப்படாமல் என்னுல் அதிகக் காலம் வாழ முடியாது."

ஸான் காஸியானுவில் தான் நடத்தி வந்த வறுமையான—கஷ்டமான வாழ்வை விவரித்து அவர் விட்டோரிக்குப் பல கடிதங்களை எழுதியுள்ளார். அங்கே அவர் நாள்தோறும் காடுகளுக்குச் சென்று வேலை செய்வார். ஓழிந்த வேளைகளில் உழைப்பாளிகளுடன் அவர் மகிழ்ச்சியுடன் உரையாடுவார். சில வேளைகளில் தன்னந்தனியனுக அருவிக் கரையில் அமர்ந்து, **தாந்தே, பாட்ராரச்சின்** முதலிய மாமேதைகளின் நூல்களைப் படித்துப் படித்து அகம் மகிழ்வார். அவர்களுடைய நூல்களுடன் தாம் எழுதியவைகளை ஒப்பிட்டுப் பார்ப்பார். சாப்பிட்டவுடன் சத்திரத்திற்குப் போவார். சத்திரக்காரனுடனும், செங்கல் வியாபாரியுடனும், கசாப்புக் கடைக்காரனுடனும் நெருங்கிப் பழகுவார்.

சில நாட்களில் நாகரிகமில்லாதவர்களுடனும் அவர் சீட்டோ அல்லது சதுரங்கமோ விளையாடியும் தமது பொழுதைப் போக்குவார். அவர்களுடன் சில அணுக்களுக்காகக்கூட அவர் சண்டை பிடித்துக் கொள்வார்; அடித்தும் கொள் வார். அவரால் சும்மாவே இருக்க முடியாது. ஏதாவது ஒரு வழியில் தம் மூளைக்கு எப்போதுமே வேலை கொடுத்து வந்தார். அந்த ஊரில் தாம் நடத்தி வந்த வாழ்க்கையைப் பற்றிப் பின் வருமாறு குறிப்பிடுகின்றார்:

"இந்த மாதிரியான கீழ்த்தர வாழ்க்கையில் நான் மூழ்கியிருந்ததால் என் மூளை கெட்டு விடவில்லை. அப்படிக் கெட்டு விடாமல் நான் கவனித்துக்கொள்ள முடியும். நான் செல்வத் திருமகளை ஏள்னம் செய் தேன்; அவளைக் கண்டு நகைத்தேன். ஏன் தெரியுமா? அவள் என்னைத் தன் காலால் மிதித்துத் துவைக்க வேண்டும் என்பதற்காகத்தான்! அதன் மூலமாவது அவ ளுக்கு ஏதாவது அவமானம் ஏற்படுகிறதா என்று பார்க்க நான் விரும்பினேன்"—தன்னுடைய துக்க உணர்ச்சியை அவர் இவ்விதம் ஹாஸ்யத்துடன் சித்தரிக்கிறார் போலும்! இரவு வேளைகளில் அவர் ஏகாந்தமாகத் தம் அறிவிற்குகந்த வேலைகளில் ஈடுபடுவார். அப்போது அவரை எவரும் பார்க்க முடியாது. ராஜதந்திரத்தைப் பற்றியும் தேசத்தின் அரசியல் திட்டத்தைப் பற்றியுமே அவர் சிந்தனை செய்வார். "இவ்வாறு செய்வதன்மூலம் ஒரு தெளிவான முடிவு காணுவதற்கென்றே தான் விதியால் ஏவப்பட்டதாக" அவர் குறிப்பிடத் தவறவில்லை.

காரியத்தைச் சாதிக்கவல்ல உடனடியான முடிவுகளைக் காண அவர் அந்த ஊரில் சதா காலமும் சிந்தனை செய்து கொண்டிருந்தார் என்றும், அதன் பயனாகவே தம்முடைய ராஜீயக் கொள்கைகளை அவர் வகுக்க முடிந்தது என்றும் நாம் அறிகிறோம். 1515-ஆம் ஆண்டு ஆரம்பத்தில் **கியூலி**

யானே, பார்மாவிற்கும் இதர ராஜ்யங்களுக்கும் அதிபராகப் பதவி ஏற்கப் போவதாக ஒரு வதந்தி பிறந்தது. பிரான்ஸிஸ்கோ விட்டோரியின் சகோதரன் பாலோ விட்டோரி புதிய ராஜ்யங்களின் கவர்னராக நியமிக்கப்படப் போவதாகவும் பேச்சுப் பிறந்தது. இம்மாதிரியான வதந்தி ஏற்பட்டவுடன் தம்முடைய ராஜீயக் கொள்கைகளை மாக்கியவெல்லி பகிரங்கமாக வெளியிட்டார்.

பிளவுபட்டிருந்த இத்தாலிய ராஜ்யங்களையெல்லாம் ஒன்ருக இணைத்து ஐக்கியமான பலமான ஒரு இத்தாலிய ராஜாங்கத்தை ஏற்படுத்துவதில் உள்ள கஷ்டங்களைப் பற்றியும் அவைகளைச் சமாளிப்பதற்கான பல வழிகளைப் பற்றியும் குறிப்பிட்டு, மாக்கியவெல்லி பிரான்ஸிஸ்கோ விட்டோரிக்கு ஒரு நீண்ட கடிதத்தை, இந்தக் காலத்தில்தான் எழுதினர். "இத்தாலியை ஒரு சரீரமாக—ஜீவனுள்ளதாக இணைத்தாக வேண்டும்" என்ற தமது பேரவாவை அந்தக் கடிதத்தில் வெளியிட்டார். மேலும் அதே கடிதத்தில் அவர் பின் வருமாறு குறிப்பிடுகிருர்.

"மக்களின் விசுவாசத்தையும், பணிவையும் பெறவல்ல—நம்பிக்கையுள்ள பிரதிநிதிகளையே அரசன் பல்வேறு பகுதிகளுக்கும், அனுப்ப வேண்டும். அந்தப் பிரதிநிதிகளால்தான் இத்தாலிய மக்களையெல்லாம் ஒன்றுபடுத்த முடியும்; ஐக்ய இத்தாலியை அமைக்கும் வேலையைச் செவ்வையாகவும், வெற்றிகரமாகவும் சாதிக்க முடியும்."

ரோமாக்னுவின் குடிகளை ஒற்றுமைப்படுத்தி, அதிகாரிகளுக்குப் பணிந்து நடக்குமாறு செய்வதற்காக ரெமிரோ என்பவரைக் கவர்னராக **வாலன்டினுய் கோமகன்** நியமனம் செய்த உதாரணத்தை அவர் எடுத்துக் காட்டிவிட்டு அதன்படியே நடப்பதுதான் புத்திசாலித்தனமாகும் என்று அவர் அதே கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிருர். மேலும் ராஜாங்க சேவை செய்ய வேண்டுமென்ற தன் சொந்த விருப்பத்தை

யும் தெரிவிக்கும் ரீதியில், அவர் எழுதுகையில் தம்மைப் போன்ருரால்தான் மக்களைக் கவர்ச்சி செய்ய முடியும் என்று குறிப்பிடுகிருர்.

கியூலியானேவின் நியமன வதந்தியால் அவர் மனத்தில் தோன்றிய அவருடைய தீர்மானமான ராஜீயக் கருத்துக் களையே அவருடைய “அரசன்” என்ற நூலில் நாம் படிக் கிருேம். தாம் எழுதி முடித்த நூலை கியூலியானேவிற்குச் சமர்ப்பணம் செய்யவே மாக்கியவெல்லி முதலில் விரும்பினுர் என்றும், ஆனுல் கியூலியானேவின் மரணம் அவருடைய விருப்பத்தை முறியடித்து விட்டதென்றும், எனவே அவர் அந்நூலை அர்பினேவின் கோமகனுக இருந்த லாரன்ஸோ-டி-மெடிஸிக்கு சமர்ப்பணம் செய்யும்படி நேரிட்டது என்றும் தெரியவருகிறது.

இரண்டாம் அத்தியாயம்

அரசியலைப்பற்றி மாக்கியவெல்லி

மாக்கியவெல்லியின் காலத்திய தாறுமாறான சமூக ராஜீய நிலைமைகளின் காரணமாக அவருக்கு ஏற்பட்ட ஏகாக்கிரக சிந்தனையிலிருந்துதான் அவருடைய ராஜதந்திர சித்தாந்தமும், அதனுடைய மூலாதாரமான **வலிமைத் தத்துவமும்** உருவாயின. தம் இத்தாலியத் தாயகத்தின் மீது அவர் பக்தி ஆவேசங்கொண்டிருந்தார். அதன் முந்தையரின் சிந்தையினில் தோன்றிக் கால காலமாக வளர்ந்து வந்த எண்ணங்களும் உணர்ச்சிகளும் அவரைப் பெரிதும் கவர்ந்து அவரது புதிய கருத்துக்கள் தோன்றுவதற்குப் பலமான அடிப்படையாகவும் இருந்தன. தம்முடைய காலத்திய அற்பர்களால் தம் தாய்த் திருநாடு வீழ்ந்துகிடந்தபோதிலும், எதிர்காலத்திலாவது ஆண்மையுள்ள தலைமையின் கீழ், அது, சிறந்த பதவிக்குரிய, உன்னதப் பொன்னாடாகச் சிறப்புற்று விளங்கவேண்டுமென்று அவர் மனப்பூர்வமாக விரும்பினார்.

அத்தகைய சக்தியுள்ள இத்தாலியே அவர் முன் இரவிலும்—பகலிலும், கனவிலும்—நனவிலும் காட்சியளித்தது. சரியான முறைகளைக் கையாண்டால் இத்தாலி புத்துயிர் பெற்றெழுந்துவிடும் என்று அவர் உறுதியாக நம்பினார். உறுதியானதொரு தேசியத் தலைமையே அதன் அவசரமான தேவையென அவர் கண்டுகொண்டார். அவர் பலமுள்ள எதிர்கால இத்தாலியில் அளவற்ற நம்பிக்கை வைத்திருந்தார் என்பதை அவருடைய நூல்களான "அரசனி"லிருந்

தும், "உரையாடலி"லிருந்தும் நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

ராஜீயத் துறையில் வெற்றி பெறுவதற்கு வலிமைத் தத்துவமே ஏற்றது, சிறந்தது என்றும், உலகம் அதை ஏற்றுகவேண்டும் என்றும் மாக்கியவெல்லி பலமாக வற்புறுத்துகிறார்.

மனித சமுதாயத்தின் மீது அரசாட்சி அல்லது ராஜ் யாதிகாரம் செயல்படவேண்டும் என்பதையே அவர் தம் முடைய "உரையாடலில்" முக்கியமாகக் குறிப்பிட்டிருக் கிறார். அவருடைய வலிமைத் தத்துவம் லோகாயத விஷ யங்களுக்காகவே ஏற்பட்டதாகும். இயற்கை நியதியை ஒட்டிய பாசங்கள், குறைபாடுகள், நாகரிகமற்ற மனிதர் கள் அடங்கிய மக்கள் சமுதாயத்திற்காகவே ஏற்பட்டது. அவர் பல இடங்களில் இதைத் தெளிவாக்கி இருக்கிறார்.

வலிமைத் தத்துவம் செயல்பட வேண்டுமானால் அதற் குச் சரியான வழி இயற்கையை யொட்டிய வழியேயாகும் என்பது அவருடைய திடமான கருத்தாகும். "வெறும் கற்பனை கவைக்குதவாதது. உலகத்தைப் பற்றிக் கற்பனை நோக்கத்தைக் கொள்வது சரியன்று. இயற்கையான வழியைப் பின்பற்றுவதே சிறந்ததாகும். நம்பவே முடி யாத "ஆட்சி"களைப் பற்றியும், "அரசர்"களைப் பற்றியும் கற்பனை செய்யப்படுகிறது; நாம் இன்று வாழுகின்ற முறைக்கும், இனி வாழ வேண்டிய முறைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. இங்நிலையில், ஒன்றைவிட்டு மற்றொன் றைப் பின்பற்ற நினைப்பவன் இருளைநோக்கியே ஓடுகிறான்; அவன் தன்னையே அழித்துக்கொண்டுவிடும் அபாயத்தில் சிக்கிக்கொள்ளவே அப்படி ஓடுகிறான். ஏனெனில், எல்லா வற்றிலும் எள்ளளவும் குறைவில்லாத நன்மையே இருப்ப தாக நினைப்பவர்கள்...அவ்வுணர்ச்சியுடன் வாழ்பவர்கள் தீமை நடுவே சிக்கி முடிவில் அழிந்துதான் போகிறார்கள்"

என்று அவர் தமது "அரசன்" என்ற நூலில் குறிப்பிடு கிருர்.

"மனிதர்கள் என்ன செய்யவேண்டும் என்பதோடு மட்டும் அவர் நின்றுவிடவில்லை. அவர்கள் என்ன செய்கிருர்கள் என்பதைப் பற்றியே அவர் அதிகமாக ஆராய்ந்திருக்கிருர்" என்று **பேகன் பிரபு** எழுதுகிருர். மாக்கியவெல்லி வெறும் அரசியல் தத்துவ விசாரணையை மட்டிலும் செய்யவில்லை; ராஜதந்திரத்தைப் பற்றியே அவர் ஆழ்ந்து, அலசிப் பார்த்து ஒரு தீர்மானமான முடிவுக்கு வந்திருக்கிருர். அவருடைய ராஜீய அனுபவ முதிர்ச்சி நிறைந்த அபிப்பிராயங்களைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டுமாஞல் அவருடைய "அரசன்" என்ற நூலை மட்டும் படித்தால் போதாது. அவருடைய "உரையாடல்" என்ற நூலையும் படித்தாகவேண்டும். இவ்விரண்டையும் படிக்கும்போதுதான், அரசனின் அதிகாரத்தைப் பற்றி மட்டுமன்றி, குடி மக்களின் சம்மதம் எவ்வளவு முக்கியமானது என்பதைப் பற்றியும் விளக்கமாகக் குறிப்பிட்டிருக்கிருர் என்பதை நாம் அறிந்துகொள்ள இயலும். ஆளப்படுவோரின் ஒத்துழைப்புக்கு அவர் உயரிய மதிப்புக் கொடுத்திருக்கிருர் என்றே தெரியவருகிறது.

ராஜ்யாதிகாரத்தைச் செலுத்துவோர் கையாள வேண்டிய ராஜதந்திர முறைகளைப் பற்றி அவர் மிக நுணுக்கமாய் ஆராய்ந்திருக்கிருர்.

"வலிமையின் வேர், பலங்கொண்ட ராஜதந்திரமே என்பது அவருடைய அந்தரங்கமான முக்கியக்கொள்கையாகும்" என்று **டன்னிங்** என்பவர் எழுதுகிருர்.

ராஜாங்கத்தின் அதிகாரத்தைப்பலப்படுத்தவும் உறுதியுடன் செலுத்தவும் உதவக்கூடிய விதிகளை அவர் ஆராய்வதைப் பார்க்கும்போது, அவருக்கு ஏற்பட்டிருந்த நிர்ப்பந்

தங்களையும், உணர்ச்சிகளையும் கவலைகளையும் நாம் தெரிந்து கொள்ள முடிகிறது.

ராஜாங்கத்தின் அதிகாரம், அதன் மூலாதாரம், ராஜாங்கத்தின் முக்கியமான அலுவல்கள், அது அடையும் ஏற்றத் தாழ்வுகள், ராஜாங்க அதிகாரம், ஏகபோகமாகவும், ஒரே சீரான கைப்பாடாகவும் இருக்கவேண்டிய அவசியம், இவ்வளவையும் பற்றி விரிவாக விளக்கியும், இவைகளுக்கான விதி முறைகளை அவர் கட்டுக் கோப்பாக வகுத்துமிருக்கிறார். அரசனுடைய ராஜாங்க வேலை சம்பந்தமான தனிப் பொறுப்பே அரசின் மேலான சின்னமென்று அவர் கருதினார். அப்பொறுப்பே அவன் உபயோகிக்கும் மிக முக்கியமான கருவி—சாதனம் என்று அவர் கருதினார். ஆயினும் இதைப் பற்றி அவர் வெளிப்படையாகச் சர்ச்சை செய்யவில்லை.

> "புதிய ராஜ்யத்தை நிர்மாணிப்பதற்கோ அல்லது வீழ்ந்த அரசை மீண்டும் உயர்த்தவோ ஒரு மகா புருஷன் தோன்ற வேண்டும். அவ் வேலை அவனுடைய கைப்பாடாகவே இருக்க வேண்டும். எல்லாவற்றையும் முறையாக வகுத்துத் திட்டப்படி நடத்தும் ஒரு அறிவாளியின் செயலைப் போன்றிருக்கும் அவனுடைய திட்டமும் செயலும். அப்படிப்பட்ட மகா புருஷன் தோன்றுமலோ அல்லது அப்படிப்பட்ட அறிவுள்ள செயல் நடக்காமலோ இருந்தால் உண்மையான் ஒற்றுமையும் ஏற்படாது. ஸ்திரமான எதையும் சாதிக்கவும் முடியாது"

என்று அவர் கூறுவதிலிருந்து நிர்மாண சக்தி முழுமையும் ஒருவனுடைய செயல் திறனிலேயே ஒன்றி இருக்க வேண்டும் என்ற அவருடைய கருத்துப் புலனாகிறது.

மூன்றும் அத்தியாயம்

அரசியலும், மனிதனது இயற்கை சுபாவமும்

"காரிய சாத்தியமற்ற கற்பனை அரசைப்பற்றி மாக்கியவெல்லி சிந்தனை செய்யவில்லை. அனுஷ்டான சாத்தியமான கண்ணோட்டத்துடனேயே அவர் அரசியலைப் பற்றிய தன்னுடைய முடிவான கருத்துக்களை வெளியிட்டார்" என்று வில்லாரி போன்றோர் கூறுகின்றார்கள்.

"மனிதர்கள் இயற்கையாகவே கட்டுப்பாடற்ற சோம்பேறிகள்; கெட்டவர்கள். அவர்களைக் **கட்டாயப்படுத்தினாலன்றி** நல்ல காரியங்களைச் செய்வதற்குத் திரட்ட முடியாதென்றே நான் நிச்சயமாகக் கருதுகிறேன்"

என்று அவர் கூறுகிறார். அந்த எண்ண அடிப்படையிலேயே அந்த அரசியல் கொள்கைகளை அவர் பிரகடனம் செய்தார். மனித சுபாவம் பற்றி அவர் மேலும் தம் "அரசன்" என்ற நூலில் பின்வருமாறு கூறுகிறார்:—

"பொதுவாகவே மனிதர்கள் நன்றிகெட்டவர்கள்; சஞ்சல புத்தியுள்ளவர்கள்; காட்டிக் கொடுப்பவர்கள்; அபாயத்தைக் கண்டு அஞ்சியோடும் கோழைகள்; பேராசை பிடித்தவர்கள்; பிறரிடம் நன்மைகளை எதிர்பார்த்து அவை கிடைக்கும் வரை விசுவாசமாக இருப்பதுபோல நடிப்பவர்கள்; அபாயம் தொலை தூரத்திலிருக்கும்போது, எவ்வித நிலைமைகளையும் சமாளிக்கத் தியாகம் செய்யத் தயாராயிருப்பதாக நடிப்பவர்கள்; ஆனால், அந்த நிலைமை

யில் எவரையும் துரோகம் செய்யப் பின் வாங்காதவர்கள்; இதுவே மனித சுபாவம் என்று நான் நிச்சயமாகக் கூற முடியும்.''

''கட்டாயப்படுத்தப்பட்டாலன்றி மனிதர்கள் ஒரு பொழுதும் சரியான முறையில் நடந்து கொள்வதில்லை. அவர்களை சுயேச்சையாக நடக்கும்படி விட்டால், எல் லாம் குழப்பத்தில்தான் முடியும்; எங்கும் ஒழுங்கீனங் களே மலிந்துவிடும்.''

''மனிதனுடைய இயற்கை சுபாவத்தை அதன் சுயேச் சைப் போக்கிலேயே விட்டுவிடக் கூடாது. அவசியம் ஏற்படும்போது அப்படிப்பட்ட சுயேச்சையை பலாத் காரத்தால் அடக்கியே தீரவேண்டும்.''

''ஏனெனில் மனிதர்கள் எதையும் கண்ணலேயே தீர் மானித்து விடுகிருர்கள். ஆயினும் எதையும் கண்ணல் பார்த்துவிடும் எல்லோரிலும், ஒரு சிலராலேயே அதை யும் தொட்டுப் பார்க்க முடியும்.''

இவ்விதம் அவர் மனிதனின் இயற்கை சுபாவம் பற்றி இவ்வளவு அழுத்தமாக வாதிக்கிருர். அவருடைய ''அரசன்'' நற்குணவாஞக இருக்கவேண்டியதில்லை; அப் படிப்பட்டவஞக வெளிக்குத் தோன்றிஞல் மட்டும் போதும் என்று அவர் கருதிஞர்.

மனித சுபாவம் பற்றி அவர் உயர்வாக அளவிடவில்லை. அரசியலைப் பற்றியும் ராஜாங்கத்தைப் பற்றியும் இதே உற் சாகமில்லாத உணர்ச்சியுடனேயே அவர் தமது கருத்துக் களை வெளியிட்டிருக்கிருர். இதஞல் மனிதப் பண்புகளை அவர் அறவே மதிக்கவில்லை என்றும் சொல்ல முடியவில்லை. மனிதனின் மாண்பு மிக்க வீரதீரம், நட்பு முதலிய பண்பு க்களை அவர் ஒப்புக்கொண்டிருக்கிருர்.

"சமுதாயச் சிறப்புகளான இவை, இயற்கையாலோ அல்லது கடவுளாலோ நிர்ணயிக்கப்பட்டவையாகும்." என்பதை அவர் குறிப்பிடத் தவறவில்லை. தன்னுடைய சுயநல ஆசைகளில் ஆழ்ந்து கிடக்கும் சாதாரண மனிதனால், சமுதாயப் பொது நலனுக்காக தன் சக்தியை ஈடுபடுத்த முடியவில்லையே என்று அவர் வருத்தப்படுகிறார்.

மனிதனின் சுயநல ஆசை சமுதாய முன்னேற்றத்தைத் தடுக்க வல்லது என்பதை அவர் தமது "அரசன்" என்ற நூலில் பின்வருமாறு விளக்கி எழுதுகிறார்:—

"பொதுப் பொறுப்புகள் ஏற்படும்போது, மனிதன் காலந்தோறும் சுயநல வாதியாகவும், குறுகிய நோக்க முள்ளவனாகவுமே நடந்து கொள்ளுகிறான். இப்படிப் பட்டவனை எவ்வாறு உயர்வானவன் என்று கருத முடியும்? இப்படிப்பட்டவர்களைக் கொண்ட சமுதாய உணர்ச்சியை நம்பி நல்ல திட்டங்களை வகுக்க முடியுமா? இவ்வாறான மனிதர்களை நம்பிப் போடப்படும் திட்டங்கள் அபாயத்திலும், குழப்பத்திலுந் தானே முடியும்! சங்கிலியின் பலத்தை அதன் மிகவும் பலவீனமான கண்ணியைக் கொண்டுதான் நிர்ணயிக்க வேண்டும்!......ஒரு வியாபாரி தன் கடையை வழக்கமான இடத்திலிருந்து திடீரென வேறு இடத்துக்கு மாற்றினால் அவனுடைய வியாபாரத்துக்கே நஷ்டம் ஏற்படும் என்பதை அவன் உணரவேண்டும். ஏனெனில், கீழ்த்தளத்திலிருந்து மேல் மாடிக்கு அவன் தன் கடையை மாற்றிவிட்டால், அவனுடைய வாடிக்கைக்காரர்கள் சோம்பலால் மேல்மாடிக்குப் போக நினைக்கமாட்டார்கள்! அரசியலிலும் அப்படித்தான்!... சிறந்த கொள்கைகளில் மனிதன் மதிப்பு வைக்கிறான் என்று சுலபமாக நம்பி, அத்தகையோரை நல்ல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அவசரமாக ஈடுபடுத்த முற்படுவது அபாயமாகும். மனிதனது 'அசுர' குணங்களுக்கு

எதிராக வல்லமையுள்ள அதிகாரச் சக்தியை முடுக்கி விட்ட பிறகே, அவனுடைய நற்குணங்களின் பலனை எதிர்பார்க்க வேண்டும். இதுவே உயர்வான விதியாகும். ......குடிகளின் நன்மையை ராஜாங்கம் மதித்து அதைக் காப்பதோடு சுயநல வாதிகள்—போக்கிரிகள்—சந்தர்ப்ப வாதிகளின் கொட்டத்தை ஒடுக்குவதிலும் முன் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். இதில் தயவு தாட்சண்யத்திற்கு நிச்சயமாக இடமில்லை. நியாயம்—சத்தியம்—எளிமை—சீலம் என்றெல்லாம் சதா சர்வ காலமும் அர்த்தமில்லாமல் பேசிக்கொண்டே கவனக்குறைவாக நடந்து கொள்ளும் சமுதாயந்தான், போக்கிரிகளும், சதிகாரர்களும், கீழ்த்தர்மானவர்களும் தோன்றுவதற்கேற்ற விளை நிலமாகி விடுகிறது. எனவே மனிதனுடைய தீய குணங்களை ஒடுக்குவதில் ராஜாங்கம் மிக உறுதியாக நடக்கவேண்டும். அவனுடைய ஒழுங்கீனம், கர்வம், சுயநலம், சூழ்ச்சி, தற்பெருமை, சிறந்தவற்றை யெல்லாம் அழித்துவிடத் துடிக்கும் அவனுடைய 'அசுர'ப் போக்கு —முதலியவை எப்படியெல்லாம் விகார வெறியுடன் பேயாட்டமாட வல்லன என்பதை முன் கூட்டியே அறிந்து கொண்டு, அவைகளை ஈவு இரக்கமின்றி ஒடுக்க முற்படுவதே அரசியலின் மகோன்னத நெறியாகும்.''

நான்காம் அத்தியாயம்

மாக்கியவெல்லியின் சரித்திர ஆராய்ச்சி

மனித சுபாவத்தைப் பற்றிய தமது அபிப்பிராய அடிப்படையிலேயே, மாக்கியவெல்லி சரித்திர ஆராய்ச்சி செய்கிறார்; அதாவது சரித்திர ஆராய்ச்சியின் போக்கில், தமது மனித சுபாவம் பற்றிய சித்தாந்தத்தையே அவர் உபயோகித்துக் கொள்கிறார். ''மனிதன் பிறரைப் போல நடிப்பது இயற்கை'' என்று அவர் கூறுவதைப் பார்க்கிறோம். ''பழமையை அப்படியே பின்பற்ற வேண்டுமென்று அவன் முயற்சி செய்கிறான். அப்படிச் செய்யும்போதும் அவன் கேவலமான முறையிலா நடந்துகொள்ள வேண்டும்?'' என்கிறார் அவர். மேலும் அவர் எழுதுகிறார்:—

> ''மனிதர்கள் பெரும்பாலும் பழைய வழியிலேயே நடந்துகொள்ள முயலுகின்றனர். பிறரைப் பார்த்து அப்படியே தாமும் நடந்துகொள்ள ஆசைப்படுகிறார்கள். எவர் வாழ்ந்த கீர்த்தி வழியில் தாங்களும் வாழ வேண்டுமென்று நினைக்கிறார்களோ, அவ்வழியின் மாண்பினை உணர்ந்து அதன்படி நடக்கத் தவறிவிடுகிறார்கள். அறிவாளி மனிதனோவெனில், தன் முந்தையராயிருந்து புகழ் பெற்ற செல்வர்களின் வழியிலேயே வழுவாமல் நடக்கிறான்; அவர்கள் பெற்ற புகழினைப் போலத் தானும் பெறவேண்டுமென்று அவன் துடிக்கிறான்; மிகச் சிறந்த முன்னோர்களின் உதாரண வாழ்வு வழியைப் பின்பற்றுவதுதான் ஞானமென்று அவன் நம்புகிறான்; ஏனெனில், அப்புகழ்ச் செல்வர்களின் ஞானத்தை, தான் பூரணமாக

அடைய முடியாது போனாலும், அப்பெரியோரின் குல வழியில் பிறந்தவன் ; வாழ முயன்றவன் என்ற சின்னத்தையும், பெருமையையுமாவது பெறலாம் என்று அவன் நினைக்கிறான்.'' சரித்திரப் போக்கைப்பற்றி அவர் குறிப்பிடுகையில், “அது ஒரு சுழலும் சக்கரம் போன்று, திரும்பத் திரும்பச் சுழன்று கொண்டே இருக்கும். அது, சுபாவமாக எந்த விஷயத்தையும் தானே புதிதாக ஆரம்பிப்பதில்லை. கடந்த கால விஷயங்களை அப்படியே ஒப்பிப்பதும், சில சமயங்களில் திரித்தும், கேவலமாகவும் ஒப்பிப்பதுமே அதன் வேலையாயிருக்கிறது'' என்று எழுதுகிறார்.

மனிதர்கள், பொதுவாகச் சோம்பேறிகள் என்றும், ஆராய்ச்சித் திறனில்லாதவர்கள் என்றும், புத்திக்கூர்மையற்றவர்கள் என்றும், புதியவற்றைக் கண்டுபிடிப்பதை விட்டுப் பழமையைப் பின்பற்றியே—அதன் சிறப்பான அம்சங்களை அறியாமலேயே!—வாழ நினைப்பவர்கள் என்றும், அறிவைச் செலுத்தி முன்னேறும் மனோவேகமின்றி, நிகழ்ச்சிகளை மட்டும் வகுப்பதிலேயே ஈடுபாடு கொள்பவர்கள் என்றும், இதனால்தான் சரித்திரம் திரும்பத் திரும்பச் சுழன்று கொண்டிருக்கிறது என்றும் மாக்கியவெல்லி குறிப்பிடுகிறார்.

“எவனொருவன் நிகழ்காலத்தை அறிந்து கொண்டு வருங்காலத்தைத் தீர்மானிக்க விரும்புகிறானோ, அவன், மாதிரிக்காகவும், வழி யறிவதற்காகவும் பழங்காலத்தைப் பின்னோக்கிப் பார்க்க வேண்டியது அவசியமாகின்றது. ஏனெனில், பழங்காலத் தொடர்பின்றி புதிய காலம் என்பது மலருவதில்லை. பழமைக்கும் புதுமைக்கும் தொடர்பு இருப்பது மறுக்க முடியாத இயற்கை நியதியை ஒட்டியதேயாகும். ஒரே மாதிரியான விருப்பு வெறுப்புடைய மனிதனின் செய்கை ஒரே மாதிரியான பலனையே தரும்.

எல்லாச் சமூகங்களிலும், எல்லா மனிதர்களிடமும், அபிலர்ஷைகளும், மனமும் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன "—

சரித்திரத்தைப் பற்றிய மாக்கியவெல்லியின் ஆழ்ந்த அபிப்பிராயம் இதுவேயாகும். அவருடைய நூல்களில் பல இடங்களில் இந்த அபிப்பிராயத்தை அவர் பலமாக வற்புறுத்திக் கூறியிருக்கிருர்.

" மனிதனின் செய்கையைப் பொறுத்தே அவனுடைய வாழ்வும் தாழ்வும் இருக்கின்றன. ஒவ்வொரு செய்கையிலும் கெட்ட விஷயம் ஒன்றிருப்பதாலேயே புதிய மாறுதல் ஏற்படுகிறது" என்றும், "அநீதியை எதிர்க்கும் மனிதனின் முழு மூச்சுப் போராட்டம் முடிவான வெற்றியைத் தருவதேயில்லை. உலகத்தின் ஒரு பக்கத்தில் வீழ்ச்சி ஏற்படும்போது, இன்னெரு பக்கத்தில் முன்னேற்றம் ஏற்படுகிறது. ஆயினும் முன்னேற்றமோ அல்லது வீழ்ச்சியோ ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு மேல் நீடிப்பதில்லை," என்றும், அவர் அபிப்பிராயப்படுகிருர். இதே மனப் போக்கில் தான் அவர் ஒழுக்கத்தைப் பற்றியும் மதிப்பிடுகிருர். " நன்மையும் தீமையும், ஒன்று மற்ருென்றுக்குக் காரணமாகிறது என்பதால், உலக சரித்திரம், நிரந்தரமான சக்திகளின் வெளித் தோற்றமே யாகும் " என்று அவர் நினைத்ததே இதற்குக் காரணமாகும்.

> " நன்மையும் தீமையும் ஒரே அளவில்தானிருந்து வருகின்றன என்று நான் தெளிவாக உணர்கிறேன். வம்ச வம்சமாக, தேசாதி தேசங்களுக்கு இவை சென்று கொண்டிருக்கின்றன "

என்றும் அவர் எழுதுகிருர். புகழ்ச் செல்வர்கள் வாழ்ந்த விதம் அறிந்து, அவர்களைப் போற்றி, அவர்களைப் போல இளைஞர்கள் துணிகரமாய்ச் செயலாற்ற வேண்டும் என்று இத்தாலிய இளைஞர்களை மாக்கியவெல்லி அழைக்கிருர்!

(1) மனித சுபாவம் மாறுதது ; (2) சரித்திரம் நடந்த விஷயங்களை ஒப்பித்துக் கொண்டே திரும்பத் திரும்பச் சுழன்று கொண்டிருக்கிறது ; (3) உலக சம்பவங்கள் எப்போதுமே மாறிக் கொண்டிருக்கின்றன : என்ற, சரித்திரத்தைப் பற்றிய இம்மூன்று அடிப்படைக் கொள்கைகளுடனும், ரோம நாட்டுச் சரித்திரத்தை ஆதாரமாகக் கொண்டும் அவர் தம்முடைய அரசியல் சித்தாந்தத்தை நிலை நாட்டுகிருர். ரோம ராஜ்யத்தின் பழைய அரசியல் திட்டத்தை அவர் பெரிதும் புகழ்கிருர். ரோம சரித்திரத்திலிருந்து எண்ணிறந்த உதாரணங்களை எடுத்துத் தமது நூல்களில் சிறப்பாக "அரசனில்"—மேற்கோள் காட்டியிருக்கிருர். அவைகளுக்கும் தம் காலத்திய இத்தாலிக்கும் இருந்த தொடர்பை அவர் விவரித்துக் காட்டுகிருர். தங்களுடைய பேராற்றலால் அரச பதவியை அடைந்த **மோஸஸ், ஸைரஸ், ரோமூலஸ், தீஸ்யூஸ்** முதலிய கோமகன்களைப்பற்றி அவர் மிகச் சிறப்பாகக் குறிப்பிட்டு எழுதி இருக்கிருர். அவர்கள் அரச பதவியை எய்திய விதங்களைப் பற்றியும் அவர் விரிவாக எழுதியிருக்கிருர். அவர்களின் ராணுவ வெற்றிகளை அவர் விரிவாகப் போற்றி யிருக்கிருர். அதன்மூலம் அவர் தன்னுடைய வலிமைத் தத்துவத்திற்கு அளவற்ற முக்கியத்துவத்தைக் கொடுத்திருக்கிருர். தீய வழிகள் மூலமும், கொடிய பாதகச் செயல்களைப் புரிந்தும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய **சிஸிலி** நாட்டின் **அகதாக்லீஸை** அவர் உதாரணம் காட்டியிருக்கிருர். தாம் போதிக்கும் வலிமைத் தத்துவம் எவ்வளவு உயர்ந்தது—அவசியமானது என்பதை நிலைநாட்டவே இம்மாதிரியான பண்டைய ரோம அரசர்களின் உதாரணங்களை அவர் எடுத்துக் காட்டியுள்ளார். அவருக்கு ரோமக் குடியரசு ஒன்றுதான் உன்னதமான எடுத்துக்காட்டாக அமைந்தது! அக் குடியரசின் திட்டமே அவருக்கு ஆதர்சமாயும் இருந்தது! "நெருக்கடியான காலத்தைச்

சமாளிக்கவல்ல எதேச்சாதிகாரமும்கூட அரசியல் திட்டத்திற்குட்பட்டதாக இருக்க வேண்டும். இதற்கு ரோமாபுரியின் அரசியல் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்தது" என்று ரோமக் குடியரசின் அரசியல் திட்ட வரம்பின் அழகையும், அதன் வளைந்து கொடுக்கும் தன்மையையும், வியந்து அவர் தம்முடைய "உரையாடலில்" குறிப்பிட்டிருக்கிறார்.

ரோமூலஸ்ஸைப் போன்றதொரு தலைவனின் கீழ், ஏக போக ராஜ்யாதிகாரம், ஒரே கைப்பாடாக அமுல் செய்யப்படவேண்டும் என்பது மாக்கியவெல்லியின் அபிப்பிராயமாகும். சந்தர்ப்ப அவசியத்திற்காக, ரோமூலஸ், தன் கூட்டாளிகளைக்கொன்றதையும், லிகர்கஸின் சட்டங்களை நிறைவேற்றுவதற்காக கிளியாமினஸ் பலரைக் கொன்றதையும், நியாயமான செய்கைகளென்றே அவர் சாதிக்கிறார். மதத்திற்கும் ராஜாங்கத்திற்குமுள்ள உறவுகளைக் குறிப்பிடும்போது, அதற்கும் ரோமானியர்களின் உதாரணத்தையே எடுத்துக் காட்டி அவர் புகழத் தவறவில்லை. ராஜாங்கத்திற்கு உட்பட்டதாக மதத்தை ஆக்கிவிட்ட அவர்களின் ராஜதந்திரத்தை அவர் அதிகமாகப் பாராட்டுகிறார்.

> "அரசியல் சாஸ்திரத்தில் நிரந்தரமாகவும் பொருமையுடனும், சோதனை முறையைக் கையாண்டவரும், 'அரசியல் விஷயத்தில், எல்லாவற்றிற்கும் மேலான அதிகாரத்தின் உறைவிடமே மத பீடமாகும்', என்ற போப்புகளின் அகங்காரக் கொள்கையைத் தீவிரமாக எதிர்த்தவருமான ஆதி எழுத்தாளர் மாக்கியவெல்லிதான்" என்று L. A. பர்ட் என்பவர் எழுதுகிறார்.

'நியாயம், கடமை, சீலம் பற்றிய விஷயங்களானாலும் சரி, ராஜீய விஷயங்களானாலும் சரி—எதைப் பற்றியும் எவ்வித அபிப்பிராயம் கொள்வதற்கும், கூறுவதற்கும் மத பீடம் ஒன்றுக்குத்தான் பூரண அதிகாரமுண்டு; மற்ற எவ

ருக்கும் எவ்வித அபிப்பிராயமோ அல்லது அதிகாரமோ இல்லை' என்று மத போதகர்கள் வாதாடி வந்த காலத்தில் தான், மாக்கியவெல்லி அரசியலிலும், மதத்திலும் சரித்திர திருஷ்டியுள்ள—ஞானமுள்ள—பகுத்தறிவுள்ள ஒரு புது வழியைப் புகுத்தினர். 'தெய்வீக'மானவை என்று போதிக்கப்பட்ட விதிகளை அவர் ஏற்கவில்லை.

"மாக்கியவெல்லி தமது "அரசன்" என்ற நூலில் ராஜ்யம்—ராஜ்யாதிகாரம், அவைகளை நிலை நிறுத்துவதற்கான வழிகளைப் பற்றித் திட்டவட்டமான முறைகளை வகுத்திருக்கிறர். 'ராஜாங்கம்' என்பதைப் பற்றிய புதிய சித்தாந்தம் உலகினில் பரிணமிக்க உதவியாயிருந்தவைதான் அம்முறைகளாகும்" என்று பர்ட் மேலும் எழுதியிருக்கிறர்.

ஐந்தாம் அத்தியாயம்

மாக்கியவெல்லியின் ‘ராஜாங்கம்’

சமுதாயத்தை அடக்கி, ஆண்டு, காப்பாற்றுவது ராஜாங்கத்தின் மூன்று கடமைகள் என்றும், ஒரு நாட்டின் சமுதாயம், சர்வ வல்லமையுள்ளதும், அதற்கென்றே ஏற்பட்டதுமான ராஜாங்கத்தின் கீழன்றி வேறு விதமாக இருக்க முடியாது என்றும் மாக்கியவெல்லி கூறுகிறுர். வேறு எவ்விதமாகவும் அவரால் நினைக்க முடியவில்லை.

ராஜாங்கம் என்பது மனிதருடைய நன்மைக்காக அமைக்கப்பட்ட ஒரு அதிகார நிர்வாக ஸ்தாபனமாகும். ஆனால், அத்தகைய ஸ்தாபனத்தை யார் அமைக்கிறுர்கள்? இதற்கு மாக்கியவெல்லியின் பதில் பின் வருமாறு :

“ராஜாங்கம் என்பது மக்களுடைய புத்திபூர்வமான சம்மதத்தால் ஏற்பட்டதல்ல; நாட்டு மக்களின் பரஸ்பர ஒப்பந்தத்தின் விளைவாக எழுந்ததுமல்ல; புறம்பே உள்ளவர்களால் அமைக்கும்படி உந்தப்பட்ட ராஜீய விஷய ஞானமேயில்லாதவர்களால் ஏற்பட்டதுமல்ல. சமுதாயம் தோன்றும்போதே இத்தகைய ஒரு ஸ்தாபனமும் கூடத் தோன்றிவிடுகிறது. பாசம்-ஒற்றுமை - பலம் - வேற்றுமை விளைவிக்கும் சக்திகளை ஒடுக்கும் அதிகாரம்-ஆற்றல் முதலியன சமுதாயம் தோன்றியது முதலே இருந்து வருகின்றன. ஒரு கட்டுக்கோப்பான சமுதாயத்தில் ஒரு ராஜாங்கத்திற்குரிய சின்னங்கள் யாவும் இருக்கின்றன. ஒரு சமுதாயம், தன் வாழ்வின் அடிப்படைத் தத்துவங்களையும், வளர்ச்சி-வீழ்ச்சிகளையும் சரித்திர வாயிலாகத்தான் தெரிந்துகொள்கிறது. ஆயினும் அந்தத் தத்துவங்களும், ஏற்றமும்-தாழ்

வும் எப்போதும் இருந்தே வருகின்றன. திட்டங்களின் மூலம் மாறுதலை ஏற்படுத்துவதற்கு முன்பு, அரசியல் உரிமைகளையும்-கடமைகளையும் பற்றிய அறிவையும்-உணர்ச்சியையும் மக்களிடையே பரப்புவதுதான் முக்கியமாகும்; இதுவே முதல் கட்டமுமாகும். அப்போதுதான் அந்த மக்களை ஒரு கட்டுப்பாடான ராஜாங்க அதிகாரத்தின் கீழ் கொண்டுவர முடியும். சமுதாயத்தின் முக்கியமான அம்சங்கள் எவை? (1) ராஜ்யாதிகாரத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கும் மனப்பான்மையும் (2) மீறினால் கிடைக்கக் கூடிய கொடிய-பலாத்கார தண்டனைகளைப் பற்றிய பயமுமேயாகும்"—இந்த அபிப்பிராயத்துடன்தான், மாக்கியவெல்லி "மனிதனுடைய நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு அதிகார நிர்வாக ஸ்தாபனமே ராஜாங்கமாகும்" என்கிறார்.

மாக்கியவெல்லி "அரசன்" என்ற பதத்துடன் "சட்டமியற்றுவோன்" (Legislator) என்ற பதத்தையும் உபயோகப்படுத்துகிறார். இவ்விரண்டும் 'அரசாங்கத்தை அமைப்பவன்' என்ற ஒரே பொருளைத்தான் குறிப்பிடுகின்றன. எல்லாவற்றையும் ஐக்கியப்படுத்தி அபிவிருத்தி செய்து, சமுதாயத்தைச் சோதனைகளிலிருந்து காப்பாற்றும் ஒரு ஏகபோக ராஜாங்கத்தையும், ராஜ்யாதிகாரத்தையுமே அவர் வற்புறுத்துகிறார். ராஜ்யாதிகாரத்தின் முக்கிய குணங்களைப் பற்றி அவர் கூறுவதாவது:

"ஒரு தனி நபர் மூலமாகவோ அல்லது வழி வழியாகப் பல நபர்கள் மூலமாகவோ ஏற்படுகின்ற ராஜ்யாதிகாரத்தின் முக்கிய குணங்களைக் கவனிப்போம். தலைமை தாங்கி நடத்தும் எழில் வீரம், ஒற்றுமையை நிலைநாட்ட வல்ல மனோ உறுதி, நினைத்ததைச் செய்யும் துணிச்சல், தன் சக்தியில் அளவற்ற நம்பிக்கை, ஈவு இரக்கமற்ற கண்டிப்பு—இவைதான் ராஜ்யாதிகாரத்தின் குணச்சிறப்புகளாகும்."

மேலும் அவர் கூறுவதாவது: "சோர்வையே அறியாத மனே வலிமையால் உருவாகும் தெளிந்த அறிவு, பின்னடையாத முயற்சி, தயவு தாட்சண்யமற்ற கடுமை, திட்டமிடுவதற்கான மூளை, அடிப்பதற்கான கை—இந்தக் குணங்களுக்கு மாருனவையால் ராஜாங்கத்திற்கு அழிவுதான் ஏற்படும். இத்தகைய அழிவால், பூராச் சமுதாயத்திற்குமே பொதுவான சகல நலன்களும் மறையும்."

பலப் பிரயோகமே ராஜாங்கத்தின் மிக முக்கியமான முதற் கடமை என்பதை மாக்கியவெல்லி திரும்பத் திரும்பக் கூறுவதற்கே மேலே கண்ட குணச் சிறப்புகளை விளக்கியிருக்கிருர். "அந்நியன் ஒருவன் தான் வென்ற நாட்டு மக்களுக்கு எந்நாளும் ரக்ஷகனுக இருக்க முடியாது. ஒரு நாட்டு மக்களுக்கு அந்நாட்டைச் சேர்ந்த ஒருவனே ரக்ஷகனுக இருக்க முடியும். அத்தகைய ஒருவனும் சாதாரண மனிதனைப்போலத் தன் சுயநலத்திற்காக மக்களைத் துன்புறுத்துவானுனல் அவனும் அவர்களுக்கு ரக்ஷகனுக இருக்க முடியாது. எனவே, ஒரு நாட்டு மக்கள் அந்த நாட்டைச் சேர்ந்த ஒருவனுக்குப் பணிந்து, விசுவாசமாக நடக்காவிட்டால், அச்சமுதாயமும், ராஜாங்கமும் உள்நாட்டு பலவீனத்தாலும், வெளி ஆக்கிரமிப்பாலும் நாசமடையும். அத்தகைய அதிகாரம் வகிப்பதற்குத் தக்க ஒருவன்பால் மாக்கியவெல்லியின் மனம் விழைகிறது. அதனுல்தான், பொறுப்புணர்ச்சி, சுயநலமின்மை, மக்கள் பணிக்குத் தன்னை அர்ப்பணித்துக்கொள்ளும் தியாகச் சித்தம், ராஜ்யத்தின் நலனுக்காகத் தன் சகோதரனைக்கூடக் கொலை செய்யும் கடுஞ் சித்தம்—இத்துணை குணங்களையும் கொண்டிருந்த ரோமூலஸ்ஸை மாக்கியவெல்லி உதாரணமாக எடுத்துக் காட்டுகிருர். தன்னுடைய தேச நலனுக்காகவும், பொதுச் சமுதாய நலனுக்காகவுமே வாழ விரும்பும் அரசன் அல்லது தலைவன் அதிகாரம் முழுவதையும் தன் கையி

லேயே வைத்திருக்கவேண்டும்; அப்படிப்பட்ட அரசன் அல்லது தலைவன் ஒரு ராஜ்யத்தை அல்லது குடியரசை நிறுவி நிலைநாட்டுவதற்காக எடுத்துக்கொள்ளும் அசாதாரணமான, கடுமையான நடவடிக்கைகளுக்காக அவனை அறிவாளிகள் கண்டனம் செய்யக்கூடாது. உள்நாட்டில் எழுந்திடும் கலகங்களையும், அவற்றுக்குக் காரணமான கலகக்காரர்களையும், அயல்நாட்டு ஆக்கிரமிப்பாளர்களுக்காக உள்நாட்டில் வேலை செய்யும் சூழ்ச்சிக்காரர்களையும் ஒடுக்கித் தடுப்பதுதான் அவனுடைய அதி முக்கியமான கடமையாகும். இந்தக் காரியத்தில் மத சம்பந்தம் எதுவும் இருக்க முடியாது. மனிதர்களை ஒழுக்கமுள்ளவர்களாக ஆக்கும் வேலை அரசைச் சேர்ந்ததல்ல. சமூகத்தில் வாழும் சிறந்த சீலர்களின் வாழ்க்கையின்—போதனைகளின் மூலமே நல்லொழுக்கம் மக்களிடையே பரவவேண்டும். மத ஸ்தாபனங்களோ, கழகங்களோ, மடங்களோ தங்களுடைய ரகஸ்யச் செயல்கள் மூலமோ அல்லது நேரடி நடவடிக்கைகள் மூலமோ சமுதாயத்தின் அரசியல் வாழ்க்கையைச் சீர்குலைத்துவிட்டு, அந்த நிலைமையைத் தங்களின் சொந்த லாபத்திற்குப் பயன்படுத்திக்கொள்ள முயலுமானால், அந்த முயற்சியை ராஜாங்கம் அனுமதிக்கவே கூடாது. அத்தகைய முயற்சிகளை அரசு அழித்துவிடுவதில் விருவிருப்புடன் நடந்துகொள்ள வேண்டும். தன் நாட்டிடம் அன்பில்லாது, அந்நிய நாட்டுத் தலைமையை அல்லது உதவியை நாடும் அரசியல் அல்லது மதப் போக்குகளையும், நாசவேலைக்காரர்களையும் அரசு ஒடுக்கியாகவேண்டும். கீழ்ப்படியாத உள்நாட்டு விரோதிகளையும், வெளிநாட்டின் கட்டளைப்படி நடக்கும் கயவர்களையும், அரசு இரக்கமின்றி நசுக்கியாகவேண்டும். இவ்வேலையில், ஈவு இரக்கமற்ற பலாத்காரத்தின் விசுவரூபமாகவே அரசு காணப்படவேண்டும்; ஆக்ரோஷத்துடன் நடந்துகொள்ளவேண்டும்" என்று மாக்கியவெல்லி தமது "அரசனி"ல் விரிவாக எடுத்

துரைக்கிறார். ராஜாங்க பலாத்காரத்தைப் பாராட்டும் அவர் மேலும் எழுதுவதாவது:

"எந்தக் குற்றத்தைத் தவறு என்று மனிதன் உணர வில்லையோ, தவறு செய்வது தன் உரிமை என்று எவன் கருதுகிறானோ அப்படிப்பட்டவனை அல்லது போக்கை ஒடுக்குவதற்கு இந்த பலாத்காரம் மிக மிக அவசிய மானது."

அவர் கூறுகிறபடி சட்டமியற்றுவோனின் வாழ்க்கை மக்களின் நலத்தை விருத்தி செய்வதிலும் அரசைக் காப்பதிலும் மூழ்கி முடிவடைகிறது. அவருடைய "அரச னுக்கு" அரசனுடைய வாழ்க்கையைத் தவிர வேறு தனி யான வாழ்க்கை இருக்கமுடியாது. தன்னலமற்ற—மக்களின் சமுதாய நலன்களில் எப்போதும் அக்கரையுள்ள—வலிமை யுள்ள தோளினையுடைய அரசன் அல்லது தலைவனையே மாக்கியவெல்லி விரும்புகிறார். அவர் கூறுவதாவது:—

"அரசன் வேறு; சாதாரண மனிதன் வேறு. சாதா ரண மனிதன் தான் கொடுத்த வாக்குறுதியின்படி நடக்க வேண்டியிருக்கிறது; அன்புடன் பழக வேண்டியிருக் கிறது; ஆதரவு காட்ட வேண்டியிருக்கிறது; நண்பனிடம் உண்மையுடனிருக்க வேண்டியிருக்கிறது. இந்தக் கடமை களும் சுதந்திரமும் அரசனுக்குக் கிடையாது. அரசன், ராஜாங்க நோக்குடன், ராஜாங்கம் சொல்கிறபடி, ராஜாங்க அவசியத்தை யொட்டியே நடக்க வேண்டிய வன். அவனுக்குத் "**தனது**" என்ற எதுவும் இருக்க முடியாது; இருக்கவும் கூடாது."

துன்மார்க்கம் என்றால் என்ன என்பதுபற்றி அவர் விரிவாக ஆராய்ந்திருக்கிறார். அவர் கூறுகிறார்:—

"*(1)* உலகாயதத் தேவைகளைப் பூர்த்தி செய்வ தற்கே அரசு இருக்கிறது; *(2)* அரசனோவெனில் வலி

மைத் தத்துவத்தின் விசுவரூபன் ; (3) ராஜாங்கத்தை மட்டிலுமே அவன் நேசிக்க வேண்டும் ; (4) மனிதர் களுடைய சஞ்சல புத்தியே அவர்களைக் குறுகிய திருஷ்டி யுள்ள சுயநல வாதிகளாக மாற்றி விடுகிறது; (5) சமு தாயத்தைவிட அதை நடத்துகிற அரசே உயர்ந்தது ; (6) சாதாரண மனிதர்களின் ஒழுக்கத்தைப்பற்றி அரசு கவலைப்பட வேண்டியதில்லை. அவர்களை, ராஜாங்கக் கட் டளைக்குட்பட்டு நடக்க வைப்பதுதான் அரசின் தனிப் பெரும் ஆற்றலாகும்......ராஜ்யத்தை அமைத்து, காத்து, அதன் பரப்பை விரிவாக்கும் மூவகைக் கடமைகளில் அரசு ஈடுபடுகிறது. ராஜ்யத்தின் மொத்த நன்மைக்கே அது பாடுபடுகிறது. அதனல், பொதுநலனுக்காகப் பாடு படும்படி அனைவரையும் கட்டாயப்படுத்த அதற்குப் பூரண உரிமையுண்டு."

தனது சமுதாயத்தின் நன்மையை நாடுகிறவனே, தன் நாட்டை எல்லா விதத்திலும் உயர்த்தி, அதை எந்நாளும் காப்பவனே நல்ல மனிதன் என்றும், அதைத் தவிர வேறு எதையும் செய்வதற்கு அவன் சிந்திக்கமாட்டான் என்பதை எடுத்துரைக்கும் ரீதியில் அவர் தமது "உரையாடலில்" கூறுவதாவது:—

"அரசன் என்பவன் "**தான்**" என்ற சாதாரண மனித உணர்ச்சிக்கும் மேம்பட்டவன் ; அவனுடைய ஒழுங்கு படுத்தும் வேலைதான் அவனுடைய ராஜாங்கக் கடமை யாகும்; ராஜ்யத்தின் வாழ்வும்—தாழ்வுமே அவனுடைய வாழ்வும்—தாழ்வும் ஆகும் ; அவன் எவ்விதச் சுயநலத் தையும் அறியான்; மக்களின் வெறுப்பையும் பொருட் படுத்த மாட்டான்; பொது நன்மைக்காக, அவசியம் நேரி டும்பொழுது பலப்பிரயோகம் செய்ய அவன் தயங்கான்; ரோமூலஸ்ஸைப் போலவே அவனும் ஆள வேண்டும் ;

அவனது கடுமையான பலப்பிரயோகம் ஒரு சிலரைத் தான் துன்புறுத்தும்; அவ்விதப் பலப்பிரயோகத்தை அவன் அமுல் செய்யாவிட்டால், ராஜ்யம் முழுமைக்குமே அபாயம் நேரிட்டுவிடும்...... ராஜாங்கம் சமுதாயத்திற்கும் முந்தையது. பரஸ்பர மனித பந்தங்களால் பிணைக்கப்பட்டதே முழு சமுதாயமும். அரசு ஏற்பட்ட பிறகே இந்தப் பிணைக்கப்பட்ட சமுதாயமும் தோன்றியிருக்க வேண்டும். ஏனெனில் அரசின்றி நியாயமும் அமைதியும் ஏற்பட முடியாது; அதாவது, ராஜாங்கத்தின் மூலமே அமைதியும் ஒழுங்கும் ஏற்படுகின்றன. ஆகையால் சமுதாயத்தில் மனிதர்களுக்காக அரசால் நிர்ணயிக்கப்பட்ட ஒழுக்க விதிகளை அரசன் பின்பற்ற வேண்டுமென்பதில்லை. தனி மனிதனுக்காக நிர்ணயிக்கப்பட்ட அந்த விதிகளுக்கும் மேம்பட்டவையே அரசும் அரச பதவியும்...... மதத்தின் நிலை என்ன? ஒழுக்க விதிகளைப் போன்றே, மதமும் அரசுக்கு மேம்பட்டதல்ல. அரசிற்குப் பணிந்து நடக்குமாறு மக்களுக்குப் போதிப்பதே மதத்தின் வேலையாகும். மதம் அரசுக்கு உட்பட்டு அதற்கு உதவியாக இருக்க வேண்டுமேயொழிய அரசின் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடாது. நாட்டின் பாதுகாப்பு அல்லது நன்மை என்ற பிரச்னை எழும்போது நியாயம், அநியாயம் கருணை, கொடுமை, புகழ், மாசு என்றெல்லாம் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்க முடியாது. எதையெல்லாம் செய்ய வேண்டுமோ, அதை அனைத்தையும் தீரமாகச் செய்து, நாட்டின் சுதந்திரத்தையும் அமைதியையும் அரசு காப்பாற்றியாக வேண்டும்.''

தன்னுளடங்கிய சகல மனிதர்கள் மீதும்—ஸ்தாபனங்கள் மீதும் சர்வ வியாபக அதிகாரத்தைக் கொண்ட அரசிற்கு எல்லோரும் கீழ்ப் படிந்து விசுவாசமாக நடக்க வேண்டும் என்று மாக்கியவெல்லி திரும்பத் திரும்ப வற்

புறுத்தியிருக்கிறார். சுயேச்சையாக இயங்கும் படைகளும், தனிப்பட்ட ஸ்தாபனங்களும் அரசிற்கு எதிராகப் போகக் கூடுமாதலால் அவைகளைச் சுதந்திரமாக இயங்க விடுவது பேராபத்தாகும் என்று அவர் நினைக்கிறார். இப்படிப்பட்ட சுயேச்சைப் படை—கூலிப் படைகளைப்பற்றி அவர் விரிவாக எடுத்துரைப்பதை முன்னொரு அத்தியாயத்தில் வாசகர்கள் படித்திருப்பார்கள். ராஜ்யாதிகாரத்திற்கு எதிராக எந்தத் தனி அல்லது கூட்டு அதிகாரத்தையும் அவர் சகிக்கவில்லை. '**அரண்மனைக்கு எதிர்மனை**' ஏற்படுவதை அவர் தீவிரமாக எதிர்க்கிறார்.

ராஜாங்கத்திற்கு அவசியமான படைகளைப்பற்றி அவர் அனேக அத்தியாயங்கள் எழுதியிருக்கிறார். இதைப் பற்றி அவர் கூறுவதாவது :—

"நல்ல பயிற்சி பெற்ற படைகளாலும், சிறந்த சட்டங்களாலுமே ராஜ்யங்கள் நிலைக்கின்றன. படைப் பலம் இல்லாவிட்டால் நல்ல சட்டங்களும் பயனற்றுப் போய்விடும்...... படைப் பலத்துடன் வருங் காலத்தை அறிகிறவர்களே வெற்றி அடைகிறார்கள். படைப் பலமில்லாதவர்கள் அழிகிறார்கள்...... லஞ்சம் நிறைந்து சீர் குலைந்துவிட்ட ஒரு நகரத்தின் அரசன் அதன் அரசியல் அமைப்பை மாற்ற வேண்டுமாயின், பலாத்கார முறைகளையே அவன் கைக்கொள்ள வேண்டும்...... கொடுங்கோன்மையான அடிமை நிலையில் வாழ்ந்து பழகியவர்களை சுயேச்சையான வாழ்க்கைக்குப் பழக்குவது என்பது அவ்வளவு சுலபமல்ல. கூண்டிற்குள் அடைபட்டுக் கிடந்து, பின் வெளி வந்த அவர்கள் மிருகங்களைப் போல வெறி பிடித்து வாழ நினைப்பது கண்கூடு......அது மட்டுமா? சுயேச்சையான வாழ்க்கைக்கு மக்களைப் பழக்க முற்படும்போது, முந்தையக் கொடுங்கோலாட்சியை ஆதரித்தவர்களின் எதிர்ப்புக்கும் புதிய அரசு ஆளாக

நேரிடும். அப்படிப்பட்டவர்களை ஒடுக்கவும், சுயேச்சை யான வாழ்க்கைக்கு மக்களைச் செவ்வனே பழக்கவும் அரசிற்குப் படை வலிமை இன்றியமையாத **அரசியல் தேவை** என்பதை மறந்துவிடக் கூடாது.''

மாக்கியவெல்லியின் அரசன் அல்லது தலைவன் பலவீனம்—சஞ்சல புத்தி—முரண்பட்ட சிந்தனை—ஒழுக்கமின்மை—ஏமாற்றம் முதலியன நிறைந்த மனித வர்க்கத்தைச் சேர்ந்தவன்தானு? அல்லது வெறும் 'சொப்பன' புருஷனு?—இப்படிச் சர்ச்சை செய்பவர்கள் பலர் இருக்கிறுர்கள்! ஆயினும், தமது "அரசனை"ப்பற்றி, மாக்கியவெல்லிக்கு எவ்விதக் குழப்பமோ சந்தேகமோ ஏற்பட்டிருந்ததாகவே தெரியவில்லை!

ஒரு ராஜாங்கமாக இணைக்கப்படும் சமுதாயத்தின் செயல்களை மிகவும் தெளிவாக வகுத்துவிட வேண்டுமென்ற ஆர்வத்துடன்தான், அவர் தம் ராஜீய சித்தாந்தத்தை வெளியிட்டிருக்கிறுர் என்பது தெரிகிறது.

சாதாரண மனிதனுக்கு அப்பாற்பட்டதும், மேம்பட்டதும், 'தெய்வீக'மானதுமான அரச பதவியை, "அறிவின் உறைவிடம்; ஆற்றலின் மூலஸ்தானம்; கம்பீரத்தின் சின்னம்; கீர்த்தியின் முதலிடம்'' என்றெல்லாம் அவர் வர்ணிக்கிறுர். வல்லமையுள்ளவனின் மரண பயமில்லாத வீர வாழ்வின் மூலம் அரசு அதிகாரம் செலுத்தவேண்டும் என்றும் அவர் திட்ட வட்டமாக ஒரு தடவையல்ல, பல தடவைகளில் பல இடங்களில், கூறியிருக்கிறுர்.

"மனிதர்களுக்கு மேம்பட்டவன் அரசன்" என்று சாதிக்கும் அவரே, அமரத்வம் அடைந்த மனிதப் பெரியோர்களையும், அவர் தம் சாதனைகளையும் போற்றிப் புகழ்கிறுர். "சரித்திரப்படி பார்த்தாலும் சரி, நன்ருகச் சிந்தனை செய்து பார்த்தாலும் சரி, ராஜாங்கத்தின் சாதனைகள் எனப்படுபவைகள் எல்லாம் ராஜதந்திரிகளின் சாதனை

களேயாகும்; ராஜதந்திரிகள் இல்லாத ராஜ்யங்களும் அரசன் அல்லது தலைவன் இல்லாத ராஜ்யங்களும் இருக்கவே முடியாது'' என்று அவர் கூறுவதன் மூலம் ராஜ தந்திரத்திற்கு அவ்வளவு முக்கியத்துவம் தந்திருக்கிறார்.

ராஜ்ய பாரத்தை ஏற்கவல்ல அதைத் திறமையுடன் வகிக்கவல்ல தலைவனையோ அல்லது ராஜ தந்திரியையோ சுலபமாகத் தேர்ந்தெடுத்துவிட முடியாது. அப்பதவிக்குரிய சகல லட்சணங்களையும், குணச் சிறப்புக்களையும் கொண்ட ஒருவனை எளிதில் கண்டுபிடித்துவிட முடியாது. ஒரு சமுதாயம் அல்லது அரசிற்குத் தலைமை வகித்து ஆண்ட மனிதர்களை 'விதியால் ஏவப்பட்ட' மனிதர்களென சில சரித்திரங்கள் கூறுகின்றன; மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மேலான பதவியை வகித்தவர்களைப் பற்றியும் சில சரித்திரங்கள் கூறுகின்றன. சாதாரண மனிதர்களால் கண்டு பிடிக்கப்பட்டு அரசனாகவோ அல்லது தலைவனாகவோ பதவி வகித்துப் பெரும் புகழ்பெற்ற பெரும் தீரர்களைப் பற்றி மாக்கியவெல்லி தமது "உரையாடலில்'' விரிவாக எழுதியிருக்கிறார். ராஜ்யாதிகாரத்தைத் தனது தோள் வலிமையால், துணையின்றித் தாங்குவதற்காக நியமிக்கப்படுவோரான சாதாரண மனிதர்களின் ஆசைகள், கஷ்டங்கள், பிரச்னைகள் இவைகளைப் பற்றியும் அவர் வெகுவாகச் சிந்தனை செய்திருக்கிறார் என்பதை அவருடைய "உரையாடலி''லிருந்து நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

"சாதாரண காலங்களிலும் உள்நாட்டு விவகாரங்களிலும் அரசன், அல்லது தலைவன் மக்களுடைய ஆலோசனைகளையும், அபிப்பிராயங்களையும் நம்ப வேண்டும். ஏனெனில் கெட்ட சாவகாசத்தாலும், களைப்பாலும், ஆத்திரத்தாலும், வெறுப்பாலும், சோம்பலாலும் அவனுடைய புத்தி கெட்டுவிடவும் கூடும்,'' என்று கூறு

வதன் மூலம் மக்களின் அபிப்பிராயங்கள்—ஆலோசனை களுக்குப் பெரும் மதிப்புக் கொடுக்கிறார்.

ராஜ்யத் தலைவனின் குணங்களை அலசி ஆராய்வதற்கும் நடைமுறை வாழ்வுடன், அத்தகைய குண விசேஷங்களை யுடைய மனிதர்களைப் பொருத்துவதற்கும் உள்ள வித்தியாசங்களையும், சிரமங்களையும், மாக்கியவெல்லி நுணுகி ஆராய்ந்து, ஒரு திட்டமான பரிகாரத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

ஆறும் அத்தியாயம்

ராஜாங்கத்தின் அடிப்படைக் கடமைகளும், ஆள்வோரின் சிரமங்களும்

ராஜ்யாதிகாரத்திற்கும், யாராலும் அசைக்க முடியாத அதன் ஈடு இணையற்ற சர்வவல்லமைக்குமே மாக்கியவெல்லி அதிக முக்கியத்துவம் கொடுக்கிருர். மற்றபடியான அரசியல், சமூகப் பிரச்னைகளை எல்லாம் அவர் இரண்டாம் பட்சமாகவே கருதுகிருர். தவிர்க்க அல்லது தடுக்க முடியாத சரித்திர மாறுதல்களின் விளைவாக ஏற்படும் ஒற்றுமைக் குறைவிலிருந்தும், நாசத்திலிருந்தும் ராஜாங்கத்தைக் காப்பாற்றி, அதைப் பலமானதாக அமைக்கவேண்டும் என்பதிலேயே அவருக்கு அதிக அக்கரை. அந்த அளவிற்கு அவர் தீவிரமாகச் சிந்தனை செய்திருக்கிருர்.

“சமாதான காலத்தில், உள்நாட்டுக் காரணங்களால் கூட அரசிற்கு பலக் குறைவு ஏற்படலாம்; மூலத்திலிருந்தும் அப்பலவீனம் தோன்றலாம். மூலஸ்தானப் பலவீனத்திற்கு அரசன் அல்லது தலைவனே பொறுப்பாளி. அதிகாரம் மனிதனைக் கெடுக்க வல்லது; அதிகாரம் மற்றவரைக் கலகம் செய்யவும் தூண்டுகிறது. கோட்டை கொத்தளங்களில் அதிக நம்பிக்கை வைக்கும் தலைவன் வெகு விரைவில் அழிந்துவிடுவான். எனவே, உள்நாட்டு விஷயங்களில் வெற்றியைத் தரவல்ல ராஜ தந்திரம், பலாத்காரமில்லாத வழியில் குடிகளின் ஒத்துழைப்பைப் பெறுவதுதான்” என்று மாக்கியவெல்லி எழுதியிருப்பதிலிருந்து, மக்களுக்கு, அரசாங்கக் காரியங்களில் ஈடுபடப் பரந்த வசதிகள் அளிக்

கப்படுவதால், அரசிற்கு நன்மையே ஏற்படும் என்று அவர் கருதியதாகவே தெரிகிறது. பலக் குறைவுகளைத் தவிர்ப்ப தற்கான திட்டங்களை அமைத்துக்கொண்ட குடியரசையே அவர் போற்றுகிறார். **ஜான் மார்லி** எழுதுகிறபடி "தன் சுய பலத்தில் நம்பிக்கை வைத்து, சுயேச்சையாக நடைபெறும் குடியரசேஎல்லாவற்றினும் சிறந்த ஆட்சிமுறை" என்பதில் மாக்கியவெல்லி நம்பிக்கை கொண்டிருந்தார். ஆயினும், குடி யரசானாலும் சரி, முடியரசானாலும் சரி அவருக்குக் கவலை யில்லை. "எந்த முறையிலும் ஆள்வோர் தமது படை பலத் தால் அசைக்க முடியாதவர்களாகவும், அறிவாளிகளாகவும் கர்ம வீரர்களாகவும், மனோ வலிமையுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும்" என்பதை அவர் வலியுறுத்திக் கூறத் தவறவில்லை.

ராஜாங்கத்திற்காக அவரால் சொல்லப்பட்ட சிபார்சு களால், பிரஜைகளுக்கு ராஜாங்க அலுவல்களில் அதிக மான பங்கு தரவேண்டுமென்ற அவருடைய விருப்பம் பாதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அதே சமயத்தில், ராஜாங்கத்தின் சட்ட திட்டங்களை மீறினால் கடுமையான தண்டனை கிடைக்கும் என்ற பயம், **எவ்வித ஆட்சி முறை யிலும்**, மக்களுக்கு இருந்தாக வேண்டும்; இருக்கும்படி யான ரீதியில் **ராஜாங்கக் கண்டிப்பு** இருக்கவேண்டும்; என்று கூறவும் அவர் தயங்கவில்லை. இவ்விஷயத்தில் அவர் சிறிதும் விட்டுக்கொடுக்கவில்லை என்றே சொல்லவேண்டும்.

ஒரு ராஜ்யம் எவ்வாறு சிதறுண்டு சீர்குலைந்துவிடு கிறது என்பதைப் பற்றி அவர் நன்றாக ஆராய்கிறார். ஒரு குடியரசையோ அல்லது முடியரசையோ நாசப்படுத்தவல்ல மூன்று முக்கியமான காரணங்களைப் பின்வருமாறு குறிப் பிடுகிறார் :

1. அந்த ராஜ்யக் குடிகளின் அளவுக்குமீறிய அடிமை மனப்பான்மை.

2. பிரிவினை வாதம்.

3. கட்டுக்கடங்காத தான்தோன்றித்தனம். ('தடி எடுத்தவன் எல்லாம் தண்டக்காரன்' என்ற பழமொழிப்படி.)

"இந்தப் பலவீனத்தின் காரணங்களை நன்கு உணர்ந்து அடிமை யுணர்ச்சியற்ற மக்களடங்கிய ராஜ்யத்தை அமைத்து, ராஜ்யத்தைப் பிரிவினைவாதிகளின் பிடிப்பிலிருந்து காத்து, சட்டம்-ஒழுங்கின்படி நடக்கும் நியாய புத்தியையும், தன்னடக்கத்தையும் மக்களுக்குப் புகட்டி, ஸ்திரமான ராஜ்யாதிகாரத்தை நிலைநாட்டுவதே ஒரு ராஜ்யத்தின் உறுதியான பாதுகாப்பு முறைகளாகும்" என்று அவர் குறிப்பிடுகிறார்.

சரித்திரத்தின் தவிர்க்க முடியாத தன்மையையும், மனிதனது இயற்கையான சுபாவத்தையும் மனத்திற்கொண்டு மாக்கியவெல்லி மூன்றுவித ராஜாங்க முறைகளைப் பற்றிப் பின்வருமாறு ஆராய்கிறார்:—

"(1) **முதலில் முடியரசு** ஏற்படுகிறது. அரசன் மிதமிஞ்சிய அதிகாரப் போதையில் வெறியாட்டம் ஆடும்போது, கொடுங்கோலாட்சி ஏற்படுகிறது. அச்சமயம், பிரபுக்கள், தங்களுடைய சுய நலத்திற்காகவோ அல்லது மக்களின் உரிமைகளைக் காக்கவோ அரசனுக்கு எதிராகச் சதி செய்து, புரட்சி செய்து, முடியரசைக் கவிழ்த்து விடுகிறார்கள். அப்பொழுதுதான் (2) **பிரபுத்துவ ஆட்சி** ஏற்படுகிறது. அவ்வாட்சியும், பிரபுக்களின் தீச் செயல்களின் விளைவாக நாளடைவில் பயங்கரமான ஆட்சியாக மாறிவிடுகிறது. அச்சமயம், மக்களின் குடிமையுணர்ச்சி வீறிட்டெழுகிறது; அதன் பயனாய் மக்களின் புரட்சி "ஆ"வென்று கிளம்புகிறது; மக்களின் ஆவேச எதிர்ப்புக்குமுன் நிற்க முடியாத காரணத்தால் பிரபுத்துவ ஆட்சி சரிந்துவிழுகிறது. அங்நிலை

யில்தான் (3) **குடிமக்கள் சொன்னபடி குடியாட்சி** உதய மாகிறது. அக்குடியரசுங்கூட, பேச்சு வன்மையால் மக் களை மயக்கும் கலகக்காரர்களின்—'பரிசுத்த' வேஷம் போடும் பாசாங்குக்காரர்களின் ஆட்சியாக மாறி, அதிகா ரத்துஷ்பிரயோகத்தில் இறங்கி, முடிவில் வீழ்ந்து விடு கிறது. அந்த நிலைமையே, மீண்டும் மன்னராட்சிக்கு வழி கோலுகிறது. சுழலும் சக்கரம் போல, இந்த மூன்று ஆட்சி முறைகளும் சுற்றிச் சுற்றி—மாறி மாறி வருகின் றன." மனிதனது இயற்கையான கெட்ட சுபாவம் காரண மாக ஏற்படும் எந்த முறை ஆட்சியும் தற்காலிகமானது தான் என்றும் அவர் சாதிக்கிறார். இதை விளக்கும் ரீதியில் அவர் கூறுவதாவது:—

"நல்லதற்கும் கெட்டதற்கும் உள்ள வேற்றுமை மிகவும் நுணுக்கமானது. இந்த உண்மையைச் சாதா ரண மனிதர்கள் அறிந்துகொள்ள முடியாது. எனவே, ஒரு விதமான ஆட்சி முறை வேறு விதமாக மாறாமல் இருப்பதற்கு மனிதர்கள் செய்யும் முயற்சிகள் பலனளிப் பதில்லை. இந்தச் சுழலில் மாறி மாறி வரும் எந்த முறை ஆட்சியாலும் எந்த ஆக்கிரமிப்பையும் எதிர்த்து நிற்க முடியாது. பலவீனத்தால் நிகழுகின்ற மாறுதல்கள் ராஜ்யத்தின் பலத்தையே கொஞ்சங் கொஞ்சமாக உறிஞ்சி விடுகின்றன. அதிர்ஷ்டவசத்தால் அந்நிய ஆக் கிரமிப்புக்கு ஆளாகாமல், பிறர் குறுக்கீடில்லாமல் இருக் கும் நாடும் உண்டு. ஆயினும், அந்த நாட்டிலுங்கூட ஆட்சி முறை மாறுதல் அடிக்கடி நிகழ்ந்து கொண்டுதா னிருக்கும்; அதாவது, அதன் உள் நாட்டிலும் அமைதி இருக்காது."

எல்லா ஆட்சி முறைகளிலும் உள்ள குறைபாடுகளை யும் மாக்கியவெல்லியின், அசாதாரணமான அறிவு கண் டறிந்தது. குறைபாடுகளை அகற்றவல்ல ஒரு நுட்பமான

வழியை—அதாவது வலிமையுள்ள ராஜாங்க அமைப்புக்கான திட்டத்தை அவர் ராஜதந்திரிகளுக்கு எடுத்துக் காட்டினுர். அரசியல் இயக்கங்களின் எழுச்சிகளையும், கொட்டங்களையும் அடக்கவல்ல—மிகவும் **சிக்கலான ஒரு ஆட்சி முறையையும்** அவர் வகுத்துக் காட்டுகிருர். அத்தகைய (அவர் வகுக்கும்) ஆட்சி முறையில், "பிரபுக்களும், மற்ற குடிகளும், ஊக்கமுள்ளவர்களும், பயப்படுகிறவர்களும், சங்கோசிகளும், கூச்சமில்லாதவர்களும், பணக்காரர்களும், ஏழைகளும் ஒருவரை யொருவர் கண்காணித்துக் கொண்டு, அமைதியாக வாழ்வர் ; அவர்கள் மூலமும்—அவர்களுடன் கூடியும் ஆளுகின்ற தலைவன் அல்லது அரசன் ராஜ்யத்தை வலிமையுள்ளதாகவும் திருப்தி நிறைந்ததாகவும் செய்வான்." **லைகர்கஸ்ஸின் கீழ் ஸ்பார்டாவில்** இத்தகைய அரசு நன்கு நடைபெற்றதாக மாக்கியவெல்லி எடுத்துக் காட்டுகிருர். அங்கே இத்தகைய கலப்பட ஆட்சி முறையில் "**கான்ஸல்**"களின் எதேச்சாதிகாரம், பிரபுக்களாலும், குடி மக்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளால் கட்டுப் படுத்தப்பட்டிருந்தது. காலச்சக்கரச் சுழற்சியால் நிகழ்ந் திடும் அரசியல்—சமுதாய மாறுதல்களுக்கேற்ப, அரசியல் பிரச்னைகளுக்கு மாக்கியவெல்லி, இந்தக் '**கலப்பட ஆட்சி முறை**' என்ற பரிகாரத்தைச் சமர்ப்பிக்கிருர். மாக்கிய வெல்லியின் இந்த ஆட்சி முறைச் சித்தாந்தம் அவருடைய தெளிந்த ஞானத்திற்கும், அனுபவ முதிர்ச்சிக்கும் மிகச் சிறந்த எடுத்துக் காட்டென வாதிக்கும் பல அறிஞர்கள் இருக்கிருர்கள். "மூவகைப் பிரிவினரும், அதாவது, அரசன்—பிரபுக்கள்—மக்கள் என்ற இம்மூன்று பிரிவினரும் கலந்து விடும் ஒரு ஆட்சி முறையின் கட்டுக்கோப்பான ராஜ்யாதிகாரத்தின் கீழ், ராஜ்ய நலன்கள் பாதுகாக்கப் படுகின்றன"—இவ்வாறு அவர் உறுதியாக நம்புகிருர். இந்த நம்பிக்கையை ஊர்ஜிதம் செய்யும் வகையில் அவர் மேலும் கூறுவதாவது :—

"பிரபுக்கள் பேராசையுள்ளவர்கள்; தங்களுடைய சொந்த நலத்திற்காகத் தம் ராஜ்யத்தையுங்கூட இழக்கச் சித்தமாயிருப்பவர்கள் ; மக்களோவெனில் எளிதில் ஏமாறுகிறவர்கள் ; சோம்பேறிகள் ; குறுகிய நோக்க முள்ளவர்கள் ; அடங்காப் பிடாரிகள் ; கலகக்காரர்கள்; ஆளும் பொறுப்பை ஏற்கச் சக்தியற்றவர்கள்; சந்தர்ப்ப வாதிகள்—பதவி வெறி பிடித்தவர்களின் 'வாய் வீச்சு'க் களில் மயங்கி, இரையாகிறவர்கள். புத்திசாலியான அரசியல்வாதி அவர்கள் அனைவரையும் ஆட்டி வைப் பான். இவ்வளவு மாறுபட்ட பிரிவுகள், ராஜ்யத்தை அழித்துவிடக் கூடாதல்லவா?...... அதற்காக அவர்கள் எல்லோரையும் ஒரு கலப்பட ஆட்சி முறையின் கீழ் அணைத்துக்கொண்டு செல்வதே சிறந்த ராஜாங்க—ராஜ தந்திர வழியாகும்."—மட்டற்ற நம்பிக்கை யுணர்ச்சியில், அவர் இந்த வழியைச் சிபார்சு செய்கிறார்.

ஏழாம் அத்தியாயம்

சுதந்திரமும்—உரிமைகளும்

எந்தச் சங்கமோ அல்லது கழகமோ அல்லது தனி நபரோ அல்லது கூட்டணியோ ராஜ்யத்தை அழித்துவிட முயல்வதை மாக்கியவெல்லி வெகு தீவிரமாக எதிர்க்கிறார். ஆயினும், அவர், மக்களின் சுதந்திரத்தையும், உரிமைகளையும் மறுக்கவில்லை. அவருடைய ராஜாங்க தத்துவத்தின் இந்த அம்சத்தைப்பற்றி அவர் தம்முடைய "உரையாடலி"லும், "வரலாற்"றிலும் (Story) மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். குடியாட்சி முறைக்குக் குடிமக்களின் சுதந்திரமான வாழ்வு இன்றியமையாதது என்றும், மக்களிடையே சமத்துவம் நிலவினாலன்றி அந்தச் சுதந்திர வாழ்வு ஏற்பட முடியாதென்றும் அவர் எண்ணுகிறார். அதே சமயம், "மக்களின் அறிவின் அளவை—ஆழத்தைப் பொருத்தே அவர்களின் சுதந்திரமும் சமத்துவமும் இருக்கின்றன" என்றும் அவர் கருதுகிறார். பொருளாதார சமத்துவம் இருந்தால்தான் அரசியல் சுதந்திரம் நிலைத்திருக்கும் என்றும், பொருளுற்பத்தி—வினியோகத்தில் **அரசின் ஆதிக்கமே** இருக்க வேண்டும் என்றும் அவர் தயக்கமின்றிக் கூறுகிறார். சுதந்திரமாயிருந்தும், சமத்துவமில்லாதிருந்த காரணத்தால் மிலானும், நேபிள்ஸும் தங்கள் சுதந்திரத்தையே இழந்துவிட்டன என்பதை அவர் சுட்டிக் காட்டுகிறார். "சுதந்திரம் எப்பொழுதும் சமத்துவத்தையே குறிக்கின்றது" என்று அவர் உறுதியாக நம்புகிறார்.

குடியரசு முறையின்பால் தமக்குள்ள பற்றுதலை அவர் பின் வருமாறு வெளியிடுகிறார் :—

"மக்களுக்கு நிஜமான சுதந்திரம்—நியாயமான சுதந்திரமெல்லாம் குடியரசில்தான் இருக்கும். பிரபுக்களும், சிற்றரசர்களும் மக்களின் சுதந்திரத்திற்கும், சமத்துவத்திற்கும் இடையூருக நிற்பவர்களே. பிரபுக்களின் கையில் ராஜ்யாதிகாரம் சிக்கிவிட்டால், அவ்வளவுதான்! ராஜ்யத்தில் சமத்துவ வாழ்வுக்கே இடமில்லாது போய் விடும்."

பிரபுக்களின் கொட்டத்தையும், அதிகார வெறியையும் ஒடுக்கியே யாகவேண்டும் என்று அவர் கர்ஜிக்கிருர். இந்தப் பிரபுக்களின் ஆதிக்க வெறியால், நேபிள்ஸ், ரோம், ரோமாக்ன, லம்பார்டி முதலிய இடங்களில் குடியரசுகள் தோற்றுவிட்டதையும் அவர் எடுத்துக் காட்டுகிருர்.

ராஜாங்கத்தின் அதிகாரத்திற்குக் கேடு ஏற்படாத வரை, மக்கள் சுதந்திரமாயிருப்பதை மாக்கியவெல்லி எதிர்க்கவில்லை. பிரபுத்துவத்தின் மீது அவர் காட்டும் ஆவேச எதிர்ப்பு, மக்களின் சுதந்திரத்தில் அவருக்கிருந்த திடமான நம்பிக்கையின் விளைவாக ஏற்பட்டதேயாகும்!

மனிதர்களிடையே நிலவும் ஏற்றத் தாழ்வுகளுக்கு **ஏழ்மையும்—ஐசுவரியமுமே** காரணங்களென அவர் குறிப்பிடும்போது பின் வருமாறு எழுதுகிருர்:—

"தங்களுடைய உயர்குலப் பிறப்பைப் பற்றிப் பெருமை யடித்துக்கொண்டு, ஆணவ போதையுடன் அடக்குவாரற்றுத் திரியும் இந்தப் பிரபுக்களால் நாம் தாழ்ந்துவிடவே கூடாது. ஏனெனில், **எல்லோரும் ஓர் குலமே**; எல்லோரும் ஒரே மண்ணில்தான் பிறக்கிருர்கள்; எல்லோருக்கும் புராதனக் குலச் சிறப்பு உண்டு. மனிதர்கள் அனைவரும் இயற்கையால் ஒரே மாதிரியாகத்தான் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். நம்முடைய ஆடைகளில் பிரபுக்களையும், அவர்களுடைய ஆடைகளில் நம்மையும் கண்டால்,

நாம் பிரபுக்களாகவும் அவர்கள் எளியவர்களாகவும் காட்சியளிப்பது நிச்சயம். எனவே, பணமும்—ஏழ்மையுமே சமுதாய ஏற்றத் தாழ்வுகளுக்குக் காரணங்களாகி விட்டன.'' மேலும், பொருளாதார சமத்துவம் இல்லாவிட்டால் ஏற்படும் விளைவைப்பற்றிக் கூறுகையில் அவர், ''**பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ராஜ்யத்தின் ஐக்யத்திற்கே உலை வைத்து விடும்**'' என்று எச்சரிக்கிறார். ''சுதந்திரம் எப்போதும் சமத்துவத்தையே குறிக்கிறது'' என்று முழங்கும் அவரே, ''ராஜ்யாதிகாரம் எப்போதும் ஏற்றத் தாழ்வையே குறிக்கிறது'' என்றும் கூறுகிறார். அப்படிக் கூறும் அவருடைய சிந்தனை ஆழத்தை நாம் ஆழ்ந்து கவனிக்க வேண்டும். **தனது ராஜ்யத்திற்கு எதிராகத் தன் ராஜ்யத்திலேயே இருப்பவர்களுக்குச் சுதந்திரம் கொடுப்பதற்கு அவர் ஒப்பவில்லை.** அதனால்தான் அவர் மிகக் கண்டிப்புடன் ''ராஜ்யாதிகாரம் என்பதில் **சமத்துவ பாவம்** இருக்க முடியாது; தனிப்பட்டவர்கள் ராஜ்யத்திற்கு விரோதமாக எழவே முடியாது'' என்று கூறுகிறார். இந்த ஆழ்ந்த கருத்தில்தான், ''**ராஜ்யாதிகாரமும், பிரஜையும் சம அந்தஸ்துடன் இருக்க முடியாது**'' என்கிறார் அவர். மேலும், ''ராஜ்யாதிகாரத்திற்கு எதிராக எவருக்கும் எவ்வித உரிமையும் இருக்க முடியாது. அராஜகத்திற்கு இட்டுச் செல்லும்—ராஜீய வாழ்வையே குலைத்துவிடும் எந்தப் போக்கையும் சுதந்திரம் என்றோ அல்லது உரிமையென்றோ கருத முடியாது'' என்கிறார் அவர்.

நியாயமான உரிமைகளைப்பற்றி விளக்கும் ரீதியில் அவர் கூறுவதாவது:—''**அதிகப்படியானவர்களுக்கு உதவியளிப்பதும், அதன் பயனாய் அதிகப்படியானவர்கள் திருப்தி கொள்ளுவதுமே நன்மை என்பதின் பொருளும்—தன்மையுமாகும்.**''

ஒருவனுடைய உரிமை அல்லது சுதந்திரம் மற்றவனின் சுகத்திற்கும், ராஜ்யப் பொதுநலனுக்கும் தடையாக இருக்

கக்கூடாது என்பதே மாக்கியவெல்லியின் கண்டிப்பான கருத்தாகும்.

மாக்கியவெல்லியின் வரிசைக் கிரமப்படி,

(1) ராஜ்யாதிகாரத்திற்கு முதலிடமும்,

(2) மக்கள் உரிமைகளுக்கு இரண்டாவது இடமும் அளிக்கப்படுகின்றன. அதாவது, எல்லா மக்களுக்கும்—உரிமைகளுக்கும் முதன்மையானதும், மேலானதுமான ராஜ்யாதிகாரத்திற்கே அவர் அளவற்ற முக்கியத்துவம் கொடுக்கிறுர். அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளை அனுபவிப்பதில், மக்களிடையே, அவர் ஏற்றத் தாழ்வை விரும்பவேயில்லை. மக்களும், பிரபுக்களும் ஒரே மாதிரியான உரிமைகளையும்—சுதந்திரத்தையுமே அனுபவிக்கவேண்டும் என்று அவர் விதிக்கிறுர்.

அரசின் அதிகாரத்திற்கும், மக்களுடைய உரிமைகளுக்கும் உள்ள உறவு முறை எப்படியிருக்க வேண்டும் என்று ஆராயும் அவர், "அடியிலிருந்து மேல் நோக்கிச் செல்லும் கோடுகளைப் போன்று, அரசின் அதிகாரத்திற்கும், மக்களுடைய உரிமைகளுக்கும் உள்ள உறவு முறை இருக்க வேண்டும்" என்று விளக்கமாகக் கூறுகிறுர். அவ்வித உறவு முறையே ராஜ்ய ஐக்யத்திற்கும், சுதந்திரத்திற்கும் இன்றியமையாதது என்கிறுர் அவர்.

"அரசன் அல்லது தலைவன் பாரபட்சமில்லாமல் எல்லோரையும் சம திருஷ்டியுடன் பார்த்துக்கொள்ள வேண்டும்; இந்தச் சம நோக்கே ராஜதந்திர திருஷ்டிக்கு அதிக ஒளியைத் தரவல்லது"—இவ்விதமும் அவர் எழுதியிருக்கிறுர்.

'**பொதுஜன அபிப்பிராயம் என்பதே முடிவான அதிகாரம்**' என்பதை மாக்கியவெல்லி ஒப்புக்கொள்ளவில்லை! இதுபற்றி அவர் ஓரிடத்தில் பின்வருமாறு குறிப்பிடுகையில்:—"**ராஜாங்க அதிகாரத்திற்கும் மேலதிகாரம்** என்று ஒன்

றிருப்பதை நான் சகிக்கமாட்டேன். ‘பொதுஜன அபிப்பிராயமே முடிவான அதிகாரம்’ என்பது வெறும் தர்க்க வாத பல்டிதான்; வெறும் நடிப்புதான்” என்று கூறிக் கண்டிக்கிறார்.

ராஜாங்கத்திற்கும்-அதன் அதிகாரத்திற்கும் மேலான ஸ்தாபனமோ அல்லது மேம்பட்ட அதிகாரமோ எந்த நிலையிலும் எந்த ரூபத்திலும் இருக்கவே முடியாது; அரசாங்கத்திற்கு அனுசரணையாகவே மக்களின் உரிமைகளும்—சுதந்திரமும் இருக்கவேண்டும் என்ற அபிப்பிராயத்தை அவர் திரும்பத் திரும்பப் பல சந்தர்ப்பங்களிலும் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்.

எட்டாம் அத்தியாயம்

ராஜாங்கமும்—குடிகளும்

ராஜாங்கத்தின் சகல அதிகாரங்களும் மத்தியமான கேந்திர ஸ்தானத்தில் குவிந்திருக்க வேண்டும் என்று மாக்கியவெல்லி வற்புறுத்துவதோடு மட்டும் நின்றுவிட வில்லை; அரசாங்க அலுவல்களில் கலந்துகொள்ளும் ரீதியில் பிரஜைகளுக்குப் பூரண வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும் என்றும் அவர் வற்புறுத்துவதற்கு மறக்கவில்லை. அவர், தமது "உரையாட"லில், குடிகளுக்கு ராஜாங்க அலுவல்களில் கலந்து கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று தம் "தலைவ"னுக்குப் புத்திமதி கூறுகிறார். ஆயினும், சிறந்த சட்டங்களைச் செய்வதும், ராஜ்யத்தை உறுதியாக ஆள்வதும் அரசன் அல்லது தலைவனுடைய **ஏகபோகப் பொறுப்புதான்** என்று அவர் நிச்சயமாகக் கூறுகிறார். அவர் கூறுவதாவது :—

> "உண்மையான ஒற்றுமை ஏற்பட வேண்டுமாயின், மக்கள் நிரந்தரமான சுகத்தை அனுபவிக்க வேண்டுமாயின், ராஜ்யாதிகாரம் முற்றிலும் **ஒருவனிடத்திலேயே** குவிந்திருக்கவேண்டும்; அவன் கைப்பாடாகவே எல்லாத் திட்டங்களும் அமுலாக வேண்டும்."

ஒருவனின் திடமான சங்கல்பத்தாலும், வல்லமையாலும் உருவாகும் ராஜ்யாதிகாரத்தில், அரசன் அல்லது தலைவன், **ராஜ்ய நல அடிப்படையில்** தன் குடிமக்களுக்கு ராஜ்ய அலுவல்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை அளிப்பதில் எவ்விதத் தவறுமில்லை என்றே நினைக்கிறார். அதே சமயத்

தில், அவன் தன் குடிமக்களுக்கு அவ்வித வாய்ப்பளிப்பதற்கும் குடிமக்கள் அவ்வித வாய்ப்பை அவனிடமிருந்து பெறுவதற்கும், அவர், மிக ஜாக்கிரதையாக எல்லைக்கோட்டையும் நிர்ணயிக்கிறார். ராஜ்யம் சிதைவுறாமல் ஸ்திரமாக இருக்க வேண்டும் என்பதே அவருடைய முக்கியமான நோக்கமாகும். அதே மூச்சில், "**மட்டற்ற அதிகாரம் மனிதனைக் கெடுத்துவிடவல்லது**" என்றும் கூறத் தவறவில்லை.

எதேச்சாதிகாரம் நிரந்தரமாக நீடிக்கக்கூடாது; அதற்காகத்தான் குடிமக்கள் ராஜ்ய அலுவல்களில் ஈடுபட வேண்டும்; அதற்கான வசதிகளை அரசன் அல்லது தலைவன் குடிமக்களுக்கு அளிக்க வேண்டும்; அதுவும், **பக்குவமான சமயத்தில்** செய்ய வேண்டும் என்பது அவருடைய ஆழ்ந்த அபிப்பிராயமாகும்.

மேலும் அவர் கூறுகிறார்:

"ராஜ்யாதிகாரம் பலம் பொருந்தியதாகச் செயல்பட வேண்டுமானால், நல்லோரின் ஆசி அதற்கு இருக்கவேண்டும். குடி மக்களின் சம்மதத்தையும், ஆதரவையும் பெறுவதே ராஜாங்கத்தின் முக்கியக் கடமையாக இருக்கவேண்டும். அத்தகைய ஆதரவே ராஜாங்கத்தின் உண்மையான பலமாகும். அப்போதுதான் அரசு நீடித்து நிலையாக நிற்க முடியும்."

"கோட்டை கொத்தளங்களில் ராஜாங்கத்தின் பலமில்லை. மக்களின் இஷ்டபூர்வமான ஆதரவில்தான் ராஜாங்கத்தின் பலமிருக்கிறது. அரசன் அல்லது தலைவன் இதை உணர்ந்து நடக்கவேண்டும்"

என்று தமது "உரையாடலி"ல், குடிமக்களின் ஆதரவு அரசிற்கு எவ்வளவு இன்றியமையாதது என்பதை வற்புறுத்துகிறார் மாக்கியவெல்லி.

அரசன் அல்லது தலைவனின் கண்டிப்பான உத்திரவாலும், அவ்வுத்திரவுக்குட்பட்டு மக்கள் அளிக்கும் ஆதர

வாழும் ராஜாங்கம் செயல்படவேண்டுமேயல்லாது, மக்களே முற்றிலும் நம்பியோ அல்லது அவர்களின் தயவாலோ அல்ல என்பதே மாக்கியவெல்லியின் தெளிவான கருத்தாகும்.

> "குடிகளின் அன்பையும், ஆதரவையும் பெறுவதோடு மட்டும் அரசன் அல்லது தலேவன் நின்றுவிட முடியாது; அதுவே முடிவானதுமல்ல; அதில் சிறிதேனும் ராஜதந்திரச் சாதுர்யம் கிடையாது; எப்போதும் படை வலிமையைத்தான் அவன் அதிகமாக நம்பவேண்டும்; மக்கள் அன்பை மட்டும் அல்ல"

என்று அவர் கூறவும் செய்கிருர்.

தமது "உரையாடலி"ல் அரசர்கள் (பிரபுக்களேயே குறிப்பிடுகிருர் போலும்!) குடிகளேவிட நன்றி கெட்டவர்களாக இருக்கிருர்கள் என்றும், குடிகளின் நன்றி மறக்கும் போக்கு அவர்களின் சாதாரணத் தவறுகளால் ஏற்படுகின்றது என்றும், குடிகளின் நன்றியின்மை அதிகக் கெடுதலே விளேவித்துவிடாது என்றும், மேலும், அரசர்களேக் காட்டிலும் மக்கள் அறிவாளிகளாக இருக்கிருர்கள் என்றும் மாக்கியவெல்லி ஒரு இடத்தில் குறிப்பிடுவதைக் கவனிக்க வேண்டும்.

> "டைடஸ்லிவியால் உறுதியாகக் கூறப்பட்ட அபிப்பிராயத்திற்கு மாருக, மக்கள் அரசனேவிட அதிக நம்பிக்கையும், நன்றியும், நாணயமும் உள்ளவர்களாக இருக்கிருர்கள் என்றும், சமயத்திற்கேற்ப நடந்துகொள்ளும் சாமர்த்தியம் உள்ளவர்கள் என்றும் நான் திடமாகக் கூறுவேன்......நியாயத்தின் பக்கம் சேருமாறு அவர்கள் எப்பொழுதெல்லாம் அழைக்கப்படுகிருர்களோ, அப்பொழுதெல்லாம் முழு மனத்துடனும், களிமுகத்துடனும்

அழைப்பை ஏற்றுக்கொண்டு உயிர்த் தியாகம் செய்ய அவர்கள் முன் வருவார்கள்''

என்றும் அவர் கூறுகிறார்.

உள்நாட்டு விவகாரங்களை நன்கு புரிந்துகொண்டு கவனித்துக்கொள்வதில் அரசர்களைக் காட்டிலும் மக்கள் மிகத் தகுதியானவர்கள் என்றும், அதற்கான விசேஷமான வசதிகளும்—வாய்ப்புகளும், ஒப்பிட்டுப் பார்க்கும் திறனும் மக்களிடத்தில் நிறைய இருக்கின்றன என்றும் அவர் கருதுகிறார். அவர் எழுதுவதாவது :

“குடிகள் ஒரு அயோக்கியனை மேலான பதவிக்குத் **தெரிந்து** தேர்ந்தெடுக்கமாட்டார்கள். ஆனால் அரசன் அவ்வாறு செய்யமாட்டான். சமயத்திற்கேற்பத் தங்களுடைய மனப் போக்கையும், நடைமுறையையும் குடிகள் மாற்றிக்கொண்டுவிடத் தயங்கமாட்டார்கள். ஒரே வித வாழ்க்கையில் லயித்துப்போன அரசனேவெனில், புதிய சந்தர்ப்பத்திற்கேற்ப நடந்துகொள்ளத் தவறுவான். மக்கள் மனத்தை அன்பினால் கவரவும் முடியும்; மாற்றவும் முடியும். ஆனால், அரசனின் மனத்தையும், போக்கையும் **வாள் வலியால்**தான் மாற்ற முடியும். எந்த நகரங்களில் குடிமக்களின் செல்வாக்கு அதிகமிருக்கிறதோ அங்கெல்லாம் முன்னேற்றம் குறைந்த காலத்திற்குள்ளேயே ஏற்படுகிறது. அந்த முன்னேற்றம் அரசன் சிருஷ்டிக்கும் முன்னேற்றத்தைவிடத் துரிதமாகவும், சிறப்பாகவுமிருக்கிறது.''

எனவே அவர் குடி மக்களை மேலானவர்களாக மதிக்கிறார்; குடியரசில் அவர்களுடைய செல்வாக்குக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்; ஆனாலும், ராஜாங்கத்தின் அதிகாரத்தை அவர்களுக்குப் பிரித்துக்கொடுக்க அவர் சிறிதும் சம்மதிக்கவில்லை. **“அதிகாரம் என்பது அரசாங்கத்**

திற்கே உரியது'' என்று அவர் தம்முடைய பல நூல்களிலும் முழக்கம் செய்கிறார். ராஜ்ய நலனுக்குத் தேவையான மக்கள் ஆதரவை ராஜ்யாதிகாரத்தின் மூலமே பெறவேண்டும் என்பது அவருடைய வாதம். மக்களிடையே காணப்படும் குறைபாடுகளுக்கு ராஜ்யாதிகாரத்தின் கவனக் குறைவுதான் காரணம் என்கிறார். ஆளுகின்ற அதிகாரத்தின் வல்லமை குறையும்போதுதான், மக்களிடையே தவறுகள் மலிகின்றன என்பது அவருடைய சந்தேகமில்லாத அபிப்பிராயமாகும்.

ராஜ்யாதிகாரம் என்பது பெரும் சம்பத்து என்றும், அதை அரசன் எந்நாளும் துச்சமாக மதிக்கக்கூடாது என்றும், அவன் சதா காலமும் மேலும் மேலும் வல்லமையைப் பெறவே விரும்பவேண்டும் என்றும் அவர் கூறுகிறார்.

சமுதாயம் எப்போது க்ஷேம நலனை அடைய முடிகின்றது என்பதை விளக்கும் ரீதியில் அவர் கூறுவதாவது :—

> ''குடி மக்களின் மனப்பூர்வமான ஒத்துழைப்புடன் செயல்படும் குடியரசில் தான் சமுதாயம் க்ஷேம நலனைப் பெறமுடியும். ஏனெனில், குடியரசில் ஆளப்படுவோருக்கு நன்மையாக இருப்பது ஆள்வோருக்குத் தீமையாக இருக்கின்றது.''

சுய நலத்திற்காகப் பேயாட்டமாடும் மித மிஞ்சிய எதேச்சாதிகார வெறியை அவர் எவ்வளவு வன்மையாகக் கண்டிக்கிறாரோ அவ்வளவு வன்மையாக மக்களின் குறைபாடுகளையும் அவர் கண்டிக்கிறார்.

> ''எங்கெல்லாம் மிதமிஞ்சிய எதேச்சாதிகாரம் ஏற்படுகின்றதோ, எங்கெல்லாம் மக்களிடையே பலவீனங்கள் மண்டிக் கிடக்கின்றனவோ அங்கெல்லாம் முன்னேற்றம் ஏற்படுவதில்லை''

என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அவரது மகா புருஷனாகிய அரசனை அல்லது தலைவனை அவர் சாதாரண மனிதர்களுடன் ஒப்பிடத் தயாராயில்லை; ஆதிக்க வெறிபிடித்த எதேச்சாதிகாரிகளுடனும் ஒப்பிட விரும்பவில்லை.

அவருடைய மகா புருஷனாகிய அரசன் அல்லது தலைவன் ஆளப் பிறந்தவன்; அதிகார ஒளிபடைத்த கண்ணினன்; உறுதிகொண்ட நெஞ்சினன்; கடுமைகொண்ட தோளினன்; தெளிவுபெற்ற மதியினன்; சிறுமையைக் கண்டு பொங்குபவன்; ஏறுபோல நடப்பவன்; ஒளியிழந்த நாட்டினுக்குக் களையொளியைத் தருபவன்; வெற்றி கொண்ட கைகளையுடையவன்; கருதியதைச் செய்யும் பேராற்றல் உள்ளவன்; நாடெல்லாம் ஒன்றுபட்டிருக்குமாறு பெரும் செயலைச் செய்ய வல்லவன்.

சுயநல வெறிகொண்ட பிரபுக்களிடம் மிக ஜாக்கிரதையாக அரசு இருக்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துவதற்காக அவர் கூறுவதாவது:—

"கோட்டைகளையும் அடிமைகளையுங்கொண்ட பிரபுக்கள் எப்போதும் ராஜ்யத்திற்கு அபாயமாய்த்தானிருப்பார்கள். அவர்களை அரசு அடக்கி ஒடுக்காவிட்டால்—அது குடியரசாயினும் சரி, முடியரசாயினும் சரி—ராஜ்யத்தில் எவ்வித முன்னேற்றமும் சாத்யமல்ல."

சாதாரண மக்கள்பால் அவர் உண்மையான அன்பு கொண்டிருந்தார். அவர்களுக்குரிய ஸ்தானத்தை அவர்கள் அடைவதை அவர் பலமாக ஆதரித்தார்.

"**பிளேட்டோவும், அரிஸ்டாட்டிலும்**" எந்த விஷயத்தை ராஜ தந்திரிகளும் தத்துவஞானிகளும் கவனிப்பதற்கு உகந்ததல்ல என்று கருதினர்களோ, அந்த விஷயத்தை-சாதாரண மக்கள் பால் அன்புகொள்ளும் விஷயத்தை—மாக்கியவெல்லி மிக மிக முக்கியமானதாகக் கருதினர்.

தம்முடைய இந்த முக்கியமான கருத்தைப் பகிரங்க மாகவும் வெளியிட்டார்”

என்று வில்லாரி குறிப்பிட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும்.

ஒன்பதாம் அத்தியாயம்

ராஜாங்கத்திற்கும் மதம் ஒழுக்கத்திற்கும் உள்ள உறவுகள்

மதம்—ஒழுக்கம்; இவைபற்றி மாக்கியவெல்லி மதச் சார்பற்ற மனோபாவத்துடன்தான் ஆராய்கிறார். இவற்றை அவர் முற்றிலும் அரசியலிலிருந்து பிரித்து விடுகிறார்.

"அபகீர்த்தி வந்துவிடுமோ என்று அரசன் அல்லது தலைவன் பயப்பட வேண்டியதில்லை. ராஜ்ய நலனைக் காக்கப் பதவி வகிக்கும் அவனுக்கு அந்த உணர்ச்சி முக்கியமானதல்ல. ஒழுக்கத்தின் தராதரத்தை—அதாவது எது நல்லது, எது கெட்டது, என்பதை—சீர்தூக்கிப் பார்க்கும்போது, நல்லொழுக்கம் அவனுக்கு நாசத்தையும், தீயவொழுக்கம் அவனுக்கு நன்மையையும் தருவதையே அவன் காண்பான். எனவே, ஒழுக்கத்தின் நல்ல அல்லது கெட்ட அம்சங்களைப்பற்றி அவன் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்க வேண்டாம். **அவசியம் ஏற்படும்போது, அவன், எந்தக் காரியத்தையும் எவ்வித முறையிலும், ராஜாங்கத்தின் நலனுக்காக, ஈவு இரக்கமின்றிச் செய்யலாம்**"

என்று அவர் எழுதுகிறார்.

அரசன் அல்லது தலைவன் ராஜ்யாதிகாரத்தைச் செலுத்தும்போது மிகக் கண்டிப்புடன் நடந்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்தும் அவரே, அவன் குடிமக்களிடம் தாராளமாகவும் நடந்துகொள்ள வேண்டும் என்றும், "அவன் தாராளமாயிருப்பது மக்களுக்கு நன்றாகத்

தெரிய வேண்டும்" என்றும் கூறுகிறார். அவர் மேலும் கூறுவதாவது:—

"அவன் குடிகளின் வரிச் சுமையை அதிகரித்துக் கொண்டே போகக்கூடாது. அவர்கள் தரும் வரிப் பணத்தைக் கொண்டு அவன் ஆடம்பர 'தர்பார்' வாழ்க்கையை நடத்தக்கூடாது. மக்களுடைய சுபிட்சத்திற்காக அவன் லோபியைப் போலவும் வாழ்ந்து காண்பிக்க வேண்டிய சந்தர்ப்பங்களும் அவனுக்கு ஏற்படலாம்."

அவர் சித்தரிக்கும் அரசன் அல்லது தலைவன் எப்பொழுதுமே கருணையற்றவனாக இருக்க வேண்டும் என்று அவர் விரும்பவில்லை. நெருக்கடியான காலத்தில் மிகக் கொடுமையாகவும், சகஜமான அமைதி நிலவிடும் காலத்தில் அதிகக் காருண்யத்துடனும் அவன் நடந்துகொள்ள வேண்டுமென்று அவர் கூறுகிறார். மேலும், மேதைகளை அவன் மிக மரியாதையுடன் நடத்தி வரவேண்டுமென்றும், மக்கள் தன்னை வெறுக்கும்படி அவன் நடந்துகொள்ளக் கூடாதென்றும் பிறர் தன்னை இகழாதபடி, தன் தைரியம்—அறிவு—ஆற்றல்—பெருமை முதலியவைகளை வெளிக்காட்டி அவன் நடந்துகொள்ள வேண்டுமென்றும் அவர் கூறுகிறார். "குடிகள் தம் பொருள்களையும், பெண்டிரையும் இழந்து விடுகின்றதொரு நிலைமை எப்பொழுதும் தோன்றிவிடாதபடி அவன் கவனித்துக்கொள்ள வேண்டும்; ஏனெனில், அவ்வித நிலைமை தோன்றிவிட்டால், மக்களின் மனநிலையும் கூடவே குலைந்து விடுகிறது; அவர்கள் கலகம் செய்யவும் ஆரம்பித்து விடுகிறார்கள்" என்கிறார் அவர்.

"போலிகளையும், பித்தலாட்டக்காரர்களையும் கண்டு பிடிக்கும்போது நரியைப் போலவும், பின்னர் அவர்களைத் தண்டிக்கும்போது சிம்மத்தைப் போலவும் அவன் நடந்து கொள்ள வேண்டும்; முதலில், தந்திரசாலியாகவும், பின்பு

ஈவு இரக்கமற்ற கொலைகாரனாகவும் அவன் நடந்து கொள்ளவேண்டும்...... தான் சொன்ன சொற்படி நடந்து கொள்ளத் துணிவதால் ராஜாங்கத்தின் பத்திரத்திற்கும் —மதிப்பிற்கும் கேடு வரும் என்றால், அவன் அப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதில்லை...**தந்திரமா? அல்லது பலமா? என்ற கேள்வி எழும்போது முதலில் தந்திர உபாயத்தையே ராஜீய ரீதியில் கையாள வேண்டும். ஏனென்றால், வெற்றி என்பது எப்பொழுதும் பலத்தில் மட்டுமே இருக்கிறது என்று நினைப்பதற்கில்லை...**" என்று கூறி, அவர் **செனாபன் ஸைரஸ்ஸின்** உதாரணத்தை இதற்காக எடுத்துக் காட்டுகிறார்.

"ஏமாற்ற நினைப்பவர்களுக்கு முன்னால் ஆள்பவன் நற்குணவானாக நடிக்க வேண்டும்" என்றும், "முடியுமானால் அவன் நல்ல வழியை விட்டு விலகாமலிருக்கட்டும்; ஆயினும், அவசியம் ஏற்படும்பொழுது தீய வழியில் செல்லவும் அவன் தயங்காமலிருக்கட்டும்" என்றும் அவர் துணிந்து கூறுகிறார்.

நடைமுறை ஞானமும், அதற்கேற்பச் செயல் புரியும் துணிவுமே ஆள்பவனுக்கு அவசியமானவை என்று அவர் நம்புகிறார்.

> **"தன் அதிகாரத்தை நிலை நாட்டுவதில் ஆள்பவன் வெற்றி பெற்று விட்டால், அதற்காக அவன் கையாண்ட அத்தனை முறைகளும் சரியானவைதான் என்று அவன் கருத வேண்டும்; மற்றவரும் அவனை ஆதரிப்பர்"**

என்று இங்கே அவர் குறிப்பிடுகிறார்.

"தன் செய்கைகளின் விளைவால் நற்பலன்கள் கிடைக்குமாயின் அவன் ரோமூலஸ்ஸைப்போல நடந்து கொள்ளட்டும்" என்கிறார். "நாட்டில் அமைதியை நிலை நாட்டவும், மக்களை ரக்ஷிக்கவும் கையாளப்படும் பயங்கர

முறைகளுக்கு எல்லையோ—வரம்போ கிடையாதென்பதே முக்கியமாகும்; அவைகளைக் கண்டிப்பது தவறானதாகும். ......ராஜ்யத்தின் சுதந்திரத்திற்கு எந்தவித ஆபத்தும் ஏற்படக்கூடாது. அதை நிலை நிறுத்தியாகவேண்டும். அந்தப் பணியில், நியாயம்—அநியாயம், கருணை—கொடுமை, புகழ்—இழுக்கு என்றெல்லாம் ஆராய்ந்து கொண்டிருக்க முடியாது, எந்த வழியையும் அவன் பின்பற்றலாம்" என்றும் எழுதுகிறார்.

நற்குணங்கள்—நல்லொழுக்கங்களின் சிறப்பை அவரும் உணர்ந்தேயிருக்கிறார். அவர் கூறுவதும் இங்கே நோக்கத் தகுந்தது! **"ஒரு அரசன் அல்லது தலைவன் சத்திய கீர்த்தியாகவும், காருண்யமூர்த்தியாகவும் வாழ்வதானது, தந்திரம்—சூழ்ச்சி மூலம் வாழும் வாழ்வைவிட எவ்வளவோ பெருமைக்குரியதுதான்...! ஆனால், அரசியல் உலகில் நல்ல வழிகளும், நற்குணங்களும் பயன்படுவதில்லை. தந்திரமும் சூழ்ச்சியுமே ராஜாங்க காரியங்களில் வெற்றியைத் தருகின்றன; பலப் பிரயோகமே ராஜாங்கத்தின் பிரதான ஆயுதமாயிருக்கிறது."**

மேலும் அவர் பின் வருமாறு கூறுகிறார்:—

"தன் மக்களையே வதைத்தல், நண்பர்களையே கொல்லுதல், கௌரவம்—கண்ணியம்—தயை—மதபக்தி முதலியவைகளைப் பொருட்படுத்தாதிருத்தல்-இவைகளைச் சிறப்பான குணங்கள் என்று சொல்ல முடியாது. ஆனாலும், ராஜ்யாதிகாரத்தை நிலை நிறுத்த இவைகளே பயன்படுகின்றன. ஆயினும், புகழைத் தரும் குணங்களாக இவைகளை மதிக்க முடியாது. இவ் விழிந்த முறைகளை, அரசன் அல்லது தலைவன் வேறு வழியில்லை என்ற கடைசி நிலைமையிலும், தற்காலிகமாகவுமே கையாள வேண்டும். நாட்டின் எதிரிகளை ஒடுக்கும் அளவுக்கு மேலோ அல்லது யுத்தத்தில் வெற்றி காணும்

அளவுக்கு மேலோ இந்த முறைகளை அவன் உபயோகிக்கக்கூடாது.''

ராஜாங்க பலாத்காரப் பிரயோகம் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் கூறுவதாவது:—

"குடிகளின் நன்மைக்காகவும், ராஜ்யத்தின் பாதுகாப்பு—சுதந்திரத்திற்காகவும் அத்தியாவசியமான அளவிற்கு பலாத்காரத்தை ஒரேயடியாக உபயோகித்துவிட்டு நிறுத்திக்கொள்ள வேண்டும். அப்படியானால் அது தீய வழியாகாது; கொடுமையுமாகாது. ஆனால், கொஞ்சங் கொஞ்சமாகத் தொடங்கப்பட்டு, நாளாவட்டத்தில் குறைவின்றி அதிகமாக்கப்பட்டு, முடிவேயில்லாத முறையாக்கப்பட்டுவிடும் ராஜாங்க பலாத்காரம் எந்நாளுமே தீயதுதான்; பயங்கரக் கொடுமையானதுதான்.''

எனினும், எவ்வித வழியையும் அல்லது ஒழுக்க விதியையும் ராஜாங்க அதிகாரத்திற்கும்—தேவைக்கும்—அவசியத்திற்கும் உட்படுத்தியே அவர் பார்க்கிறார்:—

"தேசத்தின் தேவைகளுக்கேற்ப அமைவதே மதத்தின் நோக்கமாயிருக்க வேண்டும். தேச காரியங்களுக்கு உதவும் ஒரு சாதனமாக அது இயங்க வேண்டும். தேச ஐக்கியத்திற்கும், அமைதிக்கும் அது உதவுவதாக இருக்க வேண்டும். அப்படியில்லாத மதம் ஆள்பவனுக்குச் சிறிதும் பிரயோசனமில்லை; தேவையுமில்லை.''

ஆனாலும், "மதத்தின் கோட்பாடுகளைப் பின்பற்றுவதால் அரசிற்குப் பெருமையே ஏற்படுகிறது. மத பக்தியிழந்த நாடுகள் நிலைப்பதில்லை. மதத்தின் அஸ்திவாரம் தளர்ந்து விடக்கூடாது. இதைப் பார்த்துக் கொள்வது ஆளுவோனின் தலையாய கடமையாகும்'' என்றும் கூறுகிறார். இவ்வாறு குறிப்பிட்டு விட்டு, அவரே தன் காலத்திய கிறிஸ்துவ மதம் சீர்கேடுற்றிருந்ததைக் கண்டு அதிக ஆத்திரப்படுகிறார்; அதைத் தீவிரமாக எதிர்க்கிறார்.

தமது "யுத்தக் கலை" (Art of War) என்ற நூலில், அவர் புராதன மதத்தைப்பற்றி வெகு உயர்வாகப் போற்றியெழுதியிருக்கிறார். புராதன மதத்தைப் பின்பற்றி வாழ்ந்த உயர்ந்த மனிதர்களுடன், தன் காலத்திய மதத்தைப் பின்பற்றி வாழ்ந்த தீய மனிதர்களை ஒப்பிட்டுப் பேசுகிறார். "மாந்தரின் நலன்களைப் புராதன மதம் பேணிற்று; ஆனால், இன்றைய மதமோ அவைகளை அழித்து வருகிறது; மனிதர்களைக் கெட்டவர்களாகவும் ஒழுக்கமற்றவர்களாகவும் மாற்றிவிட்டது" என்கிறார்.

மேலும் அவர் கூறுகிறார்:—"புராதன மதம் தலைசிறந்த தளபதிகளையும் குடியரசுத் தலைவர்களையும், அறிவாற்றல் நிறைந்தவர்களையும், சீலர்களையும், ஞானிகளையும் சிருஷ்டித்ததோடு அவர்களையே சிறப்பித்துப் பேசுகின்றது. ஆனால், இன்றைய மதமோ, அடிமைகளையும், கோழைகளையும், கயவர்களையும், அறிவிலிகளையும், பெருஞ்செயலைச் செய்ய முடியாத தாழ்ந்த மனிதர்களையுமே சிருஷ்டித்துவிட்டதோடு, அவர்களையே புகழ்ந்தும் பேசுகின்றது." துணிவுடன் செயலாற்றும் 'கர்ம யோக'த்தைப் போதிக்காத மதத்தை—வீரர்களையும், வீராங்கனைகளையும் உற்பத்தி செய்யாத மதத்தை ஏற்றுக்கொள்ள அவர் மனம் ஒப்பவில்லை! தலைநிமிர்ந்து நடக்கவொண்ணாத பலவீனர்களைச் சிருஷ்டிக்கும் மத போதனைகளைச் சமுதாயத்திற்கு உகந்தவையல்லவென அவர் உதறித் தள்ளுகிறார்!

"இத்தாலியர்களாகிய நாம் உண்மையான மதப்பற்று இல்லாதவர்களாகி விட்டோம். ரோம மத பீடமும், மத போதகர்களின் கீழான நடத்தைகளுமே நம்முடைய ஒழுக்கச் சிதைவுக்குக் காரணங்களாயிருக்கின்றன" என்று கூறுவதன்மூலம், அவர், போப்பாண்டவர்களின் போலி—கபட வாழ்க்கையைத் தீவிரமாகக் கண்டிக்கிறார்.

அவர் மேலும் எழுதுவதாவது:—

“மக்களின் ஒன்றுபட்ட வாழ்விற்கு ஜீவாதாரமாகவும், உத்திரவாதமான பாதுகாப்பாகவும் உள்ளது ராஜாங்கமேயாகும். அதற்கு உதவியாக இருக்க வேண்டியதுதான் மதத்தின் ஆதாரக் கடமையாகும். ராஜ்யாதிகாரம் கலகலத்துப் போகும்போது, மக்களின் வாழ்வும் சீர்குலைந்து விடுகிறது. அப்படிப் போகாமல், மக்களை நல்வழியில் நடக்கவும், தீரமாக வாழவும், போதனை செய்துகொண்டு, ராஜ்ய நலனைப் பேணி நிற்பதே—ராஜாங்கத்திற்குக் கட்டுப்பட்டு அதற்கு உதவியாக இருப்பதே மதத்தின் வேலையாகும். இதன் பொருட்டே மதம் தோன்றியது...... ஆனால், இதையெல்லாம் மறந்துவிட்ட இன்றைய மதம், இத்தாலியை நாசப்படுகுழியில் தள்ளிவிட்டது.”

இவ்வாறு எழுதி அவர் தன் பெரும் மனவேதனையை வெளிப்படுத்துகிறார். அவர் மதத்தை அடியோடு எதிர்ப்பதாகத் தெரியவில்லை. தன் தாயகத்தில், தன் காலத்திய கிறிஸ்துவ மத போதகர்கள் தங்கள் இழிவான நடத்தைகள் மூலமும், பாசாங்குப் பேச்சுக்கள் மூலமும் பெருத்த அளவில் நாசத்தை விளைவித்து விட்டதை அவர் மிகுந்த வேதனையுடனேயே விமர்சனம் செய்கிறார். அவர்களையும், அவர்களின் நடத்தைகளையும், அதன் விளைவுகளையுமே அவர் தீவிரமாக எதிர்க்கிறார்.

“இம்மாதிரி மக்கள் ஆண்மையற்றும், ஆயுத பலமற்றும் போய்விட்டார்கள் என்றால், அதற்கு இந்த கிறிஸ்துவ மத போதகர்களின் கோழைத்தனமான போதனைகளே காரணம் என்பதை நாம் உணர வேண்டும். இது மதத்தின் குற்றமல்ல ; மத போதகர்களின் மன்னிக்க முடியாத குற்றமேயாகும். ஏனென்றால், மதம் நாட்டைக் காப்பாற்றவே தோன்றியது; கால காலமாக ஜீவ நதியின் வற்றாத் தன்மை

யுடனும், விருவிருப்புடனும் அது ஓடிக்கொண்டே யிருக் கிறது; சமுதாயத்தின் வாழ்வின் பரப்பில், சத்தியம்—வீரம்—தன்னம்பிக்கை—தியாகம் முதலிய ஒளிக் கிரணங் களை அது வீசிக் கொண்டிருக்கிறது. ராஜ்யாதிகாரத் திற்கு வல்லமையைத் தந்து, அதன் பெருமையை அதற்கு உதவியாக நின்றே, காத்து வருகிறது" என்றும், "ராஜதந் திரத்தின் கூட்டாளியாகவே மதம் பாவிக்கப்பட வேண் டும்; ராஜ்யாதிகாரி மதத்தை, நற்பயனளிக்கும் வண்ணம் உபயோகித்துக்கொள்ள வேண்டும். மதக் கோட்பாடுகள் மூலம் மக்களிடையே தேச பக்தியை அவன் ஊட்டவேண் டும். சட்டத்திற்கு உட்பட்டிருப்பதும், ஒழுக்கத்தைப் பற்றி நிற்பதுமே தங்கள் கடமைகள் என்று மக்கள் உணர்ந்து நடக்கும் ரீதியில் அவர்களிடையே இடைவிடாது பிரச்சாரம்செய்ய அவன் மதத்தை உபயோகித்துக்கொள்ள வேண்டும்......தனக்கு நம்பிக்கையில்லாவிடினும், மதத்தை ராஜதந்திரி கௌரவித்தாக வேண்டும்" என்றும் அவர் எழுதுகிறார்.

மனிதர்களின் 'தெய்வீக' அம்சத்திலோ, அவர்களில் சிலர் பெற்றதாகவோ அல்லது பெறுவதாகவோ சொல்லப் படும் 'தெய்வீக' உபதேசங்களிலோ அவருக்கு நம்பிக்கை யிருக்கவில்லை. **சவனரோலா** பெற்றிருந்ததாகச் சொல்லப் பட்ட 'தெய்வீக' உபதேசங்களை அவர் நம்ப மறுத்துவிட் டார். இந்தத் தெய்வீகமான ஆச்சரியங்களில் தனக்கு நம் பிக்கையில்லா விட்டாலும், ஆள்பவன் அவைகளைக் கௌர விப்பதன் மூலம் மக்களிடையே தெய்வ பக்தியை நிலைநாட் டலாம் என்கிறார்.

அரசுக்கு முதலிடமும், மதத்திற்கு இரண்டாவது இட மும், அறிவாளிகளுக்கு மூன்றாவது இடமும் என்ற வரிசைக் கிரமத்தை அவர் வகுத்து விட்டார்!

அரசைக் கவிழ்க்க எழுகிறவர்களையும், அரசிற்கு உதவியாக இருக்கும் மதத்திற்குத் தீங்கு செய்யும் மத

விரோதிகளையும், சீலர்கள்—ஞானிகளுக்குக் கேடு விளைவிப்பவர்களையும் அவர் "கேவலமானவர்கள் ; வெறுக்கத்தக்கவர்கள்" என்று கூறிக் கண்டிக்கிருர்.

மனிதனுக்கு வேண்டிய அனைத்தையும் **கடவுளே தருகிருர்** என்பதை அவர் சற்றும் நம்பவில்லை. "**தங்கக்கழுதை**" (Gold Ass) என்ற தமது நூலில் அவர் இது பற்றிக் கூறுவதாவது:—

"சோம்பேறித்தனமாக முழந்தாளிட்டு, கடவுளிடம் எல்லாப் பொறுப்புகளையும் ஒப்புவித்துவிட்ட அநேகர் நாசமடைந்து விட்டனர் ; அநேக ராஜ்யங்கள் அழிந்து விட்டன."

திருவிழாக்கள், ஆலய வழிபாடு, கண்காட்சி—இவை பற்றி அவர் பின் வருமாறு கூறுகிருர்:—

"உற்சவங்களையும், ஆலய வழிபாட்டையும் அரசன் அல்லது தலைவன் மக்களிடையே பரப்பவேண்டும். அடிக்கடி கண்காட்சிகள் நாடெங்கும் நடைபெற அவன் ஊக்கமளிக்க வேண்டும். தேச ஒற்றுமை—கலாச்சார வளர்ச்சி, வாழ்க்கை ஒழுக்கம்—இவைகளைநிலைநாட்டவும், மேலும் மேலும் முன்னேறச் செய்யவும் இவை பெரிதும் உதவி செய்கின்றன. அதற்காக மனிதன் எப்போதுமே எல்லாவித அபாயங்களிலிருந்தும் தன்னைக் கடவுளே காப்பாற்றுகிருர் என்றும்—'எல்லாம் அவன் திருவுள்ளமே' என்று கூறிக் கொண்டும் செயலற்றுக் கிடந்துவிடக் கூடாது."

மதி—விதி—அதிர்ஷ்டம் முதலியவை பற்றியும் அவர் தீவிரமாகச் சிந்தனை செய்து தம் அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கிருர். **விதியின்படி** தான் எல்லாம் நடக்கின்றன என்ற நம்பிக்கை வாழையடி வாழையாக மக்களிடையே இருந்து வருகிறது. இந்த நம்பிக்கை மாக்கியவெல்லிக்கும்

சிறிது இருந்ததாகவே தெரிகிறது. அதனுல்தான் அவர் ஒரு இடத்தில் "நாம் எதிர்பார்ப்பதற்கு மேலாகவே பல சம்பவங்கள் நிகழ்கின்றன!" என்று குறிப்பிட்டிருக்கிருர் போலும்! அதனுல், மதிக்குள்ள முக்கியமான பங்கை அவர் குறைத்துப் பேச விரும்பவில்லை. இந்த இடத்தில் அவர் மேலும் கூறுவதாவது:—"**நமது பாதிச் செயல்களுக்கு அதிர்ஷ்டம் காரணமாயிருக்கலாம்; மற்ற பாதிச் செயல்களுக்கு விதி நம்மையே பொறுப்பாக்கிவிட்டது**......நல்ல அதிர்ஷ்டம் மாறும்போது ஆபத்து ஏற்படுகின்றது என்பதை ஆள்பவன் உணர்ந்து நடக்க வேண்டும். அவன் எப்பொழுதும் அதிர்ஷ்டத்தை நம்பியிருத்தல் கூடாது. சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு நடக்கத் தவறியதால் அநேக அரசர்கள் தோற்றுப் போயிருக்கிருர்கள். காலமும் செயலும் மாறிக் கொண்டேயிருப்பவை. ஆனுல் இந்த மனிதன் மட்டும் அதை எளிதில் ஏனே உணரத் தவறுகிருன்! தன் நடத்தையை அவன் அவ்வளவு சுலபமாக மாற்றிக் கொள்வதில்லை! காலம் சரியா யிருக்கும்போதே சாதுர்யமாக நடந்து கொள்ளுகிறவனே நற்பலனை அடைகிருன். அதேபோல அக்காலம் மாறும்போதும் அவன் ஏன் சாதுர்யமாக நடந்து கொள்ளக்கூடாது? ஏன் தன் செயலை மாற்றிக் கொள்வதில்லை? நல்ல காலத்தில் சௌகரியமாக வாழ்ந்து பழக்கப்பட்ட அவனுக்கு மாறுதலுக்கேற்ப நடந்துகொள்ளும் ஆற்றல் ஏனே எளிதில் ஏற்படுவதில்லை! கால மாறுதலை யொட்டி அதிர்ஷ்டமும் மாறுகிறது என்ற பிரக்ஞை அவனுக்கு ஏனே ஏற்படுவதில்லை! இதனுல்தான் அவன் வாழ்வில் தோல்வியைக் காண்கிருன். மாறுதலுக்கேற்ப தன் முறையை மாற்றிக் கொண்டு நடப்பவனே வெற்றியைக் காண்கிருன். மந்தமாக நடப்பதைவிட, முரட்டுத்தனமாக நடப்பதே நல்லதென நான் கூறுவேன். **ஏனென்ருல், அதிர்ஷ்ட தேவதை முரட்டுத்தனத்திற்கே சீக்கிரம் பணிகிருள்! நாணத்துடன் தன்னை நெருங்குகிறவர்களை அவள்**

மதிப்பதில்லை அப்படிப்பட்டவர்களுக்கு அவள் வெற்றியைத் தருவளல்லை! இளமையின் துடிப்பைக் கண்டு பெருமிதமடையும் 'காதலி' அவள்! அந்தத் துடிப்புள்ளவர்களே அவளை அதிகாரம் செய்து, அவளுடைய 'காதலை'—சாகாவரத்தைப் பெற முடியும்! அந்த வரத்திற்கே வெற்றியென்று பெயர்."

பத்தாம் அத்தியாயம்

ராஜாங்கத்தின் குறிக்கோள்

மாக்கியவெல்லியின் "ராஜாங்கம்" அவருடைய மனோதர்மத்தை யொட்டியதும், அவருடைய சரித்திரக் கண்ணோட்டம்—அனுபவத்தையொட்டியதுமான கருத்துக்களை ஆதாரமாகக் கொண்டதொரு அதிகார நிர்வாக ஸ்தாபனமாகும். அதன் குறிக்கோளும் அக்கருத்துக்களின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது. அவருடைய "அரசன்" என்ற நூலிலும், "உரையாடல்" என்ற நூலிலும் அவர் சித்திரிக்கும் ராஜாங்கக் கோட்பாட்டின் உட்பொருள் ஒன்றேதான்.

முடியரசின் கீழ், நாட்டைப் பலப்படுத்திப் பரிபாலிக்கும் முறைபற்றி "அரசனி"லும், குடியரசின் கீழ் மக்களை ஒன்றுபடுத்திப் பரிபாலிப்பதுபற்றி "உரையாடலி"லும் மாக்கியவெல்லி எழுதியிருக்கிறார். எல்லாவிதச் சுதந்திர அரசுகளுக்கும் அவர் வலியுறுத்தும் இரண்டு முக்கியமான நோக்கங்களாவன :

(1) : ராஜ்யத்தின் பரப்பை விஸ்தரித்தல்.

(2) : ராஜ்யத்தின் சுதந்திரத்தை உறுதியாகக் காத்தல்.

தம்முடைய "அரசனி"ல் அவர் முடியாட்சியின் மன்னர்களை இருவகையாகப் பிரிக்கிறார் :

(1) : பரம்பரை மன்னர்கள்.

(2) : புதிய மன்னர்கள். இவ்விதமான இருவகை மன்னர்களை அவர் காரண—காரியார்த்த அடிப்படையி

லேயே பிரிக்கிறார். தவிரவும், குடியரசாகவோ அல்லது முடியரசாகவோ இருந்து, பின்னர் ஜெயிக்கப்படும் ராஜ்யங் களைப் பற்றியும் அவர் குறிப்பிடுகிறார். படை வலிமை—அந்நியரின் உதவி—அதிர்ஷ்டவசம்—சாமர்த்தியம் இவை களில் ஏதாவது ஒன்றின் மூலமாகக் கிடைக்கும் ராஜ்யங் களைப் பற்றியும் அவர் குறிப்பிடுகிறார்.

ராஜாங்கத்தின் நோக்கம்—முக்கிய நோக்கம் பிர தேசங்களை ஜெயிப்பதுதான் என்று அவர் கூறுவதையும், பண்டையச் சரித்திரத்திலிருந்து பல உதாரணங்களைத் தன் கொள்கைக்கு ஆதாரமாக அவர் எடுத்துக் காட்டுவதையும் நாம் காண்கிறோம்.

தமது "அரசன்" என்ற நூலின் **ஆறாவது அத்தியாயத் தில்** எவ்வாறு ஒரு அரசன் தனது ராணுவ பலத்தாலும் அதிர்ஷ்டத்தாலும் புதிய ராஜ்யத்தை ஜெயிக்கலாம் என்று விளக்குகிறார். "அரசன் மிகச் சிறந்து விளங்கிய வீரர்களின் - மேதைகளின் - ராஜதந்திரிகளின் செயல்களைப் பின்பற்ற வேண்டும். தனது படைப் பலத்தால் மட்டுமே அவன் வெற்றி காண முடியுமாதலால், அரசாங்க வெற் றிக்கு அதிர்ஷ்டமே முக்கிய காரணமாயிருக்க முடியாது என்பதை அவன் உணர வேண்டும். தங்களுடைய திறமை யாலும், சக்தியாலும் அரச பதவியைப் பெற்ற **மோஸஸ், ஸைரஸ், ரோமூலஸ், தீஸ்யூஸ்** போன்றவர்களையே அவன் உதாரணமாகக் கொள்ள வேண்டும்" என்று எழுதுகிறார்.

ஏழாவது அத்தியாயத்தில், பிறருடைய உதவியாலும், அதிர்ஷ்டத்தாலும் புதிய ராஜ்யங்களை அமைத்தவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். **பிரான்ஸிஸ்கோஸ் போர்ஸா** எளிய நிலைமையிலிருந்து தனது ஒப்பற்ற திறனாலும், அறிவாலும் மிலான் நகரத்திற்குக் கோமகனான விதம் பற்றியும், **ஸிஸேர் போர்ஜியா** தனது அதிர்ஷ்டத்தால் அரசனான விதம் பற்றி யும் அவர் எடுத்துரைக்கிறார். "ஒருவன் தன் அதிர்ஷ்டத்

தாலும், பிறர் உதவியாலும் அதிகாரம் பெறுவதற்குப் போர்ஜியாவையே உதாரணமாகக் கொள்ளவேண்டும்" என்கிருர். "எவனெருவன், ஒரு புதிய ராஜ்ய பதவியை அடைந்த பின்பு, எதிரிகளையெல்லாம் ஒழித்துக் கட்டி, நண்பர்களையெல்லாம் திருப்திப்படுத்தி, சூழ்ச்சியாலோ அல்லது பலாத்காரத்தாலோ நிலைத்து நின்று, மக்கள் தன்னை வெறுக்காமலும், அதேசமயம் அவர்களைத் தனக்குப் பணிந்து நடக்குமாறும் சாதுர்யமாக இருந்து, தனது படைகளைக் கட்டுப்பாடாக நடத்தி, சீர்குலைவைத் தடுத்து, ஒற்றுமையை உறுதியாக்கி, ராஜ்யத்தைப் பலப்படுத்தி, கடுமையாகவும், அதே சமயம் எளிமையாகவும் நடந்து காட்டி, பெருமைக்கும் தாராளத்திற்கும் தானே உறைவிடம் என்பதை மக்கள் உணரும்படி செய்து, மற்ற அரசர்களும், சிற்றரசர்களும் தனக்கு உதவி செய்வதன்மூலமே தாங்கள் நன்மையடைய முடியும் என்று எண்ணும்படி செய்து, கம்பீரமாக ராஜ்யாதிகாரம் செலுத்துகிருனே அவனைவிட வேறு உயர்ந்த உதாரணத்தைக் காணமுடியாது" என்றும் எழுதுகிருர்.

எட்டாவது அத்தியாயத்தில், பல குற்றங்களை அனுயாசமாகச் செய்ததன்மூலம் அரசர்களானவர்களைப்பற்றிக் குறிப்பிடுகிருர். ஒரு **குயவன்** மகனுன **அகதாக்லீஸ்** மிகக் கொடிய முறைகளைப் பின்பற்றி **ஸைரக்யூஸு**க்கு அரசனுன **விதத்தை** அவர் விவரிக்கிருர். அவனுடைய செய்கைகள் மிகவும் குரூரமானவையாக இருந்தன என்று அவரே ஒப்புக் கொள்ளுகிருர். ஆயினும், பதவியை எப்படியெல்லாம் கைப்பற்ற முடியும் என்பதற்கு அவனை ஒரு உதாரணமாகக் குறிப்பிட அவர் தயங்கவில்லை! தன் தந்தையுடன் பிறந்த சகோதரர்களையும், பெர்மோ நகரத்துத் தலைவர்களையும் ஒரே சமயத்தில் கொன்றுவிட்டு அந்நகரத்திற்கு அதிபதியாக வந்த **ஒலிவரோட்டோ**வையும் மற்ருெரு உதாரணமாக அவர் குறிப்பிடுகிருர்.

ஒன்பதாவது அத்தியாயத்தில், தங்களுடைய புத்தி சாலித்தனத்தால் ராஜ்யங்களுக்கு அதிபதிகளாக வந்தவர்களைப்பற்றி விவரிக்கிறார். அத்தகையோர் குடிகள் அல்லது பிரபுக்களின் தயவால் அல்லது ஆதரவால் பதவிக்கு வருகின்றனர்; பிரபுக்களால் கொடுமைக்குள்ளாகும் மக்கள், சினந்து எழுந்து பிரபுக்களின் அதிகாரத்தைக் கவிழ்த்து விட்டுத் தங்களில் ஒருவனை ராஜ்யாதிகாரியாகப் பதவியில் அமர்த்துகின்றனர்; அதேபோல, பிரபுக்களும் குடிகளின் கொட்டத்தைத் தீவிரமாக ஒடுக்குவதற்காகத் தங்களில் ஒருவனை அரசனாக அமர்த்துகின்றனர். இவ்வாறு அவர் விவரித்திருக்கிறார்.

பல வழிகளிலும் ராஜ்யங்களை அமைத்தவர்களைப் பற்றியும், அவர்கள் கையாண்ட முறைகளைப் பற்றியும் கூறிய பின், அவர், அரசர்களுக்கு ஏற்படும் பலவிதக் கஷ்டங்களைப் பற்றியும் ஆராய்கிறார். குடிகள் எப்போதுமே தங்கள் நிலைமையை மேம்படுத்திக்கொள்ள நினைத்துக் கலகம் செய்வார்கள் என்றும், ராஜ்ய பதவியைப் பெற அரசனுக்கு உதவியவர்கள்கூட விரோதிகளாக மாறலாம் என்றும், அரசனால் அப்படிப்பட்டவர்களைச் சமாளிப்பது அவ்வளவு எளிதல்லவென்றும், அப்படிப்பட்ட நிலைமைகளைச் சமாளிக்க அவன் குடிமக்களின் நல்லெண்ணத்தைப் பெறுவதுதான் முக்கியம் என்றும் அவர் விவரமாக எடுத்துரைக்கிறார்.

மாக்கியவெல்லி வாழ்ந்த காலத்தில், சாம்ராஜ்ய ஆசை பல நாடுகளுக்கும் இருந்தது. சாம்ராஜ்யமாகத் தங்கள் நாடுகளை விஸ்தரிக்கப் பலநாடுகள் முயன்றன. தமது "அரசனை" கற்பனை செய்த அவரது சிந்தனையிலும், தம் இத்தாலிய நாடும் புகழ் வாய்ந்த பெரியதொரு சாம்ராஜ்யமாகப் பரவிப் பெருமையுடன் திகழ வேண்டுமென்ற உணர்ச்சியுள்ள விருப்பம் தோன்றியிருந்தது. அதனால்தான், ராஜ்யங்களை

ஜெயித்த வீராதி வீரர்களான பல முன்னாள் அரசர்களைப் பற்றியும், அவர்களது பேராற்றல் பற்றியும் அவர் வெகுவாகப் புகழ்கிறார்.

மாக்கியவெல்லி மேலும் எழுதுகிறார் :—

"புதிதாக ஜெயிக்கப்பட்ட நாடுகள் பல இடையூறுகளைத் தோற்றுவிக்கும். ஒரே மொழி பேசும் ஒரு ராஜ்யத்தை சுலபமாய் ஆண்டு விடலாம். ஜெயித்த அரசன் தன் புதிய ராஜ்யத்தில் உடனடியாகச் செய்ய வேண்டிய காரியங்கள் என்னவென்றால், (1) பழைய ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்களையெல்லாம் பூண்டோடு ஒழித்து விடுதலும்; (2) பழைய வரிகளையும் சட்டங்களையும் அப்படியே வைத்திருத்தலுமேயாகும். மொழி, பழக்க வழக்கங்கள், சட்டங்கள் முதலியவை முற்றிலும் வேறாக இருக்கும் நாட்டை ஜெயிக்கும் அரசனை, அந்நாட்டைக் கட்டி ஆளும்போது தான், பல சிரமங்கள் எதிர்நோக்கும். ஆரம்பத்தில் மக்கள் கலகம் செய்வார்கள். அதை ஒடுக்குவதற்கும், அமைதியை நிலை நாட்டவும் அரசன், ஆரம்பத்தில் அங்கேயே வாழ வேண்டும். தானே ஸ்தலத்தில் இருந்து கொண்டு, கலகம் செய்பவர்களை அடக்கி நிர்வாகத்தை நடத்துவதுதான் சிறந்த ராஜதந்திரமாகும். குடியரசாக இருந்த நாட்டை ஜெயிக்கும்போதுதான் அரசனுக்கு அதிகமான கஷ்டங்கள் அலை அலையாய் எழுந்திடும். குடிகள் சுதந்திரமாய் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள். தங்கள் சுதந்திரத்தை மீண்டும் பெறுவதற்காக அவர்கள் கலகம் செய்துகொண்டேயிருப்பார்கள். இந்த அபாயத்தை முறியடிக்க அரசன், **அவர்களின் சுதந்திர உணர்ச்சி எப்போதும் தலைகாட்ட முடியாமல் மிகக் கடுமையாக நடந்துகொள்ள வேண்டும்.**

"புதிய ராஜ்யத்தைக் கட்டியாளும் அரசனுக்குப் பெரும் பலமாயிருக்கவல்லது அவனுடைய நல்ல தேர்ச்சி பெற்ற படைப் பலமேயாகும். ஆயினும், அந்தநாடு

களின் பழக்க வழக்கங்களையும், ஸ்தாபனங்களையும் அவன் கௌரவித்து நடந்து கொள்வதாலும் அவனுக்குப் பலமே ஏற்படும்.”

குடியரசை ஸ்தாபிப்பதுபற்றிக் கூறுகையில் அவர் குறிப்பிடுவதாவது:—

“குடியரசை நிறுவுவது என்பது **ஒரே மனிதனின் வேலையேயாகும்.** அதை அமைத்துப் பலப்படுத்திய பிறகே, அதன் ஆட்சிப் பொறுப்பில் அவன் குடிமக்களும் கலந்துகொள்ள வாய்ப்பளிக்க வேண்டும்.”

மேலும் அவர் மொழிவதாவது:—

“குடியரசில் மக்கள்தான் எஜமானர்கள். குடியரசில் இருக்கும் வியாபாரிகளும், பிரபுக்களும் மக்களின் சுதந்திரத்திற்கு இடையூருக நிற்கிருர்கள். அவர்களை முற்றிலும் அடக்கி ஒடுக்கினுலொழிய குடியரசில் அமைதி நிலவாது......குடியரசில் சமூக நிலைமைகள் கெட்டிருந்தால், ஆள்பவருக்குப் பெருத்த சோதனைகள் ஏற்படும். சுதந்திரம் என்ருல், எதையும் செய்யும் உரிமை என்ற உணர்ச்சிப் போக்கில் வாழ நினைக்கும் மக்களால் அவனுக்குப் பல தொல்லைகள் தோன்றும். **நியாயமாகவும் தன்னடக்கத்துடனும், கட்டுப்பாட்டுடனும் வாழ்வதுதான் சுதந்திர வாழ்வு** என்று அம் மக்கள் உணரும்படியாக ஆள்பவனின் நிர்வாகம் செயலபடவேண்டும். அவனுடைய உறுதியான சித்தமும் செயலுமே அக்குடியரசைக் காக்க முடியும்.”

“குடியரசு, ஸ்திரமாக நிலைபெற்றிருக்க வேண்டுமானுல் அதன் அரசியல் திட்டமும் (Constitution), சாதாரணச் சட்டங்களும் (Civil and Criminal Laws) எல்லா நிலைமைகளுக்கும் வளைந்து கொடுக்கும் ரீதியில் இருக்க வேண்டும். இவ்வாறு இருப்பதில்தான் குடியரசின் ஜீவ

சக்தி இருக்கிறது" என்று அவர் குடியரசின் அடிப்படை உறுதிக்குச் சரியான ஆலோசனையைக் கூறுகிறார்.

வளர்ந்து வரும் சம்பிரதாயங்களுக்கும், சட்ட திட்டங்களுக்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறது என்கிறார் அவர். சாதாரணச் சட்டங்களையும், ராஜ்யத்திற்கு ஆதாரமாக அமையும் அரசியல் திட்டத்தையும் அவர் மிகத் தெளிவாகப் பிரித்துக் காட்டுகிறார். சட்டமும்—சம்பிரதாயமும் பிரிக்க முடியாதபடி பிணைக்கப்பட்டவை என்று அவர் வாதிக்கிறார்:—"வழக்கத்தால் தோன்றுவதே சம்பிரதாயமாகும்... வழக்கம் மாறும்போது சட்டத்திலும் மாறுதல் நிகழும். ஆயினும், அரசியல் திட்டத்தில் மட்டும் அவ்வளவு சுலபமாக மாறுதல் ஏற்படுவதில்லை! வளையாத தடி போன்று, அரசியல் திட்டமும், சட்டங்களிலும் வழக்கங்களிலும் ஏற்படுகின்ற மாறுதல்களை அநுசரிக்கும் போக்குடன் விருவிருப்புடன் நடந்து கொள்வதில்லை! அதனால்தான், வளைந்து கொடுக்காத அரசியல் திட்டத்தின்படி இயங்கும் குடியரசால் தலைநிமிர்ந்து நிற்கமுடிவதில்லை; அத்தகைய குடியரசுகள் சில சமயங்களில் வீழ்ந்தும் விடுகின்றன. இம் மாதிரியான அபாயத்தைத் தவிர்க்க வேண்டுமானால், சாதாரணச் சட்டங்களையும், அரசியல் திட்டத்தையும் மாறுகின்ற நிலைமைகளுக்கேற்ப வளையக்கூடியதாக அவ்வப்போது மாற்றியமைக்க வேண்டும். இல்லாவிட்டால், சமரசப்படுத்தும் காரியங்களைத் திடீரென்றோ அல்லது அபாயம் நெருங்கிவிட்ட பிறகோ தான் செய்யவேண்டிய விபரீத நிர்ப்பந்தம் ஏற்படும்! பழைய சட்டங்களையெல்லாம் அடியோடு அழித்துவிட்டுப் புதிய சட்டங்களைச் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் ஏதுமில்லை! பழைய சட்டங்களின் 'சாயல்' புதிய சட்டங்களில் இருக்கும்படியாகப் பார்த்துக் கொள்வது நலம். குடியரசைத் தோற்றுவித்த சரித்திர நாயகர்களான மூல புருஷர்களின் நோக்கங்களையொட்டியே பின்னால் வருபவர்கள் நடந்துகொள்ள வேண்டும்

அப்போதுதான் குடியரசு நீடித்திருக்க முடியும். புத்துயிரும்—சீரும்—சிறப்பும் அளிக்கப்பட வேண்டுமென்பதற்காக மூல புருஷர்களின் ஜீவ உணர்ச்சிகளை அழித்துவிட வேண்டும் என்று நினைப்பது வெறும் மடமைப் புத்தியேயாகும்! அப்படிச் செய்வதால், குடியரசிற்குத் தொடர்ச்சியாகப் பலமளித்து வந்த உன்னத நோக்கங்கள் எல்லாம் மறைந்துதான் விடும் !"

"நெருக்கடியான சமயங்களில் எதேச்சாதிகாரத்தைச் செலுத்தக் குடியரசின் அரசியல் திட்டத்தில் வழி இருக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு குறிப்பிட்ட முடிவைக் காண்பதற்காக ரோமக் குடியரசின் அரசியல் திட்டத்தில் **சட்டபூர்வமான எதேச்சாதிகாரத்திற்கு** (Constitutional Dictatorship) வகை செய்யப்பட்டிருந்ததை நான் குறிப்பிட விரும்புகிறேன்" என்று மாக்கியவெல்லி விரிவாக எடுத்துரைத்திருப்பதை நாம் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

புரட்சிக் காலத்திய சர்வாதிகாரியையோ அல்லது சர்வாதிகாரத்தையோ மாக்கியவெல்லி நிச்சயமாக விரும்பவில்லை!

ஆயினும், நெருக்கடிக் காலத்தில் ஜனப்பிரதிநிதித்துவ சபை துரிதமாக இயங்கி, சட்டங்களைச் செய்து நெருக்கடியைச் சமாளிக்க இயலாது என்றும், ஒரு எதேச்சாதிகாரியால்தான் துரிதமான முடிவைச் செய்து, புயல்வேகத்துடன் நெருக்கடியைச் சமாளிக்கவல்ல **குதிரைச் சக்தியை** முடுக்கிவிட முடியும் என்றும் அவர் எழுதுகிறார். ஆனல், "எதேச்சாதிகாரி, சட்ட திட்டங்களை, மீற வேண்டும் என்பதற்காக மீறக்கூடாது. நன்கு வகுக்கப்பட்டதும், அரசியல் திட்டத்திற்குட்பட்டதுமான, சட்டபூர்வமான எதேச்சாதிகாரமே, குடியரசை, நெருக்கடிக் காலத்தின் அபாயத்திலிருந்து காப்பாற்றவல்லது. குடியரசின் உண்மையான அரசியல் பலமும் அதுதான் !" என்றும் அவர் எழுதுகிறார்.

குடியரசில், **அரசியல் கட்சிகள்** இருப்பதையும், **கட்சி யாட்சி முறை இருப்பதையும்** அவர் ஆதரிக்கிருர். கட்சி யாட்சி முறை முக்கியமானது என்பது அவருடைய உறுதி யான அபிப்பிராயமாகும்.

ரோமில், பிரபுக்களின் கட்சி—மக்களின் கட்சி என இரு அரசியல் கட்சிகள் இருந்தனவென்று அவர் குறிப்பிடுகிருர். குடியரசின் பத்திரத்திற்கு அதிகாரச் சமநிலே முக்கியமான தொரு அரசியல் தேவையும்—பலமுமாகும் என்றும், இந்த அதிகாரச் சமநிலேயைப் பாதுகாக்கக்கூடிய பணியைச் செய்யவல்லன இந்த அரசியல் கட்சிகளும், கட்சியாட்சி முறையுமேயாகும் என்றும் அவர் கருதுகிருர். அரசியல் விழிப்புடன்—நிர்மாண ரீதியில் இயங்குகின்ற அரசியல் கட்சிகளும், கட்சியாட்சி முறையும் குடியரசின் சிறப்பிற் கும்—சுபிட்சத்திற்கும் அவசியமானவை என்றும் அவர் வாதிக்கிருர். கட்சி சர்க்கார் முறையில், மக்கள் தங்களு டைய அறிவாற்றலே வெளிப்படுத்திக் கொள்ளுவதற்கு நிறைய வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன என்றும் அவர் கூறு கிருர். **"கட்சியாட்சி முறையால்தான் மக்களிடையே ராஜ்ய நலனுக்கான சூமூகச் சூழ்நிலேயைச் சிருஷ்டிக்க முடியும்; நாட் டிற்கு எந்த நேரத்திலும் சேவை செய்யும் ஊழியர்களேயும், உயிர் கொடுக்கும் உத்தம வீரர்களேயும், அழகளிக்கும் கலேஞர் களேயும், அறிவைத் தரும் மேதைகளேயும் தோற்றுவிக்க முடி யும்"** என்று அவர் நிச்சயமாக நம்புகிருர்.

எல்லாவற்றையும் எப்படியும் அடைந்தே தீருவ தென்ற மக்களின் 'இச்சை'யை, அவர், தமது ராஜ்ய விஸ் தரிப்புக் கொள்கைக்கு மிகத் தந்திரமாக—அதையே ஆதார மாக—உபயோகப்படுத்திக் கொள்ளுகிருர்!

முடியரசானுலும் சரி, அல்லது குடியரசானுலும் சரி, அவருக்கு **ராஜாங்கமும் அதன் ஏகபோக அதிகார வல்லமை யுமே பிரதானமானவையாகும்!**

எனவேதான், மக்களின் இச்சையைப் பூர்த்தி செய்யும் ரீதியில் ராஜாங்கம் ராஜ்ய விஸ்தரிப்புத்துறையில் இறங்கியாக வேண்டும் என்கிருர்.

முடிவில், அவர் சமுதாய நலனைப்பொருத்தே ராஜாங்கத்தின் பலமும்—பெருமையும் இருக்கின்றன என்று தமது வலிமைத் தத்துவத்திற்கு முத்தாய்ப்பு வைத்துவிடுகிருர் !

பதினொன்றும் அத்தியாயம்

ராஜாங்கமும்—யுத்தமும்

சரியான—முறையான படை வலிமை இல்லாமல் தோல்வியுற்றவர்களில் **சவனரோலாவை** முக்கியமான உதாரண புருஷராக மாக்கியவெல்லி சுட்டிக் காட்டுகிறார்.

நன்கு பயிற்சியளிக்கப்பட்ட ராணுவ பலந்தான் மிகவும் அவசியமானது என்று அவர் பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார். தன் சக்தியை நிரூபித்துக் காட்டப் படை வலிமையே சரியான சான்றாகும் என்கிறார் அவர். மனிதர்களை நம்ப வைக்கவும், பணிவுடன் நடக்க வைக்கவும் ராணுவ பலமே அரசனுக்குப் பெரிதும் உதவி செய்கின்றது என்றும் அவர் கூறுகிறார்.

"மக்களைப் பயப்படுத்தி வைத்தால்தான், அவர்களுக்கு ராஜாங்கத்தின் பலத்தில் நம்பிக்கை ஏற்படும். அதற்குராணுவ பலமேமுக்கியச்சாதனமாகும்" என்கிறார்.

"யுத்தக் கலை" என்ற தமது நூலில், 17-வயதிலிருந்து 40 வயது வரையிலுள்ள சகல ஆண்களுக்கும் யுத்தப்பயிற்சிஅளிக்கப்படவேண்டும்" என்றுஎழுதுகிறார்.

சேனை முக்கியமா ?...பணம் முக்கியமா ? இந்தக் கேள்விக்கு அவர் அளிக்கும் பதில் வருமாறு:—

"பணம் எப்போதும் நல்ல சைன்யங்களைப் பெற்றுத் தந்துவிடாது; ஆனால், நல்ல சைன்யங்களே பணத்தையும், பொருளையும் சம்பாதிக்கின்றன."

நாட்டை ஆளுபவன் யுத்தத் தேர்ச்சியில் மிகச் சிறந்து விளங்க வேண்டுமென்று அவர் வலியுறுத்திக் கூறும்போது பின் வருமாறு எழுதுகிறார்:—

"ஆள்பவனிடம் எதிர்பார்க்கப்படும் சிறப்பான அம்சம் அவனுடைய யுத்தத் தேர்ச்சியேயாகும். அவனுடைய யுத்தத் தேர்ச்சியே அவனை அப்பதவியில் நீடிக்கச்செய்கிறது என்பதை அவன் அல்லும் பகலும் உணர்ந்திருக்க வேண்டும்! யுத்தத் தேர்ச்சி பெருத அரசனை அல்லது தலைவனை அவனுடைய ராணுவ வீரர்கள்கூட மதிக்கமாட்டார்கள். அவர்களை அவனும் நம்பமுடியாது! போர்க் கலையில் தேர்ந்த ஞானமும், பயிற்சியும் பெற்ற தலைவர்களையே சிப்பாய்களும், சிப்பந்திகளும், மக்களும் பயபக்தியுடன் மதிப்பார்கள்."

யுத்தமே கூடாது என்று மாக்கியவெல்லி எந்த இடத்திலும் கூறியதாகத் தெரியவில்லை!

"அடிக்கடி யுத்தங்கள் மூளவேண்டும். அவைகளில் அரசு ஈடுபடவேண்டும். தன் ராஜ்யத்தை விஸ்தரித்துக் கொள்ளவும், தன் வீரர்களின் பெருமையையும், திறமையையும் உலகறியச் செய்யவும், தன் ராஜ்யத்திலுள்ள விரும்பத்தகாதவர்களையும், உத்சாகமுள்ளவர்களையும், ஈடுபடுத்தவும் அடிக்கடி அரசு யுத்தம் செய்யவேண்டும்" என்றே அவர் யுத்த முழக்கம் செய்கிருர்!

"யுத்தம் தேசத்திற்குப் புத்துயிரை அளிக்கவல்ல சஞ்சீவியைப் போன்றதாகும்!" இவ்விதம் அவர் யுத்தத்தின் அவசியத்தை வர்ணிக்கிருர்!

தமது இந்தக் கருத்தை ஊர்ஜிதப்படுத்தும் ரீதியில் அவர் கூறுவதாவது:—

"ஒவ்வொருவனும் மற்றவனுக்கு மேலாகவோ அல்லது அவனைக் காட்டிலும் பலமுள்ளவனுகவோ இருக்கவே நினைக்கிருன்; அதற்காகப் பரஸ்பரப் போட்டியில் இறங்குகிருன்; இது அவனுடைய தடுக்க முடியாத ஆவலேயன்றி வேறில்லை!"

பன்னிரண்டாம் அத்தியாயம்

மாக்கியவெல்லியைக் கண்டிப்பவர்-ஆதரிப்பவரின் சில முக்கிய வாதங்கள்

மாக்கியவெல்லியின் ராஜதந்திர மேதையைப் பற்றிப் பல நூலாசிரியர்களும், ராஜீய வாதிகளும் அவர் காலத்தவர்களும், பிற்காலத்தவர்களும், இன்றைய விமர்சகர்களும் பலவிதமான அபிப்பிராயங்களைக் கூறியிருக்கிறார்கள். சிலர் அவர் தத்துவத்தை ஒரேயடியாகக் கண்டிக்கிறார்கள்; இன்னும் சிலர் ஒரேயடியாகப் புகழ்கிறார்கள்; மற்றும் சிலரோ நடுநிலைமையில் நின்று அவரது கருத்துக்களை விமர்சனம் செய்கிறார்கள். இந்த அத்தியாயத்தில், அவரைக் கண்டிப்பவர்—ஆதரிப்பவரின் சில முக்கிய வாதங்கள் அப்படியே தரப்பட்டிருக்கின்றன.

கண்டிப்பவர்கள் சொல்லுகிறார்கள் :—

1. 'மாக்கியவெல்லியின் ராஜீயக் கருத்துக்கள் அவர் காலத்தில் ஏற்பட்டிருந்த நிலைமைகள்—சம்பவங்கள் காரணமாகவே எழுந்தன. எனவே, அவை அக்காலத்திய நிகழ்ச்சிகளுக்கு மட்டிலுமே பொருந்தக் கூடியவையாகும்.'

2. 'பொய்யும் பித்தலாட்டமும் நிறைந்த ஒரு சூழ்நிலையில் அவர் வாழ்ந்தார். ஆகையால்தான் அவரும் "சூழ்ச்சியே உலகில் வெற்றி பெறும்" என்று நினைத்தார்.'

3. " மனிதர்கள் பொதுவாக—இயற்கை சுபாவ ரீதியில் கெட்டவர்கள் என்று மாக்கியவெல்லி தமது

'இருண்ட' அபிப்பிராயத்தை வெளியிடுகிருர். எதிலும் கெடுதலேக் காணும் மனப்பான்மையுடன் அவர் மனித சுபாவத்தை ஆராய்கிருர்' என்கிருர் **ஹாப்ஸ்.**

4. மாக்கியவெல்லியின் சரித்திர ஆராய்ச்சியைக் கண்டித்து **டன்னிங்** கூறுவதாவது:—"நடந்ததாகக் கூறப்படும் விஷயங்களேப் பரிசீலனே செய்யாமலேயே மாக்கியவெல்லி ரோமானியரின் சரித்திரத்தை அப்படியே ஒப்புக் கொண்டிருக்கிருர். சில சமயங்களில் அவர், நடந்தே யிருந்திருக்க முடியாத சம்பவங்களேயும், நம்பவே தகாத கதைகளேயும் ஆதாரங்களாகக் கூறுகிருர். மாக்கியவெல்லியின் முறைக்குச் சரித்திர பூர்வமான ஆதாரம் இருப்பதுபோலத் தெரிகிறது ! அதுவும், வெளித் தோற்றமேயன்றி உண்மையல்ல."

5. "சரித்திர சம்பவங்களே ஆதாரமாகக் கொள்ளாமல் தான், மாக்கியவெல்லி தமது ராஜீய முடிவிற்கு வந்திருக்கிருர். பின்னர், தமது அபிப்பிராயத்தைப் பலப்படுத்திக் கொள்வதற்கும், விளக்குவதற்குமே சரித்திரத்தை உபயோகித்துக் கொண்டார்"—இவ்வாறு **சாபைன்** எழுதுகிருர்.

6. '**மிருக பலம்** ஒன்றுதான் மாக்கியவெல்லியின் ராஜீய சித்தாந்தத்தின் திறவு கோலாகும்' என்கிருர் **ஜான் மார்லி.**

7. மாக்கியவெல்லியின் வாழ்க்கையை—தத்துவத்தைப் பற்றி விரிவாக எழுதியிருக்கும் **வில்லாரி** என்பவர், மாக்கியவெல்லியை அநேகமாக ஆதரிக்கிருர். ஆயினும், அவர் கூட அடியிற் கண்டவாறு தமது கண்டனத்தை ஒரு இடத்தில் குறிப்பிட்டிருக்கிருர்:—

"அரசனுடைய சொந்த வாழ்க்கையைப்பற்றி மாக்கியவெல்லி சிந்திக்கவேயில்லே. 'அரசனுடைய நாசம்

ராஜ்யத்தின் நாசம்' என்ற சொற்றொடரைக் கண்ட வாறு அவர் உபயோகிக்கிறார். அவர் கூறும் அரசனும் மனிதன்தானே! மனிதனுடைய குணங்கள்—செய்கை களை விட்டு அவன் (அரசன்) மட்டும் முற்றிலும் வேறுபட்டிருப்பது என்பது முடியாத காரியம் என் பதை அவர் அடிக்கடி மறந்து விடுகிறார். இதுதான் அவர் செய்யும் பெரிய தவறாகும். தனி ஒழுக்கம் வேறு —அரச ஒழுக்கம் வேறு என்று அவர் பிரிப்பதாலும், அரசாங்கத் தலைவனைப்பற்றி அவர் 'கனவு' காணுவ தாலுமே அவர் பெரிய தவறு செய்கிறார் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன். அவருடைய ரூபமில்லாத கற்பனைத் தலைவனில் தனி மனிதன் இரண்டறக் கலந்து விடுகிறான் என்ற உண்மையை மாக்கியவெல்லி எப்படித் தான் உணர மறந்தாரோ!"

8. ''மாக்கியவெல்லிஸம்' என்றால், மோசடி, அசத்தியம், சூழ்ச்சி, தந்திரம், கொலை முதலிய படுபாதகச் செயல் களைத் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள ஒரு பயங்கர வாதமே யாகும்.'

9. **மஹா பிரடரிக்** என்ற பிரஷ்யாவின் முன்னாள் அரசர் களில் ஒருவர் மாக்கியவெல்லியை அதிதீவிரமாகத் தாக்கி, "**மாக்கியவெல்லியின் அரசனுக்கு மறுப்பு**" என்ற ஒரு பிரசுரத்தை வெளியிட்டார். அதில் அவர் மாக் கியவெல்லியை, "அவமதிக்கப்பட்ட அரசர்களின் மான சம்ரக்ஷகர்; திருடர்களுடைய—கொலைகாரர்களு டைய குரு" என்று குறிப்பிடுகிறார்.

10. பிரபல அரசியல் அறிஞர் **ஹெரால்டு லஸ்கி** எழுதுவ தாவது:—"மாக்கியவெல்லியின் "அரசன்" என்ற நூல் அன்றாட வாழ்க்கைக்கு வழி காட்டும் விதிகள் அடங் கிய ஒரு நூலல்ல. அது மெடிஸி வம்சத்திற்காக, அவர்கள் புரிந்து கொள்வதற்காக அவர்களின் காலத்

திய சரித்திரத்தைத் தழுவி எழுதப்பட்ட நூலாகும். தம்முடைய அரசியல் அனுபவத்தை அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று மாக்கியவெல்லியால் எழுதப் பட்ட ஒரு பாடப் புத்தகமாகும்."

11. **பூனி** என்பவர் பெனிடிட்டோ வார்ச்சி என்பவருக்கு எழுதிய ஒரு கடிதத்தில் மாக்கியவெல்லியைக் கண்டித் துப் பின் வருமாறு எழுதுகிருர்:—

"தங்கள் செல்வத்தைப் பறிப்பதற்கான வழிகளைக் கோமகனுக்கு எடுத்துக் காட்டவே "அரசன்" என்ற நூலை மாக்கியவெல்லி எழுதியிருக்கிருர் என்று பணக் காரர்கள் நினைக்கிருர்கள்; தங்களுடைய சுதந்திரத் தைப் பறிப்பதற்காகவே மாக்கியவெல்லி அந்நூலை எழுதியிருக்கிருர் என்று ஏழைகள் எண்ணுகிருர்கள்; அவரை எல்லோருமே நாஸ்திகர் என்று கூறுகிருர் கள். நல்லவர்கள் அவரை அயோக்கியன் என்று அழைக்கிருர்கள். தங்களைக் காட்டிலும் அவர் தந்திர சாலியான அயோக்கியன் என்று கெட்டவர்கள் ஏசு கிருர்கள்."

12. தமது "**அப்பாலஜியா**" என்ற நூலில், **கார்டினல் ரெஜி னல்டு போல்** என்பவர் மாக்கியவெல்லியைக் கடுமை யாகத் தாக்கிப் பின்வருமாறு எழுதுகிருர்:—

"அவருடைய நூல்கள் சைத்தானின் கையால் எழு தப்பட்டவையாகும். யாருக்கெல்லாம் புத்திமதி கூறு கிருரோ, அவர்களையெல்லாம் அழிப்பதற்காகவே அவர் எழுதினுர். அவருடைய நூல்களைவிட, அவ ருடைய வாழ்க்கை இன்னும் கெட்டதாகவும், வெறுக் கத்தக்கதாகவும் இருந்திருக்க வேண்டும்."

13. "ராஜத்துவேஷத்தின் வித்துதான் மாக்கியவெல்லி" என்று, **காம்பனெல்ல** என்ற சிறந்த தத்துவ சாஸ்திரி

மாக்கியவெல்லியைக் கண்டனம் செய்து எழுதியிருக்கிறார்.

14. **ரிப்படெனரா** என்ற பாதிரி ஒருவர், மாக்கியவெல்லியை அக்காலத்தில் ஸ்பெயின் தேசத்தின் அரசனாகவிருந்த **2-வது பிலிப்புடன்** ஒப்பிட்டு, "இருவரும் மூட்டிவிட்ட நரகலோகத்து நெருப்பு, எங்கும் பரவி, உலகனைத்தையும் எரித்துச் சாம்பலாக்கிவிட முயல்கின்றது" என்று கூறியிருக்கிறார்.

15. **கிளமெண்டி** என்ற ஸ்பெயின் நாட்டுப் பாதிரி ஒருவர், தமது, "**நிக்காலோ மாக்கியவெல்லியின் மடமையைப் பற்றிய வியாசம்**" என்ற பிரசுரத்தில் மாக்கியவெல்லியை, "மதத்தின் விரோதி; மக்களின் விரோதி; சமுதாயத்திற்கே விரோதி; நல்லனயாவிற்குமே விரோதி" என்று கண்டித்திருக்கிறார்.

16. தமது "அரசன்" சர்வ சக்திமான் என்றும், குறைவுபடாத அதிகாரம் படைத்தவன் என்றும், அவனுக்குச் சாமானிய மனிதனின் மனச்சாட்சி இருக்கவேண்டியதில்லை என்றும், அவன் எல்லோருக்கும் எல்லாவற்றுக்கும் மேம்பட்டவன் என்றும், அவனுடைய ராஜ்யாதிகாரத்தின் சிறப்பினை எவருமே எவ்விதத்திலும் களங்கப்படுத்த முடியாது என்றும் மாக்கியவெல்லி கண்டிப்பாகக் கூறும் கூற்றினைக் கண்டு திகைக்கும் **ஹெரால்டு லஸ்கி**யைப் போன்ற பலரும் பின்வருமாறு அபிப்பிராயப்படுகின்றனர்:-

"ராஜ்யத்தை அமைத்து, அதை நன்ருகப் பாதுகாக்கும் அறிவாளியான ராஜதந்திரியும், சமுதாயத்தில் பிறந்து வளர்ந்து, அதனுல் உருவாக்கப்பட்டவன்தானே! அப்படியிருக்க, அவனை மட்டிலும், பொதுவான சமுதாய மனமற்ற ஒரு தனித்த மனத்தினனுய் ஏன் பாவிக்க வேண்டும்? அப்படித்தான் அவனுல் எப்படி இருக்கமுடி

யும்? அவனால் அப்படி இருக்க முடிவதாகவே வைத்துக் கொள்வோம்! தனக்குப்பிடிக்காத ஒருவித வாழ்க்கை முறையைச் சமுதாயத்தின் மீது திணிக்க அவன் யார்? எந்த ராஜதந்திரியும் தீமையை விதைத்து நன்மையை அறுவடை செய்யமுடியாது. ரூபமுள்ளவனாயிருந்தும், அவன் தன்னை எப்படி ரூபமில்லாத உருவெளித் தோற்றமாகப் பாவித்துக்கொள்ள முடியும்? சமுதாயச் சுழலில் சிக்கிய மனிதன், அவன் எவ்வளவு திறமை யுள்ளவனாக இருந்தாலும், சமுதாயத்தின் நடப்பில் அதன் நலன்களுக்காக, தொடர்ச்சியாக வரும் அதன் வாழ்க்கை விதிகளைக் கவிழ்த்துவிட்டு, சமுதாய க்ஷேமத்தை நாடுவதாகச் சொல்வது வெறும் பாசாங்கேயாகும். சமுதாயம் பூராவிற்குமே ஒழுங் கீனமானவை என்று எண்ணப்படும் செயல்களை ராஜ தந்திரி என்பதற்காக அவன் மட்டும் செய்யலாமா? அப்படி அவன் செய்தாலும் அவைகளை, சமுதாயத் தால் கருதப்படும் நல்லஒழுக்கமான செயல்கள் என்று எப்படிச் சொல்ல முடியும்?......ஒன்று ராஜதந்திரி சமுதாயத்தின் எண்ணங்களையும், உணர்ச்சிகளையும் மதித்தும், அனுசரித்தும் நடந்துகொள்ளவேண்டும்; மற்றவர்கள் தன்னை மதிப்பிடும் அளவிற்கே தானும் மதிப்பிட்டுக்கொள்ளவேண்டும்; அல்லது வெறும் உரு வெளித் தோற்றமாகிவிடவேண்டும்! ராஜதந்திரியின் ஒழுக்க விதிகள் என்பன சமுதாய ஒழுக்க விதிகளி லின்றும் மாறுபட்டவையல்ல. ஏனெனில், சமுதாய ரத்தமே அவனுடைய நாளங்களில் ஓடுகிறது.'

'ஒரு தேசம், கலகங்களினால் சீர்குலைந்து விடுவதா கவே வைத்துக்கொள்வோம். அத்தகைய நாட்டைப் பலமுள்ள நாடாக்கி, புனருத்தாரணம் செய்யக்கூடிய மனிதர்கள் எத்தகைய குணமுடையவர்களாக இருக்க வேண்டும்; எவராய் இருக்க முடியும் என்பதைப் பற்றி

மாக்கியவெல்லிக்குள்ள அனுபவ முதிர்ச்சியைப் புகழுவதால் தவறு இல்லை. ஆயினும், சமுதாயத்தில் நெருக்கடிகளைச் சிருஷ்டிக்கும் சமுதாய நிலைமைகளை அவர் சரியாக ஆராய்ந்து சீர் தூக்கிப் பார்த்தாரா என்பது சந்தேகந்தான். காரண-காரியங்களுக்குள்ள தொடர்பை அறிய அவர் தவறினர் என்றுதான் கூற வேண்டும். சிக்கலான சமுதாய அமைப்பில் அரசியல் கொந்தளிப்புகள் ஏன் ஏற்படுகின்றன என்பதை நன்கு ஆராய்வோமானால், நாம் நல்ல முடிவுக்கே வருவோம்; நல்ல பரிகாரத்தையும் காண்போம். சமுதாயத்தின் பல்வேறு பிரிவுகளிடையே நிலவும்—பகுத்தறிவுக்கு ஒவ்வாத—தலைகீழான—பொருளாதார ஏற்றத் தாழ்வுகள்தான் சமுதாயக் கொந்தளிப்புகளுக்குக் காரணமாகும். அத்தகைய நோய்க்கு ஏற்ற மருந்து, பகுத்தறிவுக்கொத்த, ஏற்றத் தாழ்வை அகற்றும் சீரான பொருளாதார நிர்வாகமேயாகும்; ஒரு எதேச்சாதிகாரியான ராஜதந்திரியின் பலமோ அல்லது கடுமையோ அல்ல என்பதை உணரத் தவறக் கூடாது. சமுதாயத்தில் நிகழ்கின்ற சம்பவங்களின் காரணங்களையும், அவைகளின் விளைவுகளையும் நன்கு அலசி ஆராயாத ஒரு அரசனை அல்லது தலைவனை அல்லது ராஜ தந்திரியை நாடுவது அபாயமாகும். ஒரு ஈரக் கம்பளம் நெருப்பை அணைக்க உதவும் அளவுக்குத்தான், நாட்டில் அமைதியை நிலைநாட்ட ஒரு பலாட்டியஞன மனிதன் பயன்படுவான்! அதற்கு மேல் அவன் எதற்கும் உதவமாட்டான்!'

"லட்சியம் நிறைவேறிவிட்டால் போதும்; அதை அடைய மேற்கொள்ளப்பட்ட எவ்வித வழியும் சரிதான்" என்ற மாக்கியவெல்லியின் கொள்கை அபாயமான சவால் ஆகும்! ராஜதந்திரியின் செயல்களை அவைகளின் விளைவுகளைக் கொண்டே சீர் தூக்கிப்

பார்க்கவேண்டும். நல்ல பலன்கள் கெட்ட வழிகள் மூலம் கிடைப்பதில்லை. அப்படியே கிடைத்தாலும் அவை நீடிப்பதில்லை. எனவே, லட்சியமும் முறையும் சிறந்தே இருக்கவேண்டும்.'

17. 'மாக்கியவெல்லியின் ராஜ்ய **விஸ்தரிப்புக்** கொள்கை, சாம்ராஜ்ய வெறிகொண்ட பிற்போக்கான கொள்கை யாகும்.'

18. 'சமுதாயத்தில் வாழும் மக்களுடைய சகலதுறை நலன் களிலும் அவருடைய ராஜாங்கத்திற்கு அக்கரை கிடையாது.'

19. 'மிருக பலத்தை நம்புகிறவன், முடிவில் பாதாளத்தில் தான் விழுகிருன்!.........ஏழு நூற்ருண்டுகளாகத் தனது மிருக பலத்தின் மூலம் **பிரிட்டன் அயர்லாந்தில்** வெற்றி கண்டதா? அந்நாட்டின் அன்பைத்தான். பெற முடிந்ததா? **இத்தாலியை ஆஸ்திரிய** மிருக பலம் எத்துணை நாள் அடக்கி வைக்க முடிந்தது?...மிருக பலத்தின் சொரூபமாக விளங்கிய **பிஸ்மார்க், நெப்போலியன்** போன்ருேரின் கதியை நாம் அறியவில்லையா?...' இவ்வாறு **லஸ்கி** கூறுகிருர்.

ஆதரிப்பவர்கள் சொல்லுகிருர்கள் :—

1. 'மேதைகளின் ஞானம் அவர்கள் வாழும் காலத்திய சூழ்நிலையால் பாதிக்கப்படும் என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆயினும் அவர்களுடைய கருத்துக்களையும் அவைகளின் போக்குகளையும் சமுதாயச் சந்தர்ப்பங்களுடன் மட்டிலுமே பொருத்திப் பார்ப்பதில்தான் நாம் அதிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டியிருக்கிறது. மாக்கியவெல்லி அவருடைய காலத்தால் உருவாக்கப்பட்ட மனிதரேயாயினும், எக் காலத்திற்கும் பொருந்தக்கூடிய கோட்பாடுகளை அவர்

போதித்தாரா என்பதை நாம் தீர்மானிக்கத் தவறக் கூடாது.

'மோசடி — பொய்—பித்தலாட்டம்—ஏமாற்றம் — சூழ்ச்சி—சந்தேகம்—குழப்பம்—பஞ்சம் இவற்ருல் சீர்குலேந்திருந்த இத்தாலிய நாட்டில் வீழ்ச்சியுற்றிருந்த பிளாரன்ஸ் நகரக் குடியரசில் அவர் பிறந்தார் என்பதை நாம் ஞாபகப்படுத்திக்கொள்ள வேண்டும். அவருடைய பிறப்பு பிளாரன்ஸின் சிறப்பையும் செல்வாக்கையும் கண்டது; அவருடைய மரணம் அதன் இழிந்த நிலேமையைக் கண்டது. அவருடைய மனம், துக்கமயமான உலகையே கண்ணுற்றது. தமக்கு ஏற்பட்ட வேதனேகளால்—சோதனேகளால் அவருக்கு எதிலுமே பற்றில்லாது போய்விட்டது. இப்படிப்பட்ட காரணங்களால் மாக்கியவெல்லி போன்ற சிந்தனேயாளர்கள் எப்படிப் பாதிக்கப்படாமலிருக்க முடியும்? அதே தருணத்தில் நாம் அவருடைய சம்பவங்களேப் பற்றியே முழுக்க முழுக்க நினேத்துக் கொண்டும், அவைகளுக்குத் தேவைக்கதிகமான முக்கியத்துவம் அளித்துக்கொண்டும் இருக்கக்கூடாது. அவர் சரியாகச் சிந்திக்கவில்லே என்பது வெறும் பொய்யே யாகும். சிந்திக்கப்பட வேண்டிய விஷயங்களேப்பற்றி யெல்லாம்—மனிதர்களேப் பற்றியெல்லாம் அவர் தீவிரமாகச் சிந்திக்கவே செய்தார். நன்ருக ஆராய்ந்தே ஒரு முடிவுக்கு வந்தார். அவருடைய "அரசன்" என்ற நூல் ஓர் இறவாத அரசியல் இலக்கியமாகும்.'

2, மாக்கியவெல்லியின் "அரசன்" என்ற நூலேப்பற்றி வில்லாரி குறிப்பிட்டு எழுதுவதாவது:—

"இந்தத் தெளிவான—பொருட்செறிவுள்ள நூலில் புதைந்திருக்கும் கருத்துக்களேப்பற்றி இவ்வளவு

தர்க்கங்கள் எப்படி ஏற்பட்டன? ஏன் ஏற்பட்டன? என்பதை நம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை...... மெடிஸிக்குச் சமர்ப்பணம் செய்வதற்காகவோ அல்லது தான் லாபம் பெறலாம் என்று எண்ணியோ அவர் இந்நூலை எழுதவில்லை. எக்காலத்திற்கும் பொருந்தும்படியாகவும், உலக மக்கள் அனைவருமே பின்பற்றக் கூடியதாகவும் எழுதப்பட்ட தொரு உயர்ந்த அரசியல் சாஸ்திரத்தை, உலகின் ஒரு சிறு பகுதியில் ஏற்பட்ட ஒரு துயரமான காலவரம்பிற்குள் அடைத்துப் பார்ப்பதோ அல்லது குறைத்துப் பார்ப்பதோ அல்லது வெறுத்துப் பேசுவதோ தவறாகும்.''

3. மேலே சொல்லப்பட்ட வில்லாரியின் கருத்தைத் தழுவியே L. A. பர்ட் பின்வருமாறு எழுதுகிறார்:—

"அப்பொழுதிருந்த இத்தாலியின் அவல நிலைமையைக் கருத்திற் கொண்டு, அதைப் புனருத்தாரணம் செய்வதற்கான வழிகளை மட்டுமே அந்த நூல் ("அரசன்") குறிப்பிடுகின்றது என்பதை வைத்துக் கொண்டு அதன் முக்கியத்துவத்தை மதிப்பிடக் கூடாது. அதே மாதிரியான நிலைமைகள் வேறு எங்கேயும் தோன்றக்கூடும். ஒரு குறிப்பிட்ட நாட்டில் தற்காலீகமாக ஏற்பட்ட ஒரு நெருக்கடி நிலைமையை மாற்றுவதற்காகச் சொல்லப்பட்ட யோசனைகளையும், வழி முறைகளையும் வேறு இடங்களுக்கும், அவசியம் நேரிடும்போது, விஸ்தரிக்கவும் கூடும். அந்தந்த நிலைமைக்கேற்ப, சில மாறுதல்களுடன் செயல்பட வல்லதும், எக்காலத்திற்கும் ஏற்றதாக இருக்க வல்லதுமான ராஜரீக விதிகளை ஓரளவாவது தரவேண்டும் என்ற எண்ணத்துடன் எழுதப்பட்ட நூலாகவே மாக்கியவெல்லியின் "அரசன்'' என்ற நூலைக் கருத வேண்டும்.''

4. அநேக அறிஞர்கள் மாக்கிய வெல்லியை **அரிஸ்டாட்டி லுடன்** ஒப்பிட்டுப் பேசுகிறார்கள். அவரை மாக்கிய வெல்லி அப்படியே 'காப்பி' அடிக்கிறார் என்று கூறு வோருமுண்டு. இந்தக் கூற்றை, **வில்லாரி** பலமாகக் கண்டித்துப் பின்வருமாறு எழுதுகிறார்:—

"அரிஸ்டாட்டிலைப் பார்த்து மாக்கியவெல்லி அப் படியே நடிக்கவில்லை! லத்தீன் மொழி அறிந்த, லத்தீ னியப்பண்பாட்டில் ஊறிய மாக்கியவெல்லியின் கருத் துக்கள் முற்றிலும் ரோமச் சரித்திர ஊற்றிலிருந்து தோன்றியவைதான். அரிஸ்டாட்டிலோ அல்லது கிரேக்க சரித்திரமோ அவருக்கு வழிகாட்டியாகவோ அல்லது ஆதர்சமாகவோ இருந்ததில்லை. பூராச் சமுதா யத்தின் மீதும்—ஏன், தனி நபரின் வாழ்க்கையின் ஒவ் வொரு அம்சத்தின் மீதும் ராஜாங்கம் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்ற கிரேக்கர்களின் ஆதாரச் சித்தாந்தத்தை அவர்களுக்குப் பின்வந்த ரோமானியர் களும் ஒப்புக்கொண்டார்கள் என்றாலும், அவர்கள் (ரோமானியர்கள்) நீதி என்பதற்குத் தெளிவான பொருளை நிர்ணயம் செய்து, அதை ஒழுக்கத்தினின் றும் பிரித்து, ராஜாங்கத்தின் அதிகாரத்தைப் பலப் படுத்தி அதற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தார் கள். கிரேக்கர்களின் விரிவான தத்துவ ஞானக் கோட்பாடுகளுக்கு இது முற்றிலும் மாறானதாகும். அப்படியிருக்க, கிரேக்க ஞானியான அரிஸ்டாட்டி லும், இத்தாலிய ராஜதந்திரியான மாக்கியவெல்லி யும் அரசியலைப் பற்றி ஒரே மாதிரியாகச் சிந்தித்தார் கள் என்றோ அல்லது மாக்கியவெல்லி அவரைப் பார்த்து அப்படியே நடித்தார் என்றோ எப்படிக் கூற முடியும்? **லட்சியத்திற்கு** அதிக முக்கியத்துவம் கொடுத் தார் அரிஸ்டாட்டில்; ஆனால், மாக்கியவெல்லியோ

வெனில், ராஜதந்திரத்திற்கே அதிக முக்கியத்துவம் கொடுத்தார்.

“அரிஸ்டாட்டிலுக்கும் மாக்கியவெல்லிக்கும் ஒரே விஷயத்தில் ஒற்றுமை யிருப்பது போன்ற தோற்றத்தைக் காணலாம். மதத்தின் பிடிப்பிலிருந்து ராஜாங்கம் விடுபட்டு, மதச் சார்பற்றுச் செயல்பட வேண்டுமென்றும், சரித்திரமும், சமூகமும் மனிதனுலும், இயற்கையின் பரிணும நியதியாலும் ஏற்பட்டவை என்றும் அரிஸ்டாட்டில் கருதினர். மாக்கியவெல்லியும் தம் காலத்தில், ராஜாங்கத்தின் மீது மதம் ஆதிக்கம் செய்யக் கூடாதென்று வாதித்தார். ஆயினும், இந்த ஒற்றுமைத் தோற்றமளிக்கும் அம்சத்தில் கூட இருவருடைய கருத்துக்களிடையேயும் பெரிதும் வேற்றுமை இருக்கத்தான் செய்கிறது! **மாக்கியவெல்லி ''மதம் ராஜாங்கத்திற்கு உதவியான, அதற்குட்பட்ட ஒரு அங்கமாக இருக்க வேண்டும் என்கிருர்; ஆனுல், அரிஸ்டாட்டிலோ வெனில், ''மதத்திற்கும் ராஜாங்கத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இருக்கக்கூடாது'' என்று கண்டிப்பாகக் கூறுகிருர்.''**

5. ''மக்களின் நன்மைக்காக ஏற்பட்ட ராஜாங்கத்தை நடத்திச் செல்பவனின் வேலைகளை மனிதர்களுடைய கெட்ட சுபாவம் கடினமாக்குகிறது. அந்தக் காரணத்தால் அவன் தயவு தாட்சண்யமின்றிப் பலாத்காரத்தைப் பிரயோகிக்கிருன். இத்தகைய பலாத்காரப் பிரயோகம் சுயநலப் பற்றற்றது; பொது நன்மைக்காகச் செய்யப்படுவது. உறுதியாக ஆள்வதற்கு இதுவே சிறந்த வழியாகும்''—இவ்வாறு வில்லாரி எழுதுகிருர்.

6. 'ராஜ்யத்தின் பொது நலத்திற்காகப் பாடுபடும்படி அனைவரையும் கட்டாயப்படுத்த ராஜாங்கத்திற்கு

உரிமையுண்டு' என்ற மாக்கிய வெல்லியின் கருத்தின் மீது **எர்ஸ்கின் மூயர்** எழுதுவதாவது:—

"ராஜாங்கத்தின் மூலமே ராஜ்யத்தில் நன்மைகள் நிலவ முடியும். ஏனெனில், மனிதன் தனிப்பட்ட முறையில் சுயநல வாதியாக இருக்கிறன்; அவனே, ராஜ்யத்தின் பிரிக்க முடியாத ஒரு அங்கமாக்கப்பட்டு விட்டால், சுயநலப் பற்று அற்றவனுகி விடுகிருன்."

7. **மோஹல்** எழுதுவதாவது:—"அவரைக் கண்டித்தவர்கள் பெரும்பாலோர் அவருடைய நூல்களைப் படிக்காமலே கூடக் கண்டிக்கிருர்கள். விமர்சகர்களும், எதிரிகளும் அவரைச் சரியாக உணர்ந்து கொள்ளவில்லை. அவருடைய போதனைகளைச் சரியாக ஆராயவில்லை. அவர் செய்த தவறுகளைக் காட்டிலும் அவருக்கு இழைக்கப்பட்ட தவறுகளே அதிகமாகும்."

8. "மோசடிகொடுமை, நம்பிக்கைத்துரோகம், மதத்திற்கு விரோதமாயிருத்தல்—முதலியவைகளை **எந்தெந்தச் சந்தர்ப்பங்களில்** கையாளலாம் என்று அவர் தம் அரசனுக்கு அல்லது தலைவனுக்கு ஆலோசனை கூறுகிருர் என்பதை அவரை எதிர்ப்பவர்கள் சற்றும் கவனிக்கவில்லை போலும்! சந்தேகத்திற்கிடமின்றி அவர், தீய வழிகளையும் ஆள்பவன் பின்பற்றலாம் என்று கூறத்தான் செய்கிருர். ஆயினும், **தேச நலன்களுக்காக மட்டிலும்—தற்காலிகமாகத்தான்** அவைகள் பின்பற்றப் படலாம் என்று அவர் எல்லை வகுப்பதையும், எச்சரிக்கை செய்வதையும், **மிதமிஞ்சிய எதேச்சாதிகாரத்தை** அவர் ஆதரிக்கவில்லை என்பதையும், குடிமக்கள் ஒத்துழைப்பு இல்லாத அரசு வீழ்ந்துவிடும் என்று அவர் சொல்வதையும், அவரைக் கண்டிப்பவர்கள் ஏன் புரிந்துகொள்ளவில்லையோ?"—இவ்வாறு எழுதுகிருர் **வில்லாரி**.

9. 'அரசியல் ஞானவளர்ச்சிக்கு அவர் ஈடு இணையற்ற சேவையைச் செய்திருக்கிறார்.'

10. "போப்புகள் மிகவும் தாழ்ந்த—தகாத வாழ்க்கையை நடத்தி வந்தார்கள்; நாட்டின் ஒற்றுமையைக் குலைத்தார்கள். அவர்களைப் பின்பற்றிய மக்களும் மதி கெட்டு அலைந்தார்கள். போப்புகளின் இழிந்த செயல்களையும், அதன் விளைவான மக்களின் வெட்கங்கெட்ட வாழ்க்கையையும் வர்ணிக்க வார்த்தைகளே இல்லை! மாக்கிய வெல்லியின் கடுமையான வெறுப்பிற்கும்—எதிர்ப்பிற்கும் காரணமாயிருந்தது அவர்களின் (போப்புகளின்) தீய வாழ்க்கையே யாகும்......அரை டஜன் போப்புகளில் ஒரு நல்லவரைக் கூடக் காண முடியவில்லை! இந்தப் போப்புகள் கிறிஸ்துவ உலகத்தையே, தங்களுடைய மானமற்ற நடத்தைகள் மூலம் மாசுபடுத்தி விட்டார்கள்"— இவ்வாறு **எர்ஸ்கின்மூயர்** எழுதுகிறார்.

11. மாக்கியவெல்லியின் காலத்தவரான **க்யூஸி யார்டினி** என்பவர் கூறுவதாவது:—

"இந்தப் போப்புகளின் கீழ்த்தரமான நடத்தைகளால் ரோம ராஜசபை மிகக் கேவலமாகத் தாழ்ந்து விட்டது. நானே, போப்புகளால் ஆளப்படும் ரோம ராஜ்யத்தை ஒழிக்க விரும்பியே வந்திருக்கும்போது, மாக்கியவெல்லி மட்டிலும் சும்மா இருப்பாரா?"

12. "அக்காலம் அவ்வளவு கெட்டிருந்திருக்காவிட்டால், 'மாக்கியவெல்லிஸ'த்தின் தோற்றமே வேறு உருவத்தைப் பெற்றிருக்கும்!"—**வில்லாரி.**

13. "கெட்ட நடத்தையுள்ள ஆசிரியருக்கு எப்படிக் கெட்ட உபதேசங்கள்தான் பிடிக்குமோ, அப்படிப் பட்டதொரு அரசியல் சூழ்நிலையில்தான் மாக்கியவெல்லியின் சித்தாந்தமும் பிறந்தது"—**ரெபர்க்.**

108386

14. "இத்தாலிய நாட்டிற்குப் புனர் வாழ்வளித்த அந்த பிளாரன்ஸ் நகரத்தானுடைய (மாக்கியவெல்லி) தேச பக்தி மிகப் புனிதமானதாகும். அதை எப்படிப் போற்ருமலிருக்க முடியும்?"—**ராங்கி.**

15. "மறுமலர்ச்சிக் காலத்தின் பிரத்தியட்சமான நடப்பை யொட்டி எழுந்ததே மாக்கியவெல்லியின் ராஜீய சித்தாந்தம் என்பதை எந்நாளும் மறப்பதற்கில்லை. அவருடைய நூல்கள் முக்கியமானவை என்று நான் சந்தேகமில்லாமல் கூறுகிறேன்"—**ஹென்ரிலியோ.**

16. "பாழ்பட்டு நின்றதாமோர் இத்தாலிய தேசந்தன்னை வாழ்விக்க வந்த மகானே மாக்கியவெல்லி"—இவ்விதம் **பாக்ஸ்கோலோவும், ரிடோல்பியும்** கூறிப் புகழ்ந்தார்கள்.

17. '**மாக்கியவெல்லிஸத்தை ஆதரித்து**' என்ற தமது நூலில் **ஷெர்போல் மான்** என்பவர் எழுதுவதாவது:—"அரசியல் முறைமை, மாந்தர்களின் சொந்த ஒழுக்கத்திற்கு முற்றிலும் மாருனது என்ற மாக்கியவெல்லியின் கருத்தை நான் பூரணமாக ஆதரிக்கிறேன்."

18. "தம்முடைய "அரசனை"ச் சித்தரித்தது மூலம் அரசர்களது கொடுங்கோலை மக்கள் அனைவரும் நன்ருக உணரும்படி செய்துவிட்டார்"—**ஆவ்பியரி.**

19. "மாக்கியவெல்லியின் "அரசன்" என்ற நூல் குடியரசு வாதிகளுக்காகவே எழுதப்பட்ட நூலாகும். அவருடைய அந்த நூல் ஆள்வோருக்குப் புத்திமதி கூற முயன்று, முடிவில் மக்களுக்குக் குடியரசின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது"—**ரூஸோ.**

20. "போரும்—அமைதியும் தொடர்ந்தும், அடிக்கடியும், நெருங்கினுற்போலவும் நிகழ்ந்து வந்தால்தான் நாட்டில் ஒற்றுமையின்பம் நீடித்துச் சிரித்து விளையாடும். மாக்கியவெல்லியின் சித்தாந்தம் இந்த இன்பச் சிறப்பினையே நமக்கு நிச்சயமாக அளிக்கின்றது"—**பர்ட்.**

21. **ஆல்பரிகோ ஜெண்டைல்** என்பவர், மாக்கியவெல்லியைச் "சுதந்திரப் பிரியர்" என்று வர்ணிக்கிறார்.

22. எரிஸோ போர்ஜியாவை, மாக்கியவெல்லி போற்றிப் புகழ்வதுகண்டு ஆத்திரப்படுபவர்களுக்கு **மார்லி** அளிக்கும் பதில் வருமாறு:—

"குறிப்பிட்ட ஒரு காரியத்தைச் சாதிக்கவல்லவன் என்பதைத் தவிர, போர்ஜியாவுக்கு வேறு எந்த அந்தஸ்தையும் மாக்கியவெல்லி அளிக்கவில்லை; அவனைத் தம் 'அரச பதவி'க்குரிய மகாபுருஷனாக மாக்கியவெல்லி எப்போதும் கருதவில்லை."

*   *   *

நிற்க,

மாக்கியவெல்லியை, மத போதகர்களும்—உயர் பதவி வகித்தவர்களும் தீவிரமாகத் தாக்கிப் பேசினர்; எழுதினர். **இங்கோல் ஸ்டாட்** என்னும் இடத்தில் அவருக்குக் 'கொடும் பாவி' கட்டிக்கொளுத்தப்பட்டது. அவருடைய நூல்களைப் பகிஷ்கரிக்குமாறு **ஜெஸ்ஸுட்** பாதிரிமார்கள் இடைவிடாது பிரச்சாரம் செய்தனர். **பொஸ்ஸாரினோ** என்ற பெயருள்ள மாக்கியவெல்லியின் அரசியல் எதிரி ஒருவன் அவரை மிக இழிவான முறையில் தாக்கிப் பேசினான்.

அதே சமயத்தில், மாக்கியவெல்லியை உயர்வாக மதித்தவர்களும், அவரைப் புகழ்ந்து பேசியவர்களும் இருந்தார்கள். **ஐந்தாவது சார்லஸ்** மாக்கியவெல்லியின் "அரசன்' என்ற நூலை வெகுவாகப் புகழ்ந்தான். **நெப்போலியன்** மாக்கியவெல்லியின் ராஜதந்திர மேதா விலாசத்தைக் கண்டு வியந்தான். அதிர்ஷ்டத்தின் செல்வனான நெப்போலியன்' கிட்டத்தட்ட மாக்கியவெல்லியின் கருத்தையே பிரதிபலித்தான்! **ஸ்வீடன் தேசத்தரசி**, மாக்கியவெல்லியின் "அரசனை" மிக நன்றாகப் படித்துவிட்டு, அதைப் படிக்குமாறு தம் மக்

களுக்கு ஆலோசனை கூறினர். லிப்ஸியஸ், பேக்கன் பிரபு ஆகியோரும், மாக்கியவெல்லியின் நியாய வாதத்தைப் புகழ்ந்தனர். காதரைன்—டி—மெடிஸி மாக்கியவெல்லியின் "அரசனை" பிரான்ஸ் தேசத்தில் விரிவாகப் பரப்பினர். ஐந்தாவது ஸ்கஸ்டஸ் என்ற போப்பும்கூட அந்நூலின் சுருக்கத்தைத் தயாரித்து வைத்திருந்தாராம். இங்கிலாந்திலும் எட்டாவது ஹென்ரி அடிக்கடி அந்நூலைத் திருப்பித் திருப்பிப் படித்துக் கொண்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

அனுபந்தம்—1

மாக்கியவெல்லியின் வாழ்க்கையைப்பற்றிய சில விவரங்கள்

“**சரித்திராசிரியர்களின் உலகச் சரித்திரம்**” என்ற தொகுப்பு நூலில் மாக்கியவெல்லியைப்பற்றிப் பின்வரு மாறு எழுதப்பட்டிருக்கிறது:—

பிளாரன்ஸ் குடியரசின் புகழ் வாய்ந்த காரியதரிசி பத வியை வகித்த **நிக்காலோ மாக்கியவெல்லி** ஆழ்ந்த சிந்தனை யாளராகவும், சரளமான பேச்சு வன்மையுள்ள சரித்திரா சிரியராகவும், தேர்ந்த ராஜதந்திரியாகவும் இருந்திருக்கிறார். அப்படிப்பட்டவரின் பெயரைத்தான், இழிவான குணங் கள்—செயல்களுடன் சம்பந்தப்படுத்தியே பேசப்படுகிறது! “அரசன்” என்ற தமது ஆராய்ச்சி நூலை அவர் எழுதிய வுடன்தான் அவருக்கு அக் களங்கம் கற்பிக்கப்பட்டது !

ஆனால், தமது நூலை மாக்கியவெல்லி நல்லெண்ணத் துடன்தான் எழுதினார் என்பதே உண்மையாகும்! எனி னும், அரசியலில் எவையெல்லாம் வஞ்சகமானவையோ— பொய்யானவையோ அவைகளுடன் மாக்கியவெல்லியின் பெயரைப் பொருத்திப் பேசுவதே **இன்றளவும்** நடந்து கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

1469-ஆம் ஆண்டு மேமாதம் 3-ஆந் தேதியில் மாக் கியவெல்லி பிளாரன்ஸ் நகரத்தில் பிறந்தார். அவர் செல்வாக்குள்ள குடும்பத்தில்தான் பிறந்தார். குடியரசு தோன்றியதும் முதன் முதலாக உயர் பதவிகளை வகித்தவர் களின் குடும்பமே அக்குடும்பமாகும். அவருடைய வாலிபப்

பருவத்தைப்பற்றிய விவரங்கள் நமக்குத் தெரியவில்லை; ஆனால் அவர் தமது முப்பதாவது வயதில் அரசியல் வாழ்வில் பிரவேசித்த அன்றிலிருந்துதான் அவரைப் பற்றிய வரலாற்றையும் நாம் தெரிந்துகொள்ள முடிந்தது. முதன் முதலில் அவர் குடியரசு சர்க்காரின் **நிதி மந்திரி**யாகப் பதவி வகித்தார். அதுமுதல் தொடர்ந்தாற்போல அவர் ராஜாங்கத்தில் பல உயர்ந்த பதவிகளையும் சிறப்பாகத் தூதர் பதவியையும் வகித்தார். அவர் எந்தப் பதவியிலும் மிகத் திறமையுடன் நடந்து கொண்டார். பிரான்ஸின் ராஜசபைக்கு அவர் நான்கு தடவைகள் தூதராக அனுப்பப்பட்டார். தவிரவும் இத்தாலியில் இருந்த பல சிறிய ராஜ்யங்களிலும் அவர் தூதராகப் பணியாற்றியிருக்கிறார். ரோமாதீன ராஜ்யத்தில்தான் அவர் நீண்ட காலத்திற்குத் தூதராக இருந்தார். அப்போதுதான், அங்கே **சிஸேர் போர்ஜியா** என்பவன் போப்பாகப் பதவி வகித்தான். அவனை மிக நெருக்கமாகக் கவனிக்கும் வாய்ப்பு அவருக்கு அங்கே ஏற்பட்டது. மாக்கியவெல்லி அங்கு பதவியிலிருந்த காலத்தில்தான் போர்ஜியாவின் பேயாட்டம் நடைபெற்றது.

இந்தப் பிரபலமான துஷ்டன் தனது வெறிச் செயல்களால் பயங்கரமாய் முன்னேறிக்கொண்டிருந்த பொழுதுதான் மாக்கியவெல்லி அரசியல் சூழ்ச்சிகளைப் பற்றிச் சாவதானமாகத் தெரிந்து கொண்டார். அந்தக் காலத்தில் பல நெருக்கடியான சந்தர்ப்பங்களை, ஒரு ராஜாங்கத்தின் தூதர் என்ற முறையில், அவர் எதிர் நோக்க நேர்ந்தது. ஆனால், அவர் எந்த நிலைமையையும் மிகச் சாமர்த்தியமாகவே சமாளித்தார். அவருடைய நகைச் சுவையும், ஏளனப் பேச்சும், உல்லாச மனோபாவமும் அவருக்குப் பெரிதும் உதவி செய்தன. இதன் மத்தியில்தான், அவர் தமது நாடக நூல்களையும், "**பெல்பஹார்**" என்ற தமது நவீனத்தையும், பல கவிதைகளையும் எழுதினார். அவருடைய கவிதைகளில் கவிநலம் மிகுந்திருக்கிறது.

படை வலிமையைப் பெறுவதன் அவசியத்தை உணர்ந்த அவர், தேசியப்படையை நிறுவுவதற்குத் தம் குடியரசைத் தூண்டினர். அவரது யோசனையால் தான், தனது ஒப்பற்ற படைவலிமையைக் கொண்டு பிளாரன்ஸ் மீட்சி பெற்றதென்றே சொல்லலாம். தமது இலக்கியங்களினுல் கிடைத்த புகழினுல் அவர் பெருமிதம் கொள்வதைப் பெரிதாகக் கருதவில்லை! தமது யோசனையின் விளைவாக மீட்சி பெற்ற பிளாரன்ஸின் நிலையே அவருக்கு அதிக கர்வத்தைக் கொடுத்தது! **மெடிஸி** குடும்பத்தார் பிளாரன்ஸின் ஆட்சியைக் கைப்பற்ற எவ்வளவோ முயற்சிகளைச் செய்து பார்த்தனர். மாக்கியவெல்லி தமது ராஜ தந்திரத்தால் அவர்களின் முயற்சிகளை முறியடித்தார். ஆயினும், அவருடைய வெற்றி நீடிக்கவில்லை. **1512**-ல் மெடிஸி குடும்பத்தார் பிளாரன்ஸில் ஆட்சியைக் கைப்பற்றிவிட்டனர். அதன் விளைவாக, முதலில் பதவியை இழந்தவர், நாடு கடத்தப்பட்டவர் மாக்கியவெல்லியே யாவார். மாக்கியவெல்லியின் மனக் கொதிப்பு அவரைச் சும்மா இருக்க இடம் கொடுக்கவில்லை. பிளாரன்ஸ் ஆட்சியைக் கைப்பற்றி விட்ட மெடிஸி குடும்பத்தாருக்கு எதிராக அவர் சதியாலோசனையில் ஈடுபட்டார். ஆனுல், அவருடைய சதிவேலைகள் கண்டு பிடிக்கப்பட்டன. அவர் உடனே கைது செய்யப்பட்டார்; சிறையில் மிகக் கொடுமையான சித்திரவதைக்கு ஆளானுர். ஆயினும், அவரிடமிருந்து சதி வேலையில் கலந்தவர்களின் விவரங்களை அதிகாரிகளால் தெரிந்து கொள்ள முடியவில்லை. **பத்தாவது லியோ** என்பவர் போப்பானவுடன்தான் மாக்கியவெல்லிக்கு விடுதலை கிடைத்தது.

தாம் சிறையில் அனுபவித்த சித்திரவதையைப் பற்றி மாக்கியவெல்லி தமது நூல்களில் எந்த இடத்திலும் ஒரு வரி கூட எழுதவில்லை! ஆயினும், சிறைக் கொடுமைகளை அவர் அனுபவித்ததால் அவருடைய ராஜபக்தி அதிகரிக்கவில்லை!

தாம் பார்த்த வண்ணமே அவர் அரசர்களைச் சித்தரித்தார் என்றுதான் கொள்ளவேண்டும். அப்படிச் சித்தரிப்பதில் அவருக்கு அலாதியான ஆனந்தம் ஏற்பட்டது! ஆயினும், அவர் அரசர்களுக்குப் புத்திமதி கூறுவதுபோலப் பாசாங்கே செய்தார்! பதவியிழந்த பிறகுதான், மாக்கியவெல்லி அரசியல்—சரித்திரம் பற்றியெல்லாம் எழுதுவதற்குத் தொடங்கினர். பொது வாழ்க்கையில் தீவிரமாக ஈடுபட்ட அவர் மனித இயல்புகளைப் பற்றியும், சிறப்பாக 'இதயம்' பற்றியும் நன்குகத் தெரிந்துகொண்டிருந்தார். மேலும், எவ்வளவு சிக்கலான அரசியல் வஞ்சகச் சூழ்ச்சியையும் சிக்கறுக்கும் ஆற்றல் அவரிடம் நிறைய இருந்தது. அப்போதுதான் அவர் தமது பிரசித்தி பெற்ற "அரசனை" எழுதினர். அதை அவர், **அர்பிஞேவின் கோமகனுன லாரன்ஸோவுக்கு** சமர்ப்பணம் செய்தார். அந்த லாரன்ஸோ என்பவனே, தான் தந்திரசாலியாக நடந்துகொள்ளும்போது, தன்னை ஆழ்ந்த அறிவாளியாக எண்ணிக்கொண்டான்; கொடியவனுக நடந்துகொள்ளும்போது, தன்னை வீரனுக எண்ணிக் கொண்டான்!

நேர்மை—நியாயம் என்ற நல்லொழுக்க விதிகளுக்குக் கட்டுப்படாத ஒரு திறமையான ஆக்கிரமிப்பாளனுல்தான் ராஜ்யாதிகாரத்தை நிலைநிறுத்த முடியும் என்ற மனப்போக்கில், மாக்கியவெல்லி, தமது "அரசன்" என்ற நூல் மூலம், லாரன்ஸோவுக்கு, அவன் விரும்பியபடியே, புத்திமதி கூறியிருக்கிருர்! தம்ராஜ்யத்தில் ஒரு கொடுங்கோலனை அரச பதவியில் அமர்த்த வேண்டுமென்பது—அதுவும் எவன் அவரால் அதிகமாக வெறுக்கப்பட்டானே—எவனுக்கு எதிராக அவர் சதியில் ஈடுபட்டாரோ அப்படிப்பட்டவனைப் பதவியில் அமர்த்த வேண்டுமென்பது அவருடைய உண்மையான நோக்கமாய் இருந்திருக்க முடியாது. அல்லது கொடுங்கோன்மையின் விகாரங்களை அம்பலப்படுத்தி, அவைகள் மீது மக்களின் வெறுப்பைத் தூண்டி

விட வேண்டுமென்பதும் அவருடைய நோக்கமாய் இருந்திருக்க முடியாது. ஏனெனில், கொடுங்கோன்மையின் விகாரங்களை இத்தாலிய மக்கள் கண்டிருந்தனர்; அவைகளை அனுபவித்து மிருந்தனர்!

அந்தக் கொடிய செயல்களைத்தான், மாக்கியவெல்லி, 16-வது நூற்றுண்டின் இத்தாலிக்கு மட்டுமில்லாமல்—எல்லா ராஜ்யங்களுக்குமாக ஒரு கட்டுக் கோப்பான அரசியல் சித்தாந்த முறைகளாக முறைப்படுத்தித் தந்தார்!

இந்தக் காலத்தில்தான் அவர், **''பிளாரன்ஸின் சரித்திரம்''** என்ற நூலையும் எழுதி அதை **ஏழாவது கிளெமண்டு** என்ற போப்புக்குச் சமர்ப்பணம் செய்தார். சரித்திர ஆராய்ச்சித் திறனை ஆழ்ந்த சிந்தனையுடன் இணைக்கும் கலையில் தேருமாறு அவர், அந்த நூல் மூலம் இத்தாலியரை அழைக்கிருர்! தமது முந்தையரைப் போலவே, அவரும் அதே பாணியில் ராணுவ வெற்றிகளைப் புகழ்கிருர். அப்படிப் புகழ்ந்து எழுதுவதில்தான் அவருக்கு எவ்வளவு உத்சாகம்! தம் நாட்டின் பண்டைய வீரர்களின் வீரதீரச் செயல்களை வர்ணிக்கும்போது அவர் தம்மையே மறந்து விடுகிருர்!

பொதுஜன உணர்ச்சிகள்—கிளர்ச்சிகளை விவரிக்கும் ஒரு சரித்திரம் என்ற ரீதியில் அவருடைய நூலும் மிகச் சிறந்த நூலாகும் என்று துணிவுடன் சொல்லலாம்.

மீண்டும் அவர், பொதுஜன உறவுகளைக் கவனிக்கும் பதவிக்குப் போப்பிஞல், அமர்த்தப்பட்டார். அரண்களைப் பலப்படுத்தும் பொறுப்பு வேலையும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆயினும், அவரால் அவ் வேலையில் தொடர்ந்திருந்து தம் தாய் நாட்டிற்குப் பணிபுரிய முடியாதபடி அவர் **1527ம் ஆண்டு ஜூன் மாதம் 23ந் தேதியில் உயிர் நீத்தார்.**

அனுபந்தம்—2

கௌடில்யரும், மாக்கியவெல்லியும்

கி. மு. நான்காவது நூற்ருண்டில் இந்தியாவில் வாழ்ந்தவரும் **நுண்ணறிவு படைத்தவருமான கௌடில்யர்**—கி. பி 15-ஆவது 16-ஆவது நூற்ருண்டுகளில் வாழ்ந்தவரான **ராஜதந்திரி மாக்கியவெல்லி**—இவ்விருவருடைய அரசியல் சித்தாந்தங்களுக்கும் உள்ள ஒற்றுமை—வேற்றுமை அம்சங்களேயும் ஒப்பிட்டு ஆராய்வது பயனுள்ள ஆராய்ச்சியென வாசகர்கள் ஒப்புக் கொள்வார்கள். இவ்விருவருடைய சித்தாந்தங்களேப் படிக்கும் எவரும் அவைகளில் பல ஒற்றுமை அம்சங்கள் பரவலாக இருப்பதைக் காண்பார்கள்.

கௌடில்யர்—மாக்கியவெல்லி இவர்களின் உள்ளத்தின் ஆழத்தை எளிதில் அளக்க இயலாது ; இவ்விருவரையும் எளிதில் அறிய முடியாது ; இவர்கள் இருவரையும் **ஒரே வகுப்பில்** சேர்க்கவும் முடியவில்லே ! இருவரும் எவ்வளவு விஷயங்களில் ஒத்திருக்கிருர்களோ அவ்வளவு விஷயங்களில் வேறுபட்டவர்களாகவுமிருக்கிருர்கள். ஆயினும் இந்த விஷயத்தில், இந்திய மேனுட்டு ஆசிரியர்களிடையே பலத்த அபிப்பிராய பேதமும், ஒற்றுமையும் இருப்பதைக் கவனிக்க வேண்டும். இந்த விஷயத்தில் பலத்த வாதப்பிரதி வாதங்கள் அரசியல் சரித்திர இலக்கிய உலகில் நடந்திருக்கின்றன; இன்னமும் நடக்கின்றன !

‘மாக்கியவெல்லியம்’—**‘கௌடில்யம்’** என்ற வார்த்தைகள் அரசியல் வாழ்வின் தீய வழிகளுக்குப் ‘பட்டப் பெயர்’களாகச் சூட்டப்பட்டிருப்பது ஒருபுறம் ; அவைகளே அவ்

வாறு அழைக்கும் ராஜதந்திரிகளும்--தனி மனிதர்களும் அவைகளின் போக்கிலேயே சிந்திப்பதும்—செயல்புரிவதும் மறுபுறம்:—இவ்விரண்டு காட்சிகளையும் உலகம் இன்றளவும் பார்க்கிறது!

அது கிடக்கட்டும்!......இவ்விருவருடைய கொள்கைகளுக்கும் உள்ள வேற்றுமை—ஒற்றுமை அம்சங்கள் ஆராயப்படுவதுதான் நமக்கு முக்கியமாகும்!

கௌடில்யர் இந்திய "மாக்கியவெல்லி"யே என்று B. K. **சர்க்கார்** என்பவர் எழுதியிருக்கிறார். ஆனால், **டாக்டர் விண்டர் நிட்ஸ்** என்பவரோ, இந்திய ராஜதந்திரியான கௌடில்யருக்குச் சிறந்த இடமளிக்க ஒப்பவில்லை! 'கௌடில்யர்—மாக்கியவெல்லி' என்று கூறுவதைவிட, 'மாக்கியவெல்லி—கௌடில்யர்' என்று அழைப்பதையே ஏற்றதென அவர் நினைக்கிறார்! "மாக்கியவெல்லி ஐரோப்பிய அரசியல் தத்துவ சாஸ்திரத்திற்கு விட்டுப் போன பிதுரார்ஜிதம், கௌடில்யர் கீழ்நாடுகளுக்கு அளித்ததைவிட அதிகச் சொந்தமானது" என்று **விண்டர்நிட்ஸ்** தீர்மானிக்கிறார். இப்படிப்பட்ட பலதரப்பட்ட அபிப்பிராயங்களையும் நாம் காண்கிறோம். ஆயினும், இத்தகைய விஷயங்களைப் பற்றிப் பேசுவதற்கு முற்றிலும் தகுதியுள்ளவர்களும் தக்க பாண்டித்யம் பெற்றவர்களுமான அறிவாளிகளிடையே—நூலாசிரியர்களிடையே கடுமையான வாதப் பிரதி வாதங்கள் எழுந்தன; எழுகின்றன என்ற உண்மையை நாம் அறிய முடிகின்றது. எனினும், இவ்விருவருமே மேதைகள் தான் என்பதை இவர்கள் அனைவரும் ஒருமனதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்; ஒப்புக் கொள்கிறார்கள் என்ற உண்மையையும் நாம் அறிய முடிகின்றது.

இந்த இரு மேதைகளின் 'ராஜதந்திர வழிகளுக்கும் உள்ள ஒற்றுமை—வேற்றுமை அம்சங்களை, அதே சுழலில் நாம் நிதானமாகச் சஞ்சாரம் செய்து ஆராய்வது பய

னுள்ள ஆராய்ச்சியாகும். ஆயினும், இவர்களில் யார் கூறுவது தற்கால அரசியல் தத்துவ சாஸ்திரத்திற்கு அதிகம் உபயோகமாயிருக்கவல்லது என்பதை அறிந்து நிர்ணயிக்கும் பொறுப்பை வாசகர்களுக்கு விட்டு விடுவதே விவேகமானதாகும் !

அறிவாளிகளின் புத்தி எவ்விதம் சிந்தித்திருக்க முடியும் என்ற இருள் சூழ்ந்த சுழற்பாதையில் புகுந்து, அவர்கள் வாழ்ந்த வெவ்வேறு காலத்தின் நிலைமையைக்கொண்டு மட்டும் சமாதானம் கூறுவது அவ்வளவு சிறந்த—அர்த்தமுள்ள போக்காகாது. ஒரு சிறந்த அறிவாளி, எவ்விதம் நம் காலத்திய பிரச்னைகளையும்கூடத் தீர்க்கவல்ல மார்க்கத்தைக் காட்டியிருக்கிறார்; அவர் ஏற்றிய தீபம் எவ்வாறு நமக்கு முன்னிருக்கும் இருண்ட பாதையையும் கடக்க உதவுகிறது என்று பார்ப்பதே சரியானதாகும்.

கௌடில்யரும், மாக்கியவெல்லியும் **நிச்சயமாக** நமது முக்கியமான ஆதாரப் பிரச்னைகள், நெறிகள் இவைகளை அலசி ஆராய்ந்திருக்கிறார்கள். கௌடில்யர் கி. மு. நான்காவது நூற்றாண்டிலும், மாக்கியவெல்லி கி. பி. பதினைந்து—பதினாறுவது நூற்றாண்டுகளிலும் வாழ்ந்தவர்கள் என்பதை மீண்டும் வாசகர்களுக்கு இந்த இடத்தில் ஞாபகப்படுத்துவது அவசியமாகிறது. பரிசோதனைகள் நல்ல பயனை அளித்ததைக் கண்ட ஒருவனுடைய குழப்பமில்லாத நம்பிக்கையைத்தான் கௌடில்யரின் சிந்தனைகள் எடுத்துக் காட்டுகின்றன. அசைக்க முடியாத ராஜீயக் கொள்கைகளின் அடிப்படையில் தன்னாலேயே அமைக்கப்பட்டதொரு சாம்ராஜ்யத்தை—அக்காலத்திய நாகரிக உலகிலேயே மிகப் பெரியதான, சிறந்து விளங்கிய மௌரிய சாம்ராஜ்யத்தின் கீர்த்தியைக் கண்ணாரக் கண்டவர் கௌடில்யர் என்பது குறிப்பிடத் தகுந்தது. அவருடைய கொள்கையின் உண்மை, அவராலேயே உறுதியாக ஸ்தா

பிக்கப்பட்ட சாம்ராஜ்யத்தின்மூலம் நிரூபிக்கப்பட்டதை யும் அவரே கண்டார் என்பதுதான் விசேஷமாக இங்கு குறிப்பிடத்தகுந்தது. ஆலோசனை செய்யும் திறனைத்தர வல்ல "**ஞான பலத்**"தையும், சக்கரவர்த்தியின் உற்சாக சக்தியைக் காட்டக் கூடியதும் "**பிரபு சக்தி**", "**விக்ரம பலம்**" என்பவைகளின் பண்பை உடையதுமான "**கோச—தண்ட சக்தி**"யையும் அவர் தம்முடைய நிர்மாணத்திறன் மூலம் நேரில் அறிந்தார். மாபெரும் சிந்தனையாளர்களின் எழுத்து மூலமான அறிவுக்களஞ்சியமும், பல நூற்றுண்டுகளாக வெற்றிகரமாக இயங்கி வந்த ஆட்சிகளைப்பற்றிய தெளிந்த உருவமுள்ளதொரு சரித்திரப் பரம்பரையும் அவர் ஆராய்ச் சிக் கண்ணுக்கு முன்னிருந்தன. இத்தகைய சிறப்புச் செல்வங்களும், தமக்கென ஒன்றுமில்லாத அவருடைய நிலைமையும்—அவருக்கு அமைதியையும், விருப்பு வெறுப் பற்ற உணர்ச்சியையும் அளித்தன. அதனுல்தான் அவ ரால், உலகத்தை ஆள்வதற்கான "அர்த்த சாஸ்திரம்" பற் றித் தீவிரமாகவும், நுண்ணறிவுடனும் ஆராய முடிந்தது. இதற்கு மாருக, மாக்கியவெல்லியோவெனில், மனக் குழப் பம் நிறைந்ததொரு காலம் ஈன்றெடுத்த குழந்தையாவார்! அக்காலத்தில் அமைதியும், பத்திரமும், சுகமும் இன்ன தென மக்கள் அறியவில்லை! கொலைகாரர்கள் மலிந்து கிடந்த காலமது; பழங்காலச் சிறப்புகள் அழிந்து கிடந்த காலமது; பிறக்கவிருந்த எதிர்காலத்தில் மிதமிஞ்சிய நம் பிக்கை வைக்கப்பட்டிருந்த காலமது. அக்காலத்தில்தான் மாக்கியவெல்லி வாழ்ந்தார். மனக் குழப்பத்தின் வெளிப் படையான விகார நிகழ்ச்சிகளே மிருகத்தனமும், பலாத் காரமும் என்பதை நாம் அறிவோம்! அந்த நிலைமையில்தான் பலவான்கள் மிருகங்களாகவும், பலமில்லாதவர்கள் செய லற்றும் மாறி விடுகிருர்கள்! அதே நிலைமையில், வீடு வாச லற்ற, வாழ்வதற்கான எவ்வித வசதியுமற்ற, உதவியற்ற, நண்பர்களற்ற, துணையற்ற ஒரு அறிவாளி அத்தகைய

நிலையிலும் எவ்வாறு சிதறுண்டு போகாமலிருக்கிறுன்? எவ்வாறு தனது புத்தியை வேலை செய்யும்படி தூண்டக் கூடிய சக்தியுள்ளவனுக இருக்கிறுன்?...இந்த ரகசியத்தை மனேதத்துவ சாஸ்திரிகள் தான் அம்பலப்படுத்தவேண்டும்! மனிதன் எந்த நிலைமைகளுடன் போராட நேரிடுகிறதோ, அவைதான் அவனுடைய சிந்தனைப் பண்பை உருவாக்கு கின்றது என்றுல், அசைவில்லாத மன அமைதியும், பற்றற்ற சிந்தனையும், மனப்பிராந்தியாலோ—உணர்ச்சியாலோ மூடப்படாத ஆத்ம வலிமையும், ஆசாபாசங்களால் கட்டுண்டுவிடாத மன நிலையும் கௌடில்யரிடம் காணப் படும் அளவிற்கு மாக்கியவெல்லியிடம் காணப்படவில்லை! பிளாரன்ஸில் பிறந்த மாக்கியவெல்லி அதற்காகவே எல்லாவற்றையும் இழக்கிறுர்! பிளாரன்ஸுக்காகவே அவர் தம் இதயத்தையே பறிகொடுத்து விடுகிறுர்! ஒரு இத்தாலியன் என்ற முறையில் இத்தாலிய ரத்தம் அவரது நாளங்களில் கொதித்து ஓடுகிறது! ரோமாபுரியின் சாதனை களைக் கண்டு பெருமிதம் கொண்டிருந்த ஒரு ரோமானியர் அவர்! அவர் தேவதூதனைப்போலத் தன் தாயகத்தை நேசிக்கிறுர்; அதே சமயம் அதை நரகம் போலவும் வெறுக் கிறுர். அவர் பேச்சு, நடையோ, அனல் கக்கும் உணர்ச்சி நடையாகும்! அவருடைய உணர்ச்சிகள், மனப் புண்களின் துக்கத்தால் தாங்க முடியாத சோதனைகளால் ஏற்பட்டு, இன்பத்தை நாடித் துடிக்கும் உணர்ச்சிகளாகும்! ஆத் திரத்தால் தூண்டப்பட்டவனுடைய இரக்கமற்ற கொடுமை முறைக்கு அவரை உந்தித் தள்ளுகிறது அவருடைய மனக் கொதிப்பு! எல்லாவித நடவடிக்கைகளையும் எதிர்க்கத் தூண்டும் '**குதிரைக் குணம் அல்லது உணர்ச்சி**' அவரது பேச் சுக்களில் காணப்படுகிறது! தத்துவ விசாரணையின் அடிப் படையில் தோன்றும் மானசீகமான அபிப்பிராயங்களை அவர் பிரதிபலிப்பதாகத் தெரியவில்லை! அவருடைய எண் ணங்கள் குமுறுகின்ற அடிவயிற்றிலிருந்து எழுகின்றன!

அவர் தாம் சலவைத் தொழில் செய்யும் குலத்தினள் ஒருவளுடன் கொண்டிருந்த காதல் விவகாரத்தை வெட்கப் படாமல் கூறுகிறார். எது ஒழுக்கரீதியில் வெறுக்கத் தக்கதோ, அதுவே அவருக்கு ஒழுக்க நீதியாய்த் தோன்றியது போலும்! அவருடைய இவ்வுலக சம்பந்தமான கோட்பாடு பிற்போக்கானதாகத் தெரிகிறது. தத்துவ-சாஸ்திர நியதிகளை யொட்டிய—தன் வலிமையைக் காத்துக் கொள்ளக்கூடிய இம்மையுணர்ச்சியை அவர் பெற்றிருந்ததாகச் சொல்வதற்கில்லை!

மாக்கியவெல்லி ரோமாதீனத்தை வெறுக்கிறார்; அதே மூச்சில், அவர் மகான்கள்—சித்தர்கள் மீது பக்திகொண்டிருக்கிறார்; எனினும், அந்தப் பக்தி அவரைத் தூய வழிகளுக்கு இழுத்துச்செல்லவில்லை! கொடுந்துன்பங்களுக்கு ஆளான அவருடைய "ஆத்மா" ஒருபுறம் 'சாந்தி தேவ'னிடம் (ஏசுவிடம்) விசுவாசம் காட்டுகிறது; மறுபுறம் பண்டைய ரோமச் சிறப்புகளை எண்ணியெண்ணிப் புளகாங்கிதம் அடைகிறது. ஆனாலும், அவருடைய விசுவாசமோ அல்லது மகிழ்ச்சியோ ஒன்றிலும் நிலையாக இருக்கவில்லை! "இரு துருவங்களுக்கும் மத்தியில் இரட்டை உருவங்களுடன் இரட்டைக் குரல்களுடன் ஊசலாடுகின்ற—பேசுகின்ற ஒரு சிறந்த அறிவாளியின் தோற்றமே மாக்கியவெல்லி!" ஒரு முறையான சாஸ்திரத்தை ஆழ்ந்த அறிவுடன் செயல்படும் ரீதியில் தொகுக்கவல்ல திறன் அவரிடம் காணப்படவில்லை. தம் வசமிருந்த நேர்மையான திறமைச் சாதனங்களைக்கொண்டு குறைந்த காலத்திற்குள் அவர் பிரம்மாண்டமான காரியத்தைச் சாதித்தார் என்பது உண்மையே! **மாக்கியவெல்லியின் "அரசன்" கண்ணைப் பறிக்கும் பேரிடி மின்னலே யாவான்!** "அவன்" சிறிதும் பெரிதுமான பல இடி முழக்கங்களைச் செய்துவிட்டான்! ஆயினும், அவ்விடி முழக்கங்களில் நற்குணங்கள்தான் ஒலிக்கவில்லை! மாக்கியவெல்லி, **சீலத்தை அதிகாரத்துடன்**

மூட்டவேண்டுமென்று நிச்சயமாக விரும்புகிறார். அவருக்கு அதிகாரமே, பிரதானக் கூட்டாளியாக இருப்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதிகாரத்தையும் சீலத்தையும் ஒன்றுபடுத்தி, ஒன்றின் பொருளும்—அவசியமும் மற்றொன்றின் மூலம் விளங்கும்படிச் செய்யவேண்டுமென்று அவருக்குத் தோன்றாமலிருந்ததுதான் நமக்குப் புதிராக இருக்கிறது! ஆனாலும் இந்தக் கண்ணோட்டத்துடன் மட்டும் நாம் மாக்கியவெல்லியை மதிப்பிடக் கூடாது. ஏனெனில், எது வஞ்சனை? எது துரோகம்? அவை எவருக்குப் பொருந்தும்? எது தர்மம்? எது அதர்மம்?—இவைகளை அவ்வளவு சுலபமாகவும்—நுணுக்கமாகவும் ஆராய்ந்து விளக்கிவிட முடியாது! நாம் எதிர்பார்ப்பதைவிட, இன்னும் அதி நுட்பமாகவே, மாக்கியவெல்லியின் அதிகாரம் சீலத்துடன் பொருத்தப்பட்டதாகக் கூட இருக்கலாம்!

ஆனால் இந்த விடுகதைக்கு மாக்கியவெல்லியின் நூல்களில் பதிலைக் காணமுடியவில்லை! இதே கேள்வி கௌடில்யரின் "அர்த்த சாஸ்திரத்"தை யொட்டியும் எழுகின்றது. ஆயினும், மகாபாரதத்தில் (சாந்தி பர்வத்தில்) வரும் அடியிற்கண்ட ஸ்லோகம் இந்தக்கேள்விக்கு "அர்த்தசாஸ்திர" உணர்ச்சியுடனேயே பதில் அளிப்பதைக் காண்கிறோம்.

"ஸர்வஸ்ய ஜீவலோகஸ்ய ராஜ தர்மப் பராயணம்,
திரிவர்கோஹி ஸமாஸக்தோ ராஜதர்மேஷு கௌரவ,
மோக்ஷ தர்மஸ்ச விஸ்பஷ்டா ஸகவோத்ர ஸமாஹிதா,
யதாஹி ரஸ்மயோ ஸ்வஸ்ய த்விராடஸ்யாங்குஸோயதா,
நரேந்தர தர்மோ லோகஸ்ய ததா பிரகரணம் ஸ்மிருதம்"
—(சாந்தி பர்வம்: 56 : 3-5)

இதன் பொருள்: "சகல ஜீவராசிகளுடைய க்ஷேமமும் ராஜ தர்மத்தைப் பொறுத்தே யிருக்கிறது. ஏ! கௌரவனே! "தர்மார்த்த காம"மென்ற மூன்று புரு

ஷார்த்தங்களை அடைவதும் அதைப் பொறுத்தே இருக்கின்றது, மோட்சத்தை அடைவதற்கான லட்சணங்களும் அதில் அடங்கியிருக்கின்றன! வித்துக்கு மழையைப் போல, யானைக்கு அங்குசத்தைப்போல, உலகத்தை நடத்திச் செல்லவல்லதொரு சாதனமாக மக்களின் மன்னராட்சிக்கலையுமிருக்கின்றது.”

அறநெறியைக் காக்கவல்ல சமூகப் பொருளாதார வசதிகளின் அடிப்படையிலேயே கொஞ்சங்கூட இங்குமங்கும் பிறழாத முறையிலேயே கௌடில்யரின் ராஜத்வ சித்தாந்தம் வகுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மாக்கியவெல்லியின் ராஜீயக் கருத்துக்களின் ஆழத்தை அறிய நாம் முயலுகின்றபோது நமக்குப் பல துன்பகரமான சந்தேகங்கள் எழுகின்றன. அவைகளைப் போக்கிக்கொள்ள நாம் கௌடில்யர் என்ற விஷ்ணு குப்தரிடம் திரும்பும்போது எவ்வளவு ஆறுதலும், பயனும் ஏற்படுகின்றன! மாக்கியவெல்லி தருகின்ற ஏமாற்றத்தையும் வேதனையையும் கௌடில்யர் மாற்றிவிடுகிறார்! கௌடில்யர் மாக்கியவெல்லியின் சித்தாந்தத்திற்குப் புகழையும், உயர்வையும் அளிக்கின்றார் என்றாலும் மிகையில்லை !

மாக்கியவெல்லியின் உண்மை, துன்பத்தின் கர்ப்பத்தில் சொந்த வீழ்ச்சியின் துயரத்தில் தோன்றுகிறது. ஆனால், நிர்மலமான காலைத் தண் காற்றில் (அதாவது வானில்) தன் சிறகுகளை விரித்துக் கூட்டில் இறங்கும் பறவையைப் போல சாணக்கியரிடம் உண்மை மலர்கிறது, விஷயங்களின் உண்மைத் தன்மையை ஊடுருவிப் பார்ப்பதற்கு வாழ்க்கை—பிறப்பிடம்—அதிர்ஷ்டத்தின் திருவிளையாடல்கள்—உலகப் புரட்சிகள் முதலியவைகள் எல்லைகளை வகுத்துவிடுவதில்லை என்ற உண்மையைச் சரித்திரத்தில் காண்கிறோம்! கி. மு. நான்காவது நூற்றாண்டிலிருந்த மௌரிய சாம்ராஜ்ய காலத்திய இந்தியாவின் சாணக்கியர்

எந்த எண்ணத்தால் உந்தப்பட்டாரோ அதே எண்ணத்துடன்தான் கி. பி. 15—16-வது நூற்றுண்டுகளில் வாழ்ந்த இத்தாலிய மாக்கியவெல்லியும் ஜீவிக்கிறுர் என்பதைக் கவனிக்கவேண்டும்! **சந்திரகுப்த மௌரியனின்** உன்னத ஒழுக்கமுள்ள **பொது விவகார மந்திரியால்** (சாணக்கியரால்) வகுக்கப்பட்ட அறிவிற் சிறந்த அரசியல் கோட்பாடுகளைப் புதுப்பிக்கும் ஒரு கருவியாக, **பிளாரன்ஸ் நகரத்தைச்** சேர்ந்த—**மெடிஸி** காலத்தில் ஊரைவிட்டு விரட்டியடிக்கப்பட்ட—ஒழுக்கந் தவறிவிட்ட **அகதியால்** (மாக்கியவெல்லியால்) இருக்க முடியாதென்று எவரே சொல்ல முடியும்! நிதர்சனமாகக் காட்சியளிக்கும் அழியாத உண்மை விஷயங்களில் மானசீகமாகக் குதிப்பதற்கு ஒரு ஜீவனின் வாழ்வோ அல்லது தாழ்வோ தடையாயில்லை! மேலும் அழிவற்ற உண்மையை அறிவதற்கு வம்சம்—வர்க்கம்—குலம்—பண்பாடு—நாகரிகம்— தேசம்—இவைகளைப் பொறுத்த வேற்றுமைகளும் தடையாக இருக்க முடியாது! எவ்வளவோ வேற்றுமைகள் நிறைந்த சூழ்நிலைகளிலும்—காலங்களிலும் வாழ்ந்தும், எவ்வளவோ வேற்றுமைகளுள்ள அறிவுத் திறன்—பழக்க வழக்கம்—ஆராயும் விதம் இவைகளைக் கொண்டுமிருந்த இந்த இரண்டு மனிதர்களுக்கிடையே **அடிப்படையான ஒழுக்கத்தைப் பற்றி** அபிப்பிராய ஒற்றுமை நிலவுவதுதான் விசேஷமானதாகும்! இந்த ஒற்றுமை அம்சம், அந்தப் பிரச்னையின் **சர்வகால உண்மையை** நமக்கு எடுத்துக் காட்டுவதுபோல அமைந்திருப்பதும் விசேஷமானதாகும்!

கௌடில்யர் மாக்கியவெல்லியல்ல; அதே போல, மாக்கியவெல்லியும் கௌடில்யரல்ல! ஆனுல், இருவரும் அதே பிரச்னைகளையும், விகாரமாய் எழுந்த பல விஷயங்களையும் சமாளிக்க முயன்றனர்; இருவரும் ஒரேவிதமான ஒழுக்க விதிகளையே ஆதரிக்கின்றனர்; ஒரே விதமான வெறுப்பு-விருப்புகளிலிருந்தும் நம்மை விலக்க விரும்புகின்றனர்;

ஒரே மாதிரியான ஜீவாதாரமான பிரச்னைகளே அவர்களை உறுத்துகின்றன; அந்த வற்றாத பிரச்னைகளுக்கேற்ப நடந்து கொள்ளுமாறு, இவ்விருவரும் நம்மை, ஒரே போக்கில், நிர்ப்பந்தப்படுத்துகிறார்கள்!

'சாணக்கியர்-மாக்கியவெல்லி-இவ்விருவருடைய இதய பூர்வமான விருப்பங்களின் தரம் ஒரே தன்மையுள்ளது தான்' என்று ஒப்புக்கொள்ள மறுக்கும் சிறந்த அறிஞர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள்! ஆயினும், அவர்களைக் கண்டு நாம் ஆச்சரியப்பட வேண்டியதில்லை! 'இவ்விருவருடைய சித்தாந்தங்களிலும் அதிசயிக்கத்தக்க ஒற்றுமை நிலவுவதைக் கண்டு நாங்கள் திகைத்துப்போய்விட்டோம்' என்று கூறுபவர்களைப் பற்றியும் நாம் அதிகமாகப் பேச வேண்டியதில்லை!

மாக்கியவெல்லி பிறந்திராவிடினும், அல்லது கௌடில்யர், தன்னை எவரும் அறிந்துகொள்வதற்கு முன், காட்டிற்குள் இறந்திருப்பினும், இவ்விருவரும் எந்தப் பிரச்னைகளைத் தீர்க்க வழி தேடினார்களோ அதே பிரச்னைகளை எழுப்பி, அவைகளைத் தீர்க்க இவர்கள் காட்டிய வழிகளைப் போல வழிகளைக் காண்பிப்பதற்கு வேறு கருவிகளோ அல்லது அறிஞர்களோ ஏற்படாமல் போகா! இவ்விருவரின் சொந்த வாழ்க்கையின் வாழ்வு-தாழ்வு பற்றிய விஷயங்களுக்கு நாம் அதிக முக்கியத்வம் கொடுக்க வேண்டியதில்லை. இந்த இரண்டு ராஜதந்திரிகளும், ராஜீய திருஷ்டியில் வகுத்துள்ள சித்தாந்தங்களின் சாரம் என்னவென்பதையும், இவர்களுடைய ராஜீய முடிவுகள் எங்கு-எவ்வளவு தூரம் விலக்கப்படவே முடியாத தேவைகளாகச் சமுதாய வாழ்வில் படர்ந்திருக்க முடிகின்றன வென்பதையும், நாம் அறிந்துகொள்ள விரும்புவதுதான் சரியாகும்! நமது கலாசாலைகளின் **தர்க்க அரங்கு**களில், தங்களையறியாமலேயே தங்களுடைய பேச்சுக்களில் கீழ்நாட்டு **'ஹாப்ஸ்'**

(Hobbes) களாகவும், 'நீட்ஷே' (Nietzeche) களாகவும் மாறிவிடும் மாணவர்களை நாம் பார்க்கவில்லையா? **லாக்** (Locke) **ரூஸோ** (Russeau) போன்றவர்களின் பிரதிபிம்பங்கள் **சீனு-பெரு** முதலிய நாடுகளில் புராதன காலத்திலேயே இருந்திருக்கவில்லையா? **உண்மையைச்** சித்தரிக்கும் மிகவும் புதுமையான அபிப்பிராயங்களில்-சிலவற்றில்முற்றிலும் பழமையின் நறுமணம் வீசுவதையும், **பைதகோரஸ்** (Pythagoras) கன்பியூஷியஸ் (Confucius) முதலியோரால் கூறப்பட்டுள்ள சில அபிப்பிராயங்களில் முழுக்க முழுக்கப் புது மணம் வீசுவதையும் நாம் உணரவில்லையா? **ஸ்வீடன்பர்க்** கூறுகிறபடி, "ஆண்டுகள் கழியக் கழிய வானுலகிலுள்ள தேவர்களும் வாலிபர்களாகிக் கொண்டிருக்கிறுர்கள்; ஆனுல், அவர்களில் மிகவும் வயதானவர்களுங்கூட வாலிபர்களே!" தோரணங்களாலும் வண்ண மலர்களாலும் அலங்கரிக்கப்பட்ட காலத்தின் மனேரம்மியமான ஒளிவீசும் வளைவுகளின் ஊடே, **சத்தியம்** அமைதியாக, ஒரு யுவனின் வதனப் பொலிவுடன் கம்பீரமாகச் சென்றுகொண்டேயிருக்கிறது! அழிவற்ற சத்தியத்தின் கம்பீர நடை எந்தக் காலத்திலும் இப்படித்தானிருக்கும்! எனவே, **நிரந்தரமான நட்சத்திர மண்டலங்களைக் காட்டும் சாஸர வெளி போன்றவர்களே கௌடில்யரும் - மாக்கிய வெல்லியும்!**

"சரித்திர-சமூக நிகழ்ச்சிகளை இயற்கையான நிகழ்ச்சிகளென முதன் முதலாகக் கருதியவர் மாக்கியவெல்லியே... ராஜதந்திரிகளின் செயல்களால் ஏற்படக்கூடிய விளைவுகளைக் கொண்டே அவர் சரித்திர-சமூக இயற்கை நிகழ்ச்சிகளை ஆராய்ந்தார். மதம்-ஒழுக்கம் முதலியவற்றை அவர் கண்டிக்கும் விதமோ அல்லது அவருடைய தனித்த அபிப்பிராயங்களோ அல்லது விருப்பு-வெறுப்புகளோ தம் ஆராய்ச்சியைப் பாதிக்கும்படி அவர் இடந்தரவில்லை. அதனுல்தான், அவருடைய நூல்கள் மூலம் **அப்பட்டமான**

அரசியல் தத்துவ சாஸ்திரம் உருவாக முடிந்தது. தர்மம்-ஒழுக்கம் ஆகியவற்றின் நியதிகள் பழமையானவை; மாறுதல் அற்றவை என்று ஒப்புக்கொள்வோம். அதே சமயம், அரசியல் செயல்களின் நிரந்திரமான-பிரத்தியட்ச பூர்வமான தனித்த தன்மையையும் ஒப்புக்கொள்ள வேண்டும். அப்படிச் செய்யாத வரையிலும்-தனி மனிதன் செய்கைகளுக்கும்-ராஜாங்கக் கொள்கைகளுக்கும் உள்ள வேற்றுமையை உணராமலிருக்கும் வரையிலும் அரசியல் தத்துவ சாஸ்திரம் என்பதே ஏற்பட முடியாது" என்று வில்லாரி எழுதுவதை இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் நன்ருகக் கவனிக்க வேண்டும். இந்த வாதத்தின் நேர்மையைக் குறைவாக மதிப்பிடாமல், நாம் அர்த்த சாஸ்திர வழி வந்த கௌடில்யரின் கருத்தைக் கவனிப்போம்!

மக்கள் விவகாரங்களுக்கு வழி காட்டுகின்ற அத்தனை சாஸ்திரங்களையும் கௌடில்யர், பொதுவாகப் பாகுபாடு செய்திருக்கிருர். "**ஆன்வீக்ஷகி**"க்கு அவர் முதலிடம் தந்திருக்கிருர். தெளிவான அபிப்பிராயம் ஏற்படும் ரீதியில் செய்யப்படும் பகுத்தறிவுள்ள ஆராய்ச்சித்திறனே "ஆன்வீக்ஷகி" எனப்படும்; அது தன்னுடைய செலவாணித் தன்மையால் அறிவின் நீதிஸ்தலத்தில் தன்னை ஸ்தாபித்துக் கொள்ளுகின்ற உரமுள்ள ஞானமேயாகும்! எவ்வாறு பரம்பரையிலிருந்தும் பெரியோர் வாக்கிலிருந்தும் ஞானம் என்பது பிரிக்கப்படுகின்றதோ, அவ்வாறே அவர் "ஆன்வீக்ஷகி"யையும் பிரித்துக் காட்டுகிருர். கௌடில்யரின் முறையில், பரம்பரையாக வந்த விவரங்களுக்கு இரண்டாவது இடமும், "**வார்த்தா**"வுக்கு மூன்ருவது இடமும், அளிக்கப்பட்டிருக்கின்றன. இயற்கையின் போக்குகளின் மீது மனித ஆதிக்கத்திற்கு வழி செய்கின்ற அத்தனை சாஸ்திரங்களும் "வார்த்தா"வில் அடங்கியிருக்கின்றன. நான்காமிடம் "**தண்ட நீதி**"க்கு அளிக்கப்பட்டிருக்கின்றது. மனிதனுடைய நல்வாழ்வுக்காக, அதற்கேற்றபடி, மனித உறவு

கள்-வாழும் முறைமைகள்-சட்டதிட்டங்கள் ஸ்தாபனங்கள் இவைகளையெல்லாம் ஒழுங்குபடுத்தும் விதிமுறைகள் அடங்கிய சாஸ்திரமே "தண்ட நீதி"யாகும். அவருடைய இந்த அற்புதமான பாகுபாட்டு ஏற்பாட்டால், வாழ்க்கையின் நான்குவித அடிப்படையான இன்பங்கள் மிளிருகின்றன. அந்த இன்பங்களாவன:

1. சிந்தனை செய்வதால் உண்டாகும் இன்பம்.
2. வழிவழியாக வந்த ஞானச் சிறப்பால் ஏற்படும் ஆனந்தம்.
3. இயற்கை-பொருளாதாரச் சூழ்நிலைகளின் மீது ஆதிக்கம் கொள்வதால்-அவைகளைத் தன் கட்டுப்பாட்டிற்கு உட்படுத்தி அதன் மூலம் சுக போகங்களை அடைவதால் அனுபவிக்கும் சந்தோஷம்.
4. இவைகளுக்கு எல்லாம் மேலாக, மனிதனின் தனியானதும்-சமுதாயத் தன்மை வாய்ந்ததுமான வாழ்க்கை, பூரணத்துவம் பெறுவதால் ஏற்படும் மகிழ்ச்சி.

இந்த நான்கு அடிப்படை இன்பங்கள் இல்லாது, எவரால்தான் பூரணமான வாழ்வை நிர்மாணிக்க முடியும்? "தண்ட நீதியி"ல் அடங்கியிருக்கும் வாழ்க்கையின் ஜீவாதாரமான இந்த நான்கு நோக்கங்களில்-இன்பங்களில் **நான்காவதுதான்** மற்ற மூன்றிற்கும் அஸ்திவாரமானதாகும் என்று கௌடில்யர் சாற்றுகிறார். வேறுவிதமாகக் கூறுமிடத்து, எல்லாவற்றையும் மதிப்பிடும் மேலான அதிகாரியாகவும், தன் பரிபூரண வாழ்வைத் தானே அமைத்துக் கொள்ளும் சிற்பியாகவும், சந்தர்ப்பத்திற்கும்-அதிர்ஷ்டத்திற்கும் மேலாக நிற்கும் சக்திமானாகவும், பூலோக "**ஸ்வயம்பு**"வாகவும் (பூலோகத்தில் தன் தொழில்களையெல்லாம் தானே வகுத்துக்கொண்டும் - ஒழுங்குபடுத்திக் கொண்டுமிருக்கிறவனாக) மனிதனை ஆக்குவதுதான் நிஜ

மான பண்பாடாகும்; நாகரிகமாகும்" என்று கௌடில்யரே கூறுவது கவனிக்கத் தகுந்தது! இந்த நிபந்தனைகளற்ற சமுதாயத்தில் மனிதர் எல்லாம் மிருக நிலைக்குத் தாழ்ந்துவிடுவர் என்கிறார் அவர். "ஆன் வீக்ஷகி" ஆத்மாவிற்கு விடுதலையைத் தருகிறது; வேதங்கள் புலனடக்கத்திற்கு வழிகாட்டுகின்றன; 'வார்த்தா' பொருளையும், பூலோக இன்பங்களையும் அளிக்கின்றது; "தண்ட நீதி" சரியான சமூக அமைப்பை நிர்மாணிக்கவும், அதை நிலை நிறுத்தவும் செய்கிறது; "தண்ட நீதி" இல்லாவிடில், மற்ற மூன்றினாலும் எவ்விதப் பயனுமில்லை!...கட்டுப்பாடுள்ள சமூக அமைப்பு இல்லாவிடில், கட்டுப்பாடான மனித சாதனைகள் என்பன இரா! மனிதனுடைய திறமையால் ஏற்படுகின்ற பிரத்தியட்சச் சாதனை மூலமே இந்தச் சமூகக் கட்டுப்பாடு ஏற்படுகிறது. **கடவுளால் நமக்கு இதை அளிக்க முடியாது!** சமுதாயம் என்கின்ற உணர்ச்சியே **தெய்வீகமானது**தான் என்பதில் சந்தேகமில்லை! தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்ளாதவன் எப்போதும் வாழ்வில் பூராப் பயனையும் அடைய முடியாது. இத்தனையையும் "அர்த்த சாஸ்திரம்" வற்புறுத்துவதைக் காண்கிறோம்! மனித முயற்சியால், நம்மால் இவ்வுலகில் எவ்வளவு சிறந்த பலன்களை அடையக்கூடுமோ, அவ்வளவையும் பெறுவதற்கு வழி காட்டும் ஒரு சமுதாய தத்துவ சாஸ்திரமே கௌடில்யரின் "அர்த்த சாஸ்திர" மாகும்! அதைக் கேவலம், "பொருளின் சாஸ்திரம்" என்று அழைப்பது சரியல்ல. மக்கள் நிறைந்த உலகைப் பரிபாலிக்கும் வழிகளை விளக்கும் ஒரு சமுதாய அரசியல் சாஸ்திரமாகவே கௌடில்யர், "அர்த்த சாஸ்திர"த்தை எழுதியுள்ளார். மனிதர்கள் கூடி வாழ்வதையும், அவ்விதக் கூட்டு வாழ்க்கைமுறை, வகையான கட்டுப்பாட்டிற்குள் ஒழுங்கு படுத்தப்படுவதையுமே கௌடில்யர் தமது நூலில் வற்புறுத்தி யிருக்கிறார். "பொருளாதார வசதிகளைப் பெருக்க வல்ல பொருளாதார விதி முறைகள் மூலம் இக்கூட்டு

வாழ்க்கை இயங்குகின்றது; இக்கூட்டு வாழ்க்கையின்மூலம் முன்னேறுகின்ற மனித சமூகத்தை, ஒப்புவமையில்லாத அரசியல் விதி முறைகள் அடக்கியாள்கின்றன. மனிதர் களின் கூட்டு வாழ்விற்கு, அவனிடமிருந்து உற்பத்தியாகும் பலத்திலிருந்துதான் அரசியல் விழிப்பு ஏற்படுகிறது; இந்த அரசியல் விழிப்பிலிருந்துதான் மக்கள்மீது மனிதனுடைய ஆதிபத்திய அதிகாரமும் ஜனிக்கிறது.'' தமது "அர்த்த சாஸ்திரம்'' என்ற நூல் மூலம் மக்கள் சமுதாய வளர்ச்சிக் கான ஒரு முறையான அரசியல் தத்துவ சாஸ்திரத்தை இவ்வளவு நுட்பமாகவும், திறமையானதாகவும் கௌடில் யர் வகுத்திருக்கும்போது, அவரிடத்திலும் அவரது சாஸ்தி ரத்திலும் கட்டுக்கோப்பான அரசியல் கோட்பாடுகளின் பிறப்பைக் காணவே முடியவில்லை என்று பண்டிதர்கள் கூறுவது ஆச்சரியத்தைத் தருகிறது. ஒன்று, அவர்கள் புத் தியோ அல்லது மனமோ கெட்டிருக்க வேண்டும்; அல்லது சாணக்கியரைவிடத் தாங்கள் ஒழுக்கத்திற் சிறந்தவர்கள் என்ற செருக்கு அவர்களுடைய கண்களை மறைத்திருக்க வேண்டும். விஷ்ணுகுப்தரிடம் தம்முடைய கோட்பாடு களைச் சாஸ்திர ரூபமாக முறைப்படுத்திவிட வேண்டு மென்ற ஆர்வம் அதிகமாகக் காணப்படுகின்றது'' என்று **பாந்தோபாத்யாயா** கூறுவதை இச்சந்தர்ப்பத்தில் நாம் கவனிக்க வேண்டும்.

ஆகையால், ஐரோப்பாவிற்கு, மாக்கியவெல்லியும், மனித சமுதாயத்திற்கு கௌடில்யரும், அரசியல் சமூக தத் துவ சாஸ்திரத்தை, இதர சாஸ்திரங்களைப் போலவும் அவைகளை யொட்டியும் ஒரு கட்டுப்பாடுள்ள சாஸ்திரமாக் கியவர்கள் என்பதையும், பெருமைக்குரியவர்கள் என்பதை யும் நாம் ஒப்புக்கொள்வதில் தவறில்லை! இவ்விருவர்களில், கௌடில்யர் நன்ருகவும் பூரணமாகவும் சிந்தனை செய்து சரியான முடிவுகளுக்கு வந்தவராகக் காணப்படுகிருர். அவ ருடைய **"ஜனபதம்'' அல்லது மக்கள் ஆதரவுடன் நடை**

பெறும் அரசியல் சமுதாய வாழ்வு இயங்கும் பிரதேசம் என்பது குறுகிய எல்லைகளுக்குள்ளடங்கிய பிரதேசம் ஆகாது. சர்வதேச—சர்வ காலங்களுக்கும் வியாபிக்கவல்ல பொதுவானதொரு உலக உணர்ச்சிப் பண்பையே அவர் மனத்திற் கொண்டிருந்தார் என்று காணக்கிடக்கின்றது. மாக்கியவெல்லியின் இத்தாலியைப்பற்றிய ஆசையையும், ரோமாபுரியைப் பற்றிய அழகையும், பிளாரன்ஸைப் பற்றிய கவலையையும் போன்ற குறுகிய தாபங்களை நாம் காண்பதில்லை. கௌடில்யரின் முறையில், ராஜ்யங்கள் எல்லாம் தங்கள் குறுகிய தேசீய உணர்ச்சிகளையும், எல்லைகளையும் மறந்துவிட்டு, உலக வியாபகமானதொரு சர்வ தேசீய சமுதாயமாக மாறிவிட வழியுண்டு. யுத்தங்கள்—துன்பங்களைப் பற்றியும், அவைகளைச் சமாளிப்பதற்கு அவர் வகுத்துள்ள வழி முறைகளும் (அவை 2000 ஆண்டுகளுக்கு முன்பு வகுக்கப்பட்டவையே யாயினும்) — இன்றைய நிலைமைகளுக்கும் பொருந்தக் கூடியவையாகவே இருக்கின்றன. "மனிதர்களின் குணக்கேடுகள், அருவருக்கத்தக்க இழிந்த வாழ்வு நடத்த அவர்களுக்கிருக்கும் ஆவல், அவர்களுடைய பேரர்சைப் பித்தம், தங்களுடைய ஆத்ம சொரூபத்தையே சிதைத்துக் கொள்வதில் அவர்களுக்கிருக்கும் உற்சாகம், கேவலமானவற்றை நாடிச் செல்வதிலும், அவைகளை அடைவதிலும் அவர்களுக்கிருக்கும் ஆசைப் பெருக்கு, பூரண வாழ்வை அடைய முடியாதபடி அவர்களைத் தடுக்கும் கூச்சம் முதலியவை விடுதலை பெருத மனித இனத்தின்,—எல்லாவற்றையுமே பாதிக்கின்ற—சுபாவங்களாக இருப்பதைப் பார்க்க முடிகின்றது"—என்கிருர் கௌடில்யர். இந்த விஷயத்தில், மாக்கியவெல்லியும், கௌடில்யரும் அநேகமாக ஒரே மாதிரியே பேசுகிருர்கள். மனிதர்களிடம் காணப்படும் இந்த மிருகத்தன்மையை, தம் "அரசன்" மனிதர்களின்மீது தன் அதிகாரத்தைச் செலுத்துவதற்கான ஒரு சாதனமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டு

மென்று மாக்கியவெல்லி கருதுகிருர். ஆனல், கௌடில் யரோவெனில், அரசனுடைய ஆட்சியின் தூய்மையிலும், மந்திரிகள்—அதிகாரிகளின் நேர்மையிலுமே அதிக அக் கறை காட்டுகிருர்; அந்த அக்கறையால்—கவலையால்தான் அவர் மனிதர்களுடைய குறைபாடுகளைப் பற்றிக் கடுமை யாகக் கூறுகிருர்:—"அரசன் நாள்தோறும் தனது சிப்பந்தி களின் நடத்தையைக் கண்காணித்து வரவேண்டும்; ஏனென்ருல் மனிதர்களின் மனம் அடிக்கடி மாறும் இயல் புள்ளது; வேலை செய்யும்போது குதிரையைப் போன்று, குணத்தை மாற்றிக் கொள்வார்கள்......வெல்லப்பானை யில் கைவிட்டவன் எவ்வாறு சிறிதளவாவது வெல்லத் தைத் தன் விரலால் தொட்டு நக்காமலிருக்கமாட்டானே, அவ்வாறே அரசாங்க வருமானத்தில் சிறிதளவாவது சாப் பிடாமல் வேலைக்காரர்களால் இருக்க முடியாது. தண்ணீ ரில் நீந்திச் செல்லும் மீன், தண்ணீரை அருந்துகிறதா, இல் லையா என்று காண்பது எவ்வளவு அரிதோ அதேபோல, அரசாங்க வேலையிலிருக்கும் ஊழியர்கள் லஞ்சம் வாங்கு கிருர்களா இல்லையா என்பதைக் காண்பதும் அவ்வளவு அரிதாகும்" என்று கௌடில்யர் குறிப்பிடுபவதைக் காண் கிருேம்.

அவமானம், கேடு, கொலை முதலியவற்றிலிருந்து அர சனைக் காப்பதற்காகவே கௌடில்யரும், மாக்கியவெல்லி யும் மனிதனுடைய துரோக புத்தியையும், பேராசையையும் குறிப்பிடுகின்றனர்.

ஒரு பெரிய மரம் அதன் நிழல் தரும் கிளைகளுடன் வெட்டப்படும்பொழுது, அதன் நிழலின் கீழ் வாழும் பல இளஞ் செடி கொடிகள் அழிவதைப்போல, அரசனது வீழ்ச்சியால் குடிகளும் அழிவார்கள் என்று கருதுகிருர் கௌடில்யர்; அதனல்தான், அரசன் தன்னைக் காத்துக் கொள்ளவேண்டிய அவசியத்தை அதிகம் வற்புறுத்து

கிருர். அவர் கூறுகிருர்:—"தன் சுதந்திரத்தை இழந்து' நாட்டைவிட்டுத் துரத்தப்பட்ட போதிலும் அரசன் தனது மன உறுதியை இழந்துவிடக் கூடாது; தன் உயிரை மாய்த்துக்கொண்டு விடக்கூடாது; எப்போதும் ஜாக்கிரதையாக வாழவேண்டும். சிறிய சந்தர்ப்பம் கிடைத்துவிட்டாலும் அதை அவன் துரிதமாகப் பயன்படுத்திக்கொண்டு, பொருள்—படையைத் திரட்டி, நண்பர்கள்—உற்ற மந்திரிகள் முதலியவர்களின் உதவியுடன் தான் இழந்த ராஜ்யத்தை அடையும் குறுக்குப் பாதையைப் பின்பற்ற வேண்டும்."

அரசனை ராஜ்யபாரம் செலுத்தவல்ல—'தான்' என்பதற்ற ஒரு கருவியாகவே, அவர் மதிக்கிருர். தூய்மையான வாழ்க்கையை நடத்துபவனே அவருடைய "அரசன்".இதை அவர் மறக்கவேயில்லை. "அவன், மணந்து, இல்லற வாழ்க்கையை ஏற்குமுன், கண்டிப்பான பிரம்மச்சரிய விரதத்தை நன்கு அனுஷ்டிக்க வேண்டியவன்; மனதையும், ஆசைகளையும் அடக்கியாள வேண்டியவன்; நண்பர்களுக்கும்—அறிவாளிகளுக்கும் அளித்த வாக்கைக் காப்பாற்ற வேண்டியவன்; சத்தியவானுக இருக்கவேண்டியவன்; கடமை செய்வதற்கே தன் வாழ்வை அர்ப்பணிக்க வேண்டியவன்; துன்பப்படுகிறவர்கள், விதவைகள், பெற்ருேரை இழந்தவர்கள், நோயாளிகள், முதலியவர்களை நேரில் கவனித்து அவர்களைக் காப்பாற்றவேண்டியவன்; கடவுளுக்கு முன்பும், மனித சமுதாயத்துக்கு முன்பும் நேர்மையுள்ளவனுக இருக்கவேண்டியவன்; மூட நம்பிக்கையற்ற தெய்வபக்தியுள்ளவனுக இருக்கவேண்டியவன்; தைரியத்தை இழக்காமல், சகுனங்களை அறிந்திருக்கவேண்டியவன்; தனது சாமர்த்தியத்தைப் பரிசோதிப்பதும், தாழ்வில் மனதைத் திடப்படுத்துவதுமான அதிர்ஷ்டத்தின் நிலையாமைத் தத்துவத்தில் நம்பிக்கை வைக்க வேண்டியவன்; வாழ்வில் நெறிதவறி, எக்காளமான சுகபோகங்களில் ஈடுபடாமலும், நிதானமாகவும்

கர்வமில்லாமலும் இருக்கவேண்டியவன்.” இவ்விதமான குணதிசயங்களைத் தம் “அரசன்” பெற்றிருக்க வேண்டும் என்று கௌடில்யர் எடுத்துக் காட்டுவதுடன், மாக்கிய வெல்லியின் “அரசனு”டைய குணதிசயங்களைப் பற்றி, வில்லாரி பின்வருமாறு கூறுவதை ஒப்பிட்டுப் பார்ப்போம்!

“மாக்கியவெல்லி அரசனுடைய சொந்த வாழ்வையும், ஒழுக்கத்தரத்தையும் முற்றிலும் மறந்துவிட்டார். அவர் தம் “அரசனை”, அரசின் தலைவன் பிரதிநிதி வடிவம் என்று மட்டுமே கூறுகிறார். தம்முடைய ஒரே மாதிரி யான அபிப்பிராயத்தைத் தெரிவிக்க அவர் “அரச னுடைய அழிவு”: “அரசாங்கத்தின் அழிவு” என்ற சொற்றொடர்களைத் தாறுமாறாக உபயோகிக்கிறார். அவ ருடைய உருவெளித் தோற்ற “அரசனி”ல், சாதாரண மனி தன் நிர்ப்பந்தமாக ஒன்றிப் போய் மறைந்து விடு கிறான்!”

ராஜீய சமூகப் பணியில் சாதாரண மனிதன் ஈடுபட வேண்டும் என்று சொல்லிவிட்டு, அதே மூச்சில் அவன் எல்லாச் சமூக விதிகளையும் கடந்தும் நடக்கலாம் என்று விதிப்பதைக் காட்டிலும் பெரும் குழப்பமான அபிப்பிரா யம் வேறு ஏதாவது இருக்க முடியுமா!......“சொன்ன சொற்காப்பது சரிதான்” என்று மாக்கியவெல்லி கூறுவ தன் ‘**பொருள்**’ அவரே கூறுகிறபடி இதுதான்! “வாக் கைக் காப்பதைப் பற்றிச் சிறிதும் நினையாதவர்களும், மற்றவர்களைத் தங்களுடைய தந்திரங்களால் மயக்கக் கற்றவர்களுமான அரசர்களே அரும்பெரும் செயல்களைச் செய்து முடித்தவர்களாவார்கள். இந்த **உண்மை** நம்முடைய காலத்திலேயே அனுபவத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டிருக் கிறது. நாணயமான முறைகளைப் பின்பற்றிச் செயலாற் றியவர்களைவிட இப்படிப்பட்ட அரசர்களே காரிய வெற்றி யைக் கண்டார்கள்.”

'பொதுக் கடமையும், சொந்த நாணயமும் எப்போதும் ஒத்து வருவதில்லை; சொந்த நற்குணமும்—சீலமும், பயனுடைய அரசியலும் எப்போதும் முரண்பட்டவை என்பது அரசியல் வாதிகளின் வாழ்க்கை மூலம் நிரூபிக்கப்பட்டிருக்கின்றன'......இந்த திருஷ்டியில்தான் மாக்கியவெல்லியும், தமது "அரசனு"க்கு அரசியலில் இருக்க வேண்டிய அந்தஸ்தை நிர்ணயித்திருக்க வேண்டும்! அரசன் நற்குணமுள்ளவனாக இருக்க வேண்டியது அவசியம் என்று அவர் கூறுகிறார்; உடனேயே அவன் நற்குணம் படைத்தவனைப் போலத் **தோன்றுவதுதான் அவசியம்** என்றும் கூற விரைகிறார்! "நற்குணம் படைத்தவனாக இருப்பதாலும், அதன்படியே நடப்பதாலும் அவனுக்கு நிச்சயமாகக் கேடுதான் நிகழும். எனவே, அப்படிப்பட்டவனாகத் தோற்றமளித்தாலே போதும்! அதுவே அவனுக்கு நலம் தரும் என்று நான் உறுதியாகக் கூறுவேன். தயாளனாகவும், இரக்கமுள்ளவனாகவும், சத்தியவானாகவும், மதாபிமானியாகவும் **தோன்றுவதுதான்** அவனுக்கு உபயோகமாயிருக்கும்! இந்தக் குணங்களே அற்றவனாக இருப்பதுதான் நலம் என்று அவன் நினைப்பானானால், அப்பொழுது அவன் பகுத்தறிவுடன் எப்படி முற்றிலும் வேறு மனிதனாக மாறி நடந்து கொள்ள வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும்"... இவ்வாறு பேசும் மாக்கியவெல்லியின் கூற்றின்படி பார்க்கப் போனால், **கெட்டவர்களின் சரித்திரமே உலகச் சரித்திரம்** என்றாகிவிடுகிறது!

15-16வது நூற்றாண்டுகளின்—மறுமலர்ச்சிக் காலத்தின் அதிசயமான—பலதரப்பட்ட இழிந்த நிலைமைகளின் **சோக நாடகத்தில்**, மாக்கியவெல்லியின் "அரசன்" துன்பகரமான **கதா நாயகனே** ஆவான்! இந்தச் சோக நாடகச் சித்திரத்தின் பின்னணியாக இருப்பதுவே மத்தியகாலக் குழப்பம். அதன் அடிவானத்திலிருந்து, ஒரு ஆவியைப் போல

மாக்கியவெல்லியின் "அரசன்" கிளம்புகிறுன்! அவ்வளவு மோசமாயிருந்தது அக்காலம்; கொலைத் தொழிலில் பெரும் லாபம் கண்டவர் நிறைந்திருந்த காலம்; கொடுமையான பலாத்காரத்தைப் பயின்றவர் நிறைந்திருந்த காலம்; வஞ்சனைகளிலே மூழ்கியிருந்த வஞ்சகர்கள், வஞ்சிக்கப்பட்டவர்களின் **நாயகர்களாகவும், ரக்ஷகர்களாகவும்** காட்சியளித்த காலம்!

'உலகில் வாழும் எல்லா மனிதர்களும் கெட்டவர்கள்; அவர்களின் காரியங்களும் தீயவை; பூமி 'சைத்தா'னுல் படைக்கப்பட்டது' என்று ஒரேயடியாகத் தீர்மானித்து விடுவதானுல், எவ்விதப் பிரச்னையும் எழாதல்லவா!......... பூலோக ஆட்சியில் நல்லவர்களும், உன்னத லட்சியங்களை மறந்து, கெட்டவர்களாகி விடுவார்கள் என்ருல், இந்தப் புதிருக்கு விடைதான் எங்கே?......பூலோகத்தில் **'கடவுளர் ஆட்சியை'** நிர்மாணிக்க விரும்பும் தத்துவ ஞானிகள்தான் இதற்கு விடையளிக்க வேண்டும் போலும்!

ஆயினும், இந்தக் கேள்விக்குக் கௌடில்யர் பதில் அளிக்கிருர். அவர் தரும் விடையைக் கவனிப்போம்:—

ஒரு மிருகம் மற்ருெரு மிருகத்தை உயர்த்தாது! மனிதனுடைய எல்லா நிலைகளிலும், சரீரம், சமூகம், ஒழுக்கம், இன்பம், ஆன்மிகம், அறிவு முதலிய எல்லாத் துறைகளிலும் கண்கூடான காரிய வெற்றி பெறக் கௌடில்யர் நிர்ணயிக்கும் அரசியல் சமூகம் ஒரு உதாரண அடிப்படையாகவே அமைந்திருப்பதைக் காண்கிருேம். "கட்டுப்பாடானதொரு அரசியல் சமூகத்தால் தான் எவ்வித நற்பயனையும், எந்தத் துறையிலும் பெறமுடியும்" என்ற இந்நோக்கில் அவர், "ராஜதர்ம"த்தை யொட்டிய அரச நெறியையும் "பிரகரணம்" என்ற உலகைக் கட்டுப்படுத்தும் வழியையும் வகுத்திருக்கிருர். அரச பதவியின் அற நெறியை அவர் மறக்கவேயில்லை! அரசனுடைய அதிகாரம்

—கடமையைப் பற்றிப் பூமியில் வாழும் மானிடர் எவ்வளவு தாறுமாருகப் பேசினுலும், கௌடில்யர் மட்டும் நிலைகுலையாது நின்று, "அறநெறியின் உறைவிடமே அரச பதவி" என்று முரசு கொட்டுவதைக் காண்கிருேம்! ஆயிரமாயிரம் முரண்பட்ட—குழப்பமான போக்குகளையெல்லாம் அடக்கி, அசைக்க முடியாத சுதந்திர வாழ்வில் ஒன்றுபட்டு நிற்குமாறு மனித குலத்தை மாற்றுவதுதான் **ராஜத்வத்தின்** தார்மிகநெறியென்று அவர் சந்தேகத்திற்கிடமின்றிக் கூறிவிட்டார்! அதனுல்தான் "**ராஜா**" என்ற வடமொழிச் சொல்லிற்கு, '**ஜனத்திரளை ஒன்று சேர்ப்பவன்**' என்று அர்த்தம் கூறப்படுகிறது. "**தானே பல ரூபங்களாக விரிய வல்ல பிரஜாபதியின் பிரதிபிம்பமே**" **கௌடில்யர் சித்தரிக்கும்** "**பிரஜாபத்திய**"**த்தில் அவருடைய** "**அரச**"**னுடைய நிலையாகும்!** மனிதனிடமுள்ள சில குணச் சிறப்புகளே, அவனை அரச பதவிக்கும் தகுதியாக்குகின்றன. "**மந்திர சக்தி**"—"**பிரபு சக்தி**"—"**உத்சாக சக்தி**" ஆகியவைகளே அக்குணச் சிறப்புகள். அவைகளைத் தொடர்ந்து உபயோகிக்கும் ஆற்றலுக்கே "**உத்யமா**" எனப்படுகின்றது. இந்த "**உத்யமி**"யாக இருப்பதில் சளைக்காதவனே கௌடில்யரின் கீர்த்தி வாய்ந்த "அரசன்"!

'சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி நடப்பதே வாழ்க்கையின் வழிகாட்டித் தத்துவம்; அரசனுயினும் சரி—அடிமையாயினும் சரி, மனிதனும் ஒரு வேட்டையாடப்படும் முயல்தான். அதிர்ஷ்டத்தின் சக்கரத்தில் திரும்பத் திரும்ப அறைபடும் ஒரு விளையாட்டு பொம்மைதான்!'... இந்த லட்சணமுள்ள மனிதனை கௌடில்யரின் "அர்த்த சாஸ்திரம்" அரசனுக ஏற்றுக்கொள்ளவில்லை. மேலே கூறப்பட்ட மனிதன் சதா பயத்தால் பீடிக்கப்பட்டுக் கிடக்கிருன்; எவ்வளவு பயந்தவனுக இருக்கிருனே அவ்வளவு இரக்கமற்றவனுகவுமிருக்கிருன்! மாக்கியவெல்லியால் வர்ணிக்கப்பட்ட

பிரதான அரசர்களான சிஸிலி நாட்டு அகதாக்லீஸ், ஒலி வராட்டோ-டி-பெர்மோ, சிஸேர் போர்ஜியா - இவர்கள் எல்லாம் உண்மையில் பயங்கொள்ளிகளேயாவர்! காளி தாஸர்-பாணர் போன்ற கவி சிரேஷ்டர்களைக் கவிதையையும்,காவியத்தையும், நாடகத்தையும் இயற்றச் செய்த, கௌடில்யரின் மகா "அரச"னுடைய குணங்களுக்கும், மேலே கூறப்பட்ட மாக்கியவெல்லியின் "பிரதான புருஷர்" களின் குணங்களுக்குந்தான் எவ்வளவு கோரமான வேற்றுமை! அரசனுடைய வெற்றிகளைப்பற்றிக் குறிப்பிடும் கௌடில்யர், ராஜ்யங்களை ஜெயித்து இணைத்துக் கொள்வதை ஆதரிக்கவில்லை! அவருடைய "விஜிகித்ஸு" கொள்கையின்படி. "உலகத்தைக் காப்பாற்ற கொடுமைகள் பலவீனங்களை எதிர்த்து விடுதலைப் போர் புரிவதே அவருடைய அரசின் நோக்கமாகும். விடுதலை செய்யவே அவ் வெற்றிகள்." அவருடைய "உத்யமா"-"விஜிகித்ஸு" என்ற கொள்கைகளின்படி, "ராஜ்யாதிகாரம் என்பது, நேர்மை-சத்தியம் என்பனவற்றின் பரிமாணத்தை அடைகிறது."

பலாத்காரம்-சூழ்ச்சி, இவைகளைப் பிரதிபலிக்கும் மாக்கியவெல்லியின் "அரசனு"க்கும், கௌடில்யரின் ராஜ ரிஷி போன்ற "அரசனு"க்கும் கோரமான வேற்றுமை யிருந்தாலும், மாக்கியவெல்லியின் கொள்கை உறுதியையும், லட்சியப் பற்றையும் நாம் மறந்து விடுவதற்கில்லை. ஒரு ஆசிரியர் என்ற முறையில் மாக்கியவெல்லி தமது "அரசன்" என்ற நூலை எழுதிய போது, ராஜ்யாதிகாரப் பதவியென்னும் அதியுன்னதப் பதவியில் அமர வேண்டிய சரியான ராஜதந்திரியைப் பற்றியே சிந்தனை செய்திருக்கிறார்; கோடிக்கணக்கான மக்களை, அடிமைத்தனம்—கொடுமை—பசி—பட்டினி போன்ற துன்பங்களிலிருந்து விடுவிக்க வல்ல சுத்த வீரனைப் பற்றியே எண்ணியிருக்கிறார்; பலமே சிறந்த மதிப்புள்ள லட்சிய சாதனமாகும் என்று கருதியிருக்கிறார்! ஆயினும், அக்காலத்திய கிறிஸ்துவ மத போத

கர்கள், "சிறந்த லட்சியமே சீரிய பலம்."—"மனிதர்கள் வாழ வேண்டுமானால் இறக்க வேண்டும்"—"எது சேமிக்கப்படுகின்றதோ, அதுதான் இழக்கப்படுகின்றது"—"ஆத்மாவின் சிறப்பிற்காக எது இழக்கப்படுகின்றதோ, அதுதான் நிரந்தரமாகச் சேமித்து வைக்கப்படுகின்றது"—இவ்விதம் போதனை செய்தார்கள்! இதன் விளைவாக எழுந்த மாக்கியவெல்லியின் ஆத்திரத்தில்தான் அவருடைய **வலிமைத் தத்துவம்** (Philosophy of Force) பிறந்தது! இத்தத்துவம் இந்தப் போதனைகளை முற்றிலும் எதிர்க்கிறது! மக்களைப் பலவிதங்களிலும் மயக்கிச் சுரண்டி வஞ்சித்து ராஜ சொரூபத்தை போப்புகளின் ரோமாதீனம் எடுத்துக் கொண்டபோதுதான், மாக்கியவெல்லி, மதச் சார்பற்ற அரசின் அவசியம் பற்றியும், பலமே சிறந்த லட்சிய சாதனம் என்றும் வலியுறுத்த ஆரம்பித்தார் என்பதைக் காண்கிறோம். 'மதம் விடும் கோரிக்கையைப் பூர்த்தி செய்யும் எந்த ஸ்தாபனத்தாலும், அரசியல் எழுப்பும் பிரச்னைகளுக்குப் பரிகாரம் காணமுடியாது. மத சம்பந்தமான சாஸ்திரங்களும்—அரசியல் சாஸ்திரங்களும் ஒரே வகுப்பைச் சேர்ந்தவையல்ல. மத நியதிகள் வேறு; அரசியல் விதிகள் வேறு. மதமும்—அரசியலும் வெவ்வேறு தொழில் மண்டலங்களைச் சேர்ந்தவை. அஃவகளுக்குள் ஒற்றுமையுமில்லை; வேற்றுமையுமில்லை!'—இவ்விதம் மாக்கியவெல்லி வாதிக்கிறார். இதே உண்மையைக் கௌடில்யரும் நன்கு உணர்ந்திருக்கிறார்! அதனால்தான், சிறிதளவும் வெறுப்பில்லாமல், அவர் **புரோகிதனை** ராஜாங்க விஷயங்களிலிருந்து அறவே பிரித்து விடுகிறார்! ஆயினும், அரசியல் கலப்பில்லாத மற்ற சமூக விஷயங்களில், "தகப்பனை மகன் பின்பற்றுவதுபோல அரசன் புரோகிதனைப் பின்பற்ற வேண்டும்" என்று அவர் கூறுகிறார்!

ஒரு ராஜதந்திரி என்பவன் எப்படிப்பட்டவனாக இருக்கவேண்டும் என்பதை மாக்கியவெல்லி தம் மனக்கண்

முன் மறைபொருளாகக் கண்டிருக்கிறார்! ஸ்தாபனங்களை நிர்மாணிப்பதற்குத் தன்னால் எவ்வளவு தூரம் இயலும் என்பதைத் தன் அறிவு—திறமை—ஆவல், இவற்றால் நிர்ணயிக்கவல்லவனே ராஜதந்திரி என்றும்—அவனே உலகாயத வசதிகள் அனைத்தையும் திரட்டுகின்ற சக்தியின் வடிவம் என்றும் மாக்கியவெல்லி கற்பனை செய்திருக்கிறார் என்றே சொல்ல வேண்டும்! இப்படிக் கற்பனை செய்த அவருடைய மனத்தை, அப்பொழுது இத்தாலியில் நிகழ்ந்த எல்லையற்ற அக்கிரமங்கள் வாட்டியிருந்திருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா!.........அவருடைய உணர்ச்சியின் ஆழமும்—வேகமும்—அவரது எழுத்து நடையில் **மந்திர சக்தியுடன்** தொனிக்கின்றன! விஷயங்களின் உண்மைகளில் ஒன்றிப் போவதால் ஏற்படும் உள்ளத்தின் ஒளி பெற்றவனின் இதய ஊற்றிலிருந்துதான் கவிதா சக்தி சிறப்புற எழும்புகிறது!—இந்தக் கவித்துவ நயத்தை அவரது எழுத்திலும்—பேச்சிலும் பார்க்க முடிகின்றது!

"மனிதனுடைய ராஜதந்திரமே மனிதனுக்கு மதிப்பை அளிக்கிறது" என்ற செய்தியையே மாக்கியவெல்லி மிக உணர்ச்சியுடன் மக்களுக்குச் சொல்ல முன் வந்தார்! அவருடைய எழுத்திலும்—பேச்சிலும் தேசபக்தி ததும்பி நிற்பதைக் காணமுடிகின்றது. தேசபக்தியும்—ஆழ்ந்த அபிலாஷையும் அவருக்கு இருந்திருக்காவிட்டால், அவர் காலத்திலேயே அவருடைய நூல்களையும் அவரையும் இழிவாகத் தாக்கியவர்களின் கண்டனங்களை எவ்விதக் கோப—தாபமின்றியும் அவரால் ஏற்றுக் கொண்டிருக்க முடியாது! கௌடில்யரின் "அர்த்த சாஸ்திர"த்தை அறிந்தவர்கள் அரசியல் ஞான வளர்ச்சிக்கு மாக்கியவெல்லி செய்த அழியாத தொண்டை அறிந்து கொள்ளச் சிரமப்படமாட்டார்கள்; அவர்கள் "மாக்கியவெல்லியம்" என்பதும், மாக்கியவெல்லியும் ஒன்றல்ல என்பதையும் அறிவார்கள்! அப்

பொழுதுதான் தர்ம சாஸ்திரங்களுடன் ஒப்பிடப்படக் கூடிய "அர்த்தசாஸ்திர"த்தை, "மாக்கியவெல்லிஸ"த் தோடுகண்ணை மூடிக்கொண்டு ஒப்பிடவும் துணியமாட் டார்கள்!

நடைமுறையை அனுசரித்து கௌடில்யரும், மாக்கிய வெல்லியும் வற்புறுத்தியுள்ள அரசியல் கோட்பாடுகளில் நாம் காணும் "தண்ட நீதியும்" செங்கோலும் இல்லாவிட் டால், "மாத்ஸ்ய நியாய"த்தை யொட்டிய அராஜகமும், அமைதியின்மையுமே ஏற்படும்! பலப் பிரயோகத்தை அடிப்படையாகக் கொண்ட **ராஜத்துவ** முறையில், நெருக் கடிக் காலத்தில் அதர்மத்தையும் பின்பற்றலாம் என்று இவ்விருவருமே போதிக்கிறார்கள்.

"தண்ட நீதி" அல்லது பலப்பிரயோக அடிப்படை யிலேயே கௌடில்யரின் உள் நாட்டு—வெளி நாட்டுக் கொள்கைகள், ஒற்றர் ஸ்தாபனமுறை, மரியாதையை விரும்பும் மக்கள் மனம்—அவர்களின் புண்ணிய உணர்ச்சி உட்பட மனிதர்களுடைய அத்தனை பலவீனங்களையும் பயன்படுத்திக் கொள்ளும் பிரம்மாண்டமான திட்டங்கள், எதிரிகளின் எல்லாச் சாதனங்களையும் நிர்மூலமாக்கி உள்நாட்டுப் படைத் திறனை வளர்த்திக் கொள்ளும் வழிகள்—இவைகள் எல்லாம் வகுக்கப்பட்டுள்ளன. ராஜதந்திரத்தின் ஒரு சாதுர்ய அம்சமாகவே கௌடில் யரும்—மாக்கியவெல்லியும், 'அரசன் எல்லா நற்குணங் களையுமுடையவனாகவும், மத பக்தியுள்ளவனாகவும், தன்னை வெளிக்குக் காட்டிக் கொள்ள வேண்டியிருக்கிறது' என் கிறார்கள். மேலும், 'பகிரங்கமாக மதத்தை அலட்சியம் செய்யும் அரசன், மக்களிடமிருந்து தனித்துவிடும் அபாயத் திற்குள்ளாவான்' என்றும் 'ஜெயிக்கப்பட்ட நாடுகளுக்கு ஸ்தல சுயாட்சி வழங்க வேண்டும்' என்றும் இவர்கள் இரு வரும் கூறியிருக்கிறார்கள்.

கௌடில்யரும்—மாக்கியவெல்லியும் இரக்கமற்ற சித்த முள்ளவர்களாகவும், ரத்த வெறி பிடித்தவர்களாகவும் காணப்படுகிருர்கள்! சில சந்தர்ப்பங்களில் சமயவாதத்தை யும், கொள்ளையையும் இவர்கள் முறையான—ராஜீய நட வடிக்கைக்கு அவசியமான தத்துவங்களாக ஆக்கியிருப் பதையும் காண்கிறோம்! எந்த அதிகார அல்லது வலிமைத் தத்துவ அரசியலிலும் இவ்வித ஆதாரக் கொடுமைகளைப் பார்க்க முடிகின்றது!

"மாத்ஸ்ய ந்யாய"ப்படியுள்ள சமுதாய அமைப்பைக் கௌடில்யர் ஏற்றுக்கொள்ள மறுக்கிருர். அதிலிருந்து சமுதாயத்தைக் காப்பாற்றவே அவர் 'அரசனற்ற உலகம் சைத்தான் வசமே போய்விடும்" என்று கூறுகிருர். அவ ருடைய முடியரசு வாதத்திற்கு இதே உணர்ச்சிதான் ஆதாரமாயிருக்கிறது!...மாக்கியவெல்லியும் இதேமாதிரியே எண்ணுகிருர். பலாத்காரம்—சூழ்ச்சி இவைகளின் அணி வகுப்புகளைக் கண்ட அவருடைய மனம் வேதனைப்பட்டது; நொந்த இதயத்துடனிருந்த அவர், இருளில் ஒளியைத் தேடித் திரியும் ஓர் ஆத்மாவாகக் காட்சியளித்தார். அதனுல் தான், அவர், சரித்திரத்தில் வரும் "புகழ் வாய்ந்த குற்ற வாளி"களையும்கூடப் புகழும் அளவுக்குப் போய்விட்டார் போலும்! துஷ்ட மனிதத் தத்துவத்தைப் பித்தனைப்போல, அவர் வெறி கொண்டு ஆதரிக்கிருர்! அவருடைய கொதிக் கின்ற இதயப் பாலைவனத்திலிருந்து அனல் காற்று வீசுவ தால்தான், அவருடைய "அரசனு"ம் அனல் கக்கும் அடக்குமுறையாளனுகக் காட்சியளிக்கிருன்! அவர் அடக்கு முறையை வரவேற்கிருர்! சிஸேர் போர்ஜியா போன்ற கொடியவர்களைப் போற்றும் வேகத்தில் அவர் எதையும் மிகைப்படுத்திப் பேசுகிருர்; உண்மையைத் திரித்தும் கூறு கிருர்; விஷமியான பையன், பள்ளியில் அடிபட்டதற்காக, வீட்டில் குறும்புத்தனமாக நடந்து கொள்வது—அதில்

களிப்பது போலிருக்கிறது அவருடைய மனப்போக்கு! **நீட்ஷேயின்** நூல்களில், அதி மனிதத் தத்துவத்தில் நம்பிக்கையுள்ளவர்களின் இத்தகைய ஆத்ம நோயைக் காணலாம்! அவர் (**நீட்ஷே**), குடிவெறி கொண்ட ஒரு ராட்சஸன் பூமியில் இடித்துப் புடைத்துக்கொண்டு வருவதையும், மனித வர்க்கம் என்ற குள்ளனை அவமதித்து நடந்து கொள்வதையுமே சித்தரித்திருக்கிறார்! **நீட்ஷேக்கு** அதிமனிதத் தத்துவத்தில் அக்கரை யிருந்ததாலேயே இப்படிச் சித்தரித்திருக்கிறார் என்று சொல்ல முடியாது! தமது காலத்தின் தவறுகளைச் சவுக்காலடித்து ரத்த விளாராக்குவதைக் கண்டு களிப்பதில்தான் அவருக்குப் பரம திருப்தி ஏற்பட்டிருந்தது!

விஷ்ணு குப்தரிடம் தம்மைத் தாழ்த்திக் கொள்ளும் எண்ணத்தையோ அல்லது தாமே **அதிமனிதன்** என்று பெருமை யடித்துக் கொள்ளும் கர்வத்தையோ காண முடியவில்லை. மாக்கியவெல்லியும் தமது பிற்காலத்தில் தம்முடைய "அரசனைப்" பற்றிய கொள்கையை மாற்றிக் கொண்டு விடுகிறார். அதாவது தம் தீய "அரசனை" பின்புறத்தில் தள்ளி விடுகிறார்! ஆனால், கௌடில்யரின் "அரசனோ" மாறாது நிற்கிறான்; அவருடைய ஞானமும் சஞ்சலமற்று ஒளி வீசி நிற்கிறது! மாக்கியவெல்லியோ தட்டுத் தடுமாறுகிறார். கௌடில்யரோ, "மாதஸ்ய நியாயத்"திற்கு எதிர்ப்பானதொரு **பலத்தின் சேமிப்பாக** அரச பதவியை மதிக்கிறார். 'பிரபுக்களின் கூட்டம் பாராளுமன்றம்-பொதுச்சபை-குடிமக்கள்-இவர்களில் எவருமே சமுதாயத்தின் உரிமைகளின் பேரால் அரசிற்கு எதிரிடையாகப் போக முடியாது; அரசியல் திட்டம் எவ்வளவு அழகாயிருந்தாலும் சரி, அல்லது அதிகாரத்தைக் குறைக்க எவ்வளவு சாமர்த்தியமான முறைகள் இருந்தாலும் சரி, வசதியற்றவர்களின் நலன்கள் சரியாகக் காப்பாற்றப்படமாட்

டாது'—இந்தத் திருஷ்டியில்தான் கௌடில்யரும், மாக்கிய வெல்லியும், விதியால் அனுப்பப்பட்ட தலைவனின்-உண்மை யான ராஜதந்திரியின்-லஞ்சத்திற்கு இரையாகாத புருஷ னின் ஒரே மனித ஆட்சியையே வரவேற்கிறார்கள். "மாத்ஸ்யநியாய"த்தை எதிர்க்கும் ஒரு அறைகூவலே கௌடில்யரின் **ராஜத்வ**மாகும். அதனிடம் தெய்வீக அன் பின் ஒப்பற்ற தன்மையும் சகல ஜீவ ராசிகளையும் காக் கின்ற கருணையும் கலந்திருக்கின்றன. பிரகிருதியின் கேடு களை வெல்வதற்குப் பிரகிருதி பூர்வமான வழிகளையே அது கொண்டிருக்கிறது. சமுதாயக் கேடுகளை ஜெயிப்பதற்கு அதன், **பூபாலன்** என்ற பதவியில் சகல அதிகாரங்களும் பொருத்தப்பட்டிருக்கின்றன. அந்த **பூபாலன்** எல்லோரு டைய அன்பையும், கவலைகளையும் தன்னுடையதாகப் பாவித்துக் கொள்ளுகிறான். ஆயுத பலங்களுடன் அடிமைப் படுத்தநினைக்கும் ஆக்கிரமிப்பாளன்—உள்நாட்டுச் சூழ்ச் சிக்காரன்-லஞ்சம் வாங்கும் மந்திரி, மமதையுள்ள சேனாதி பதி-நாசவேலைக்காரன், சிக்கனமறியாத பிரஜை-மூடனான பந்து—'பொன்னில் கண்ணும், பிறருடைய பையில் கையு மாக'க் கொழுத்துத் திரியும் வியாபாரி அல்லது முதலாளி- தான் முன்னேறுவதாக நினைத்துக் கொண்டு கீழ் நோக்கிச் செல்லும், தூக்கத்தில் நடக்கும் மனிதன்-இவர்கள் யாவரும் அவனுக்கு எதிரிகளே யாவர்! கௌடில்யரின் வார்த்தை களில், "ஒவ்வொருவனுக்கும் நெருங்கிய எதிரி **அவனே** யாவான்; அவனே அவனுடைய இனந் தெரியாத எதிரியு மாவான்; ஒவ்வொருவனுக்கும், அவன்கூட இருப்பவ னுடைய மடமை, அறிவின்மை, திறனின்மை, சோம்பல்- முதலியவைகளிலிருந்து பாதுகாப்புத் தேவையாக இருக் கிறது." இந்த நிலைமையிலிருந்து மனிதனைக் காக்க முன் வருவதில்தான், முடியரசோ அல்லது குடியரசோ தன் அதி காரத்திற்கு எவ்வித பங்கமும் வராதபடி தன்னைப் பலப் படுத்திக்கொள்ள வேண்டியிருக்கிறது என்று கௌடில்ய

ரும்- மாக்கியவெல்லியும் அபிப்பிராயப் படுகிருர்கள். **“நம் காலத்திய புரட்சியைப் பற்றிய சிந்தனைகள்”** என்ற தமது நூலில் ஹெரால்ட்லஸ்கி கூறகிறபடி, “அரசியல் புன ரமைப்பு வேலை, பலாத்கார மின்றியும் சமாதான வழியி லும், சம்மதத்தின் பேரிலும் நடைபெறக்கூடிய நிலைமை, **“சிறந்த தலைமை”** ஏற்படுவதையே பொருத்திருக்கிறது.” கேடு விளைவிக்கும் பலவீனங்களையும், குற்றங்களையும், ஒடுக்கிவிட்டு, மக்கள் சமுதாயத்தை முன்னேற்றப் பாதை யில் இட்டுச் செல்ல வேண்டுமானல், **பலமுள்ள தலைமையே அவசியமென**, தம்முடைய **ராஜத்வ** சித்தாந்தத்தின் மூலம் கௌடில்யரும், தம்முடைய **“அரசன்”** மூலம் மாக்கிய வெல்லியும் வற்புறுத்துவதையே நாம் பார்க்கிருேம்!

மனிதனை மனிதனிடமிருந்தே காப்பதாக மதம் உரிமை கொண்டாடுகிறது! மனிதனுக்குள்ளிருக்கும் “உள் மனி தனை” வெல்வதற்கு, அதாவது ஆத்மாவைச் சீர்திருத்துவ தற்குத் தானே எல்லாக் காரியங்களையும் செய்வதாக அது உரிமை பாராட்டுகிறது! சில தனிப்பட்டவர்கள் விஷயத் தில் மதத்தின் இச் சாதனை வெற்றி பெற்றிருக்கலாம்! ஆனல், எல்லாச் சுதந்திரங்களுக்கும் ஆதாரமாயிருக்கும் அரசியல் சுதந்திரமும்—அரசியல் அறிவும், மக்கள் சமுதா யம் பூராவும் மதச்சார்பற்ற மகிமையாலும்—சக்தியாலுமே சீர்திருந்த வேண்டும்மென்றே எதிர்பார்க்கின்றன! சமூகத் திற்குள்ளேயே நிலவிடும் வகுப்பு வர்க்கப் போராட்டங் களுக்கு எதிரானதொரு தற்காப்பு அரணுக, **ஸ்திரமான முடியரசால்தான்** நிற்க முடியும் என்று, மேலே சொன்ன காரணத்தாலே தான், தமது “அர்த்த சாஸ்திர”த்தில் கௌடில்யர் வியக்தமாகவும், தமது “அரசனி”ல் மாக்கிய வெல்லி கூடார்த்தமாகவும் வற்புறுத்தியிருக்கிருர்கள் என்பதை அறிய முடிகின்றது! அவர்களுடைய “அரசர்” களுக்கு இழைக்கப்படும் தீமைகள் மூலம் குடிகள் தங்க

ளுக்கே தீமைகளை இழைத்துக் கொள்கின்றனர் என்று துணிந்து கூற அவர்கள் சிறிதேனும் தயங்கவில்லை என்பதையும் அறிய முடிகின்றது.

எனவே, **ராஜத்வத்**தின் உலகாயதப் பண்பைச் சுற்றி மதத்தின் சுகந்தம் பரவியிருப்பதை நாம் இவ்விருவரின் கொள்கைகளிலும் காணமுடிகின்றது. ராஜ்யத்தின் உலகாயத நன்மைகளை விருத்தி செய்வதும், ராஜ்யத்தைப் பெருக்குவதுமான **தார்மிகக் கடமை**தான் அச்சுகந்த மணமாகும்! இந்த அபிப்பிராயம் கொஞ்சம் முரண்பட்டதாகத் தெரியலாம்! தம் காலத்திய மதபீடத்தின் இழிந்த செயல்களைத் தீவிரமாகத் தாக்கும் வேகத்தில், மாக்கியவெல்லி இந்த முரண்பாட்டைக் கவனிக்கவேயில்லை! ஆனாலும், கௌடில்யரும்—அவருக்கு முந்தி வாழ்ந்த இதர அர்த்த சாஸ்திர வாதிகளும் இந்தப் பிரச்னையைப்பற்றிப் பகிரங்கமாகவும்—தெளிவாகவும் அலசி ஆராய்ந்திருக்கிறார்கள். கோனுக்கும் குடிமக்களுக்கும் உள்ள உறவில், அவர்கள், அரசனின் மேலான கடமையை மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். அரசனுடைய உன்னதமான—மத ரீதியிலான—ஆத்மிகமான தூய்மையான கடமைகளைத் தெளிவாக்கும் அவர்கள், அரசன் குடிகளுக்குச் செய்யும் சமுதாயப் பணியில் தன் வாழ்வையே அர்ப்பணம் செய்துவிட வேண்டுமென்று, கூறுவதை நாம் காண்கின்றோம். இதைத் தவிர வேறு மோட்சம்—யாகம்—யக்ஞம்—அர்க்கியம்—தீக்ஷை போன்ற எதுவும் அவர்கள் கூறுகின்ற "அரசனு"க்குக் கிடையாது. "நடைமுறை உலக வாழ்வை யொட்டிக் கடமையுடன் பிணைக்கப்பட்டதே அவர்களுடைய "**ராஜத்துவ**" சித்தாந்தம். அறவொழுக்கங்களான பந்தங்களால் அது கட்டுண்டு இருப்பதாகும். அரசனுடைய அரசியல் நடவடிக்கையே ஒரு **யோகந்தான்!**" ஸ்தாபன முறையாக இயங்குகின்ற அரசியல் சமுதாயத்தின் லட்சியங்களுடன்,

அன்பு—மரியாதை—அதிகாரம் முதலியவைகள் பொருத்தப்பட்டிருப்பதையே அவர்களின் ராஜபதவியில் ஒரு தனிச் சிறப்பாகக் காண்கிறோம்!

தர்மத்தையும்—பலத்தையும் இணைப்பது முரண்பட்ட செய்கையல்ல என்பதை நாம் தர்ம சாஸ்திரங்களிலிருந்து தெரிந்துகொள்ளுகிறோம். இந்த இணை பாட்டு அழகை, நாம் மகாபாரதம் முழுவதிலும் சிறப்பாகக் காண முடிகின்றது. அதனுடையவும், இதர இதிகாசங்களுடையவும் **மகாரகசியம்** இதுவே யாகும். இந்த மகா ரகசியத்தைத் தான் மாக்கியவெல்லி மேற்கு நாடுகளில் பரப்புவதற்குத் தம்மையே அர்ப்பணம் செய்துகொண்டார். இதுவேதான் உலகச் சரித்திரத்தின் சிறந்ததும், திருப்தியளிப்பதுமான விஷயமாகும்!

BOOKS OF REFERENCE

1. A History of Political Theories—*By W. A. Dunntng.*
2. Plato to Machiavelli—*By M. B. Foster.*
3. History of Political Thought—*By R. G. Gettell.*
4. Sociel and Political Ideas of some Great Thinkers of the Renaissance and the Reformation
   —*By F. J. C. Hearnshaw.*
5. Reflections on the Revolution of our Times.
   —*By H. J. Laski.*
6. The Dangers of Obedience and other essays.
   —*By H. J. Laski.*
7. Essays, Historical and Literary—*By Lord Macaulay*
8. The Prince—*By Niccolo Machiavelli* (*Translated from Italian by Ninian Hill Thomson*)
9. The Modern State—*By R. M. MacIvec.*
10. Leviathan and the People—*By R. M. MacIver.*
11. Machiavelli and his times—*By D. E. Muir.*
12. The Sociel and Political Doctrines of Contemporary Europe—*By M. Oskashott.*
13. Power—*By B. Russel.*
14. A History of Political Theory—*By G. H. Sabine.*
15. The Life and Times of Niccolo Machiavelli. (Volumes 1 & 2)—*By F. Villari.*
16. Niccolo Machiavelli—*By L. Arthur Bird.*
17. Locke's Theory of the State—*By Frederic Pollock.*

சாணக்கியனின் ஆட்சிக் கலை

ஆளும் திறம் அல்லது ஆட்சிக் கலை என்பது நேற்று இன்று தோன்றியதல்ல. மனிதன் நாகரிகமடைந்து கூட்டு வாழ்க்கை என்று நடத்த ஆரம்பித்தானோ அன்று முதல் இது தோன்றிப் பலவாறாகக் கால அளவில் மாறுதல் அடைந்து வந்திருக்கிறது. நம் நாட்டில் சாணக்கியரின் ஆட்சி முறை சிறப்புடன் விளங்கி வந்திருக்கிறது. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அவர் இதை வகுத்துள்ளார். சந்திரகுப்த மௌரியன் பலமானதொரு சாம்ராஜ்யத்தையும், கௌடில்யரின் உதவியால் நிர்மாணிக்க முடிந்தது.

இந்நூலை இயற்றியவர் அதற்கு ஆட்சிக் கலை என்று மகுடமிட்டிருப்பது மிகப் பொருத்தமாகும். இதனை வாசிப்பவர்கள் எல்லாக் காலத்திற்கும் பொருந்தக்கூடிய சில கருத்துக்களையும், அவர் காலத்திற்கு மட்டும் பொருந்திய சில விஷயங்களையும் கௌடில்யர் தெரிவித்துள்ளார் என்பதை மறந்துவிடக் கூடாது.

கௌடில்யரின் 'அர்த்த சாஸ்திர'த்தை ஆராய்ந்து ஆசிரியர் 12 அத்தியாயங்களை வகுத்துள்ளார். 'கௌடில்யரும் அவரது காலமும்' என்ற அத்தியாயம் முதலாக 'கௌடில்யர் வாழ்க்கைக் குறிப்பு' ஈறாகக் காணப்படும் அத்தியாயங்களில் பல அரிய விஷயங்கள் விளக்கப்பட்டுள்ளன.

முதல் அத்தியாயத்தில் அவரது காலத்திய சரித்திர அடிப்படை, மற்றும் ஆட்சி முறைகள் கூறப்படுகின்றன. ராஜாங்கத்தின் மூல பலம் யாது என்பதுபற்றி இரண்டாவது அத்தியாயத்தில் ஆசிரியர் தெளிவாகக் கூறி சாணக்கியரின் கருத்துக்களை அழகாகத் தெரிவிக்கிறார்,

ராஜாங்கத்தின் இயல்பு குறித்து மூன்றாவது அத்தியாயம் விசாரணை செய்கிறது. ராஜ்யாதிகாரத்தின் அம்சங்கள் நான்காவது அத்தியாயத்தில் விளக்கமுறுகின்றன.

ராஜாங்கத்தின் உள்நாட்டு நிர்வாகம், பிற நாடுடன் உறவு கொள்கைகள், ராஜாங்கத்தின் லட்சியம், ராஜாங்கமும் மதமும், ராஜாங்கமும் ஒழுக்கமும் முதலிய அத்தியாயங்களில் கௌடில்யரின் ராஜதந்திரத்தை எல்லோரும் உணரும்படியாக ஆசிரியர் தெளிவாக்கியுள்ளார்.

11-வது அத்தியாயத்தில் கௌடில்யரைக் கண்டிப்பவர்—ஆதரிப்பவரின் சில முக்கிய வாதங்களை நமக்கு ஆசிரியர் எடுத்துரைத்து விருப்பு வெறுப்பின்றி இந்த நூலைச் சிறந்த முறையில் எழுதியுள்ளார். 'அர்த்த சாஸ்திரம்' பற்றித் தமிழில் எளிய இனிய நடையில் வெளி வந்திருக்கும் இந்நூலுக்கு நல்ல வரவேற்பு இருக்குமென்பதில் ஐயமில்லை.

—*தினமணி*, 1-1-'56.

1-X-64-L

Jacket Printed at Shanti Press, Madras - 1